பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த

ஈழத்துத் தமிழ்ப் புலவர்

உடுப்பிட்டி

# அ. சிவசம்புப்புலவர்

வரலாறும்

அவரது ஆக்கங்களும்


ந.நகுலசிகாமணி



வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம்

கனடா

2010

பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த

ஈழத்துத் தமிழ்ப் புலவர்

உடுப்பிட்டி

# அ.சிவசம்புப்புலவர்

வரலாறும்

அவரது ஆக்கங்களும்

ந.நகுலசிகாமணி

வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம்

கனடா

2010

நூல் - ஈழத்துப் புலவர் உடுப்பிட்டி
அ.சிவசம்புபுலவர்

தொகுப்பாசிரியர் - வல்வை ந.நகுலசிகாமணி

முதலாம் பதிப்பு - 2010

கணினி பொறி அச்சு - உமா.நகுலசிகாமணி

பதிப்புரிமை - ஆசிரியருக்கு

வெளியீடு - வல்வை வரலாற்று ஆவணக்
காப்பகம் கனடா

அச்சுப் பதிவு - விவேகா அச்சகம், கனடா

Title - Elaththu pulavar Uduppiddy
A.Sivasampu Pulavar.

Author - Valvai N.Nagulasigamany

Edition - First Edition 2010

Type setting - Uma Nagulasigamany

Cope Right - Author

Publishers - Valvai Historical Document Conservation
Center Canada
www.vvthistory.com

Printer - Viveka Printers

# சமர்ப்பணம்

ஈழத்தில் பிறந்து தாய் தமிழகத்தின் இலக்கிய வரலாற்றிலும் தனக்கென தனிப்புகழை பெற்றுக்கொண்ட உடுப்பிட்டி அ.சிவசம்புப்புலவரின் பெருமையுடன் இப்பனுவலை தமிழ்த்தாயின் கரங்களில் தவழவிடுவதை பெரும்பாக்கியமாக எண்ணி மகிழ்ச்சியடைகின்றோம்.

# பொருளடக்கம்


அணிந்துரை

வாழ்த்துரை

பதிப்புரை

1. உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் வரலாறு.
2. பருத்தித்துறை கலித்துறை
3. கந்தவனநாதர் ஆசிரிய விருத்தம்.
4. வல்வைக் கலித்துறை.
5. இராமநாதபுரம் பாற்கரசேதுபதி, கல்லாடக்கலித்துறை.
6. பருத்தித்துறைப் புலோலி நால்வர் நான்மணிமாலை.
7. வல்லை வாளிச் சித்திவிநாயகர் ஊஞ்சல் எச்சரீக்கை பராக்கு, லாலி, மங்களம் என்பன.
8. ஆறுமுகநாவலர் சிதம்பர நடராஜர் நிழலை அடைந்த போது சொல்லப்பட்ட செய்யுட்கள்.
9. 1876 பருத்தித்துறை புலோலி சைவப்பிரகாச வித்தியா சாலையில் பிள்ளைகளைப் பரீட்ஷிக்கப் போயிருந்த போது.


~~~~~~~~
~~~~~~~~



# அணிந்துரை

கார்த்திகேசு சிவத்தம்பி
M.A (இலங்கை) Ph.D (பர்மிங்காம்)
கௌரவ தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்

1970 முதல் ஏறத்தாழ 20ம் நூற்றாண்டின் இறுதிவரை தமிழ் செயற்பாட்டாளர்கள் தொடர்பாக நிலவிய பயம் காரணமாக நாட்டை விட்டுச் செல்வது உசிதமாக லாம் என்ற நிலையில் வடஅமெரிக்கா உபகண்டத்தில் வட மாநிலங்களில் ஒன்றாகிய கனடாவுக்குச் சென்று குடியேறி யவர்களில் ஒருவர் நகுலசிகாமணி அவர்கள். **'தூர இருந்தால் நீள உறவு'** என்ற ஒரு பழமொழி காட்டும் உணர் விருக் கத்திற்கு மேலே சென்று றொரன்றோ தரும் வாழ்க்கை வசதிகளைப் பயன்படுத்தி இலங்கையில் தமிழ் பிரதேசங்கள் பற்றியும் தன் சொந்தக் கிராமம் பற்றியும் இலங்கைத் தமிழ்ப் புலவர்கள் பற்றியும் மிகுந்த புலமை யார்வமும் காட்டுபவர் நகுலசிகாமணி.

நகுலசிகாமணியின் குடும்பம் எனது மனைவியாருடைய குடும்பத்திற்கு நெருங்கியஉறவு கொண்டவர். நகுலசிகாமணியின் தகப்பனாரை திரு.நடனசிகாமணியை எனது மனைவியாரும் அவரது சகோதரர்களும் பெரியையா என அழைப்பார்கள். நகுலசிகாமணியின் தமையனார் திரு.யோகசிகாமணி மருத்துவ ஆராய்ச்சி உதவியாளராக வாழ்க்கை தொடங்கி உயர் நீதிபதியாக உயர்ந்தவர். முழுப் பொழிவும் வெளிவர முன்பே காலமானவர். திரு. நடனசிகாமணி அவர்கள் வல்வையின் மக்கட் பொது நிலை வாழ்க்கையில் முக்கிய இடம் பெற்றவர் ஆவர். இவர் வல்வைப் பட்டினசபைத் தலைவராக இருந்தவர். நகுல சிகாமணியின் சகோதரியைத் திருமணம் செய்த வல்வை ந.அனந்தராஜ் நாடறிந்த எழுத்தாளர். செல்வச்சந்நிதி திட்டங்களில் மதி வழக்குரைஞராக விளங்குபவர்.

நகுலசிகாமணி வல்வை வயித்தியலிங்கபுலவரின் வரலாற்றை மீட்டெழுதியது மாத்திரமல்லாமல் அவரது நூல்களை மீள்பிரசுரம் செய்தவர். இவையாவும் கைம்மாறு கருதாத தமிழ்ப் பணிகளாகும். நகுலசிகாமணியின் இந்நூல் உடுப்பிட்டி அ. சிவசம்புப்புலவரின் வரலாற்றைக் கூறுகின்றது. உடுப்பிட்டி சிவசம்புப்புலவரின் வரலாறு கவனிக்கப்பட வேண்டிய அளவுக்கு கவனிக்கப்படாது விட்டு விடப்பட்டது என்ற ஒரு மனக்குறை வடமராட்சி பாரம் பரியத்தில் நிலையூன்றிப்போன ஒரு கருத்தாகும். அவரது காலத்தில் நிலவிய பிரதேச வாதமும் ஒரு காரணமாகலாம். சிவசம்புப்புலவரின் வரலாறு ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே மிக முக்கியமான ஒன்றாகும். அக்காலத்து

யாழ்ப்பாணத்துப் புலவர் பலர் போன்று இவரும் தமிழகம் சென்று சேதுபதி மகாராஜாக்களின் ஆசியையும் கௌரவத் தையும் பெற்று வந்தவர் என்பர். இவருடைய நூல்கள் பல இன்று கிடைப்பவை மிகக் குறைவு. கந்தபுராணத்தின் வள்ளியம்மை திருமணப்படலத் திற்கு இவர் எழுதிய உரை இன்றும் நாவலர் பதிப்பத்தாலே போற்றப்பட்டு வருகின்றது.

சிவசம்புப்புலவரின் முக்கியத்துவம் அவரது பரம் பரையின் கீர்த்தியிலே தெரியவருகிறது எனலாம். வல்வை இயற்றமிழ் போதகாசிரியர் வயித்தியலிங்கப்புலவர் இவரு டைய மாணவர். புலோலி முத்துக்குமாரசாமி குருக்கள் இவருடைய மாணவர். பேராசிரியர் கணபதிப்பிள்ளை முத்துக்குமாரசாமிக் குருக்களின் மாணவர்.

1960களின் நவீன தமிழ் இலக்கிய விமசர்கர் களுக்கு தமிழ் மரபு தெரியாதென்னும் அவர்களின் ஆசிரியர் களான இலங்கைப் பல்கலைக்கழக தமிழ் அறிஞர்களே சுத்தமான சைவமும் தமிழும் பாரம்பரியத்தில் வராதவர்கள் என்னும் இலைமறைகாயான குற்றச்சாட்டு நிலவியது. போராட்டம் சம்பந்தமாக பேராசிரியர் கணபதிப்பிள்ளை உரையாடிக் கொண்டிருக்கும்போது அவர் கூறியது இப் பொழுதும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

**உங்களுடைய இலக்கிய பின்புலம் பற்றிக் கேட்டார் களானால் நீங்கள் என் வழியாக உடுப்பிட்டி சிவசம்புப்புல வரின்பரம்பரை என்று சொல்லுங்கோடா என்று சொன்னார்.**

அண்மைக்காலத்தில் சிவசம்புப்புலவரின் நூல்களை மீள் பிரசுரம் செய்வதில் திருவாளர் நீலகண்டன் என்னும் அவரது வழித்தோன்றல்களில் ஒருவர்(பூட்டன்) மிக ஆர்வத் துடன் காணப்பட்ட அளவுக்கு அறுவடை காணப்பட்ட தகாத் தெரியவில்லை. ஆனால் திரு.நகுலசிகாமணியின் முயற்சியில் அந்த அறுவடையைக் காண்கின்றோம் இதற் காக பெரிதும் வாழ்த்துகின்றேன். இவ்வாறு வாழ்த்தும்போது என்மனதில் தவிர்க்க முடியாது மேற்கிளம்பும் வினா வொன் றைப் பதிவு செய்து கொள்ள விளைகின்றேன். இன்றைய உயர் கல்வி நிலையிலும் உயர் ஆய்வு நிலையிலும் ஈழத்துப் புலவர் வரலாறு எதற்குத் தேவைப்படுகிறது என்பது பற்றிய தெளிவு நமக்கு இல்லை. ஆழ்நிலைப்பட்ட தமிழ் பாரம்பரிய கையளிப்பிற்கு மேலாக ஒட்டுமொத்த ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் இப்பெரும் புலவர்கள் பெறும் இடம் யாது என்பது பற்றி ஆராயப்படவில்லை.


இதனை இன்னொரு முறையில் கூறினால் உடுப் பிட்டி சிவசம்புப்புலவர் வரலாற்றை பேசப்படாமல் போனால் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் நாம் எதனை இழக்கின்றோம் என நோக்குதல் அவசியமாகும். அவ்வாறு நோக்கும்போது சிவசம்புப் புலவரின் வாழ்க்கை வரலாற்றை தரவுக்களஞ்சியமா பார்க்காமல் வரலாற்றுத் தொடர்ச்சிக்கு எவ்வாறு உதவுகின்றது என நோக்குவோம்.

**யாழ்ப்பாணத்து மரபில் கந்தபுராண உரைகள் மிகுதி யாக காணப்படுவதற்கான காரணம் யாது? யாழ்ப்பாணத்**


**தின் புராண படல மரபுக்கும் இதற்கு முன்னுள்ள உறவுயாது? இப்படிப் பார்க்கும்போதுதான் உடுப்பிட்டி சிவசம்புப் புலவரை தெரிந்து கொள்வதற்கு மேலாகச்சென்று அவரை நன்கு அறிந்து கொள்ள வேண்டிய தேவை ஏற்படு கின்றது** நகுலசிகாமணி இப்பொழுது நமக்குத் தந்த இப்புலமைக் கொடை நமது தமிழ் இலக்கிய அறிஞர்களை இத்துறையில் ஊக்குவிக்க வேண்டும். நகுலசிகாமணியின் தமிழ் பணியைப் போற்றுகிறேன். அவர் பணி தொடர்க வெல்க என்று வேண்டுகிறேன்.

நன்றி

28 ~03 ~2010
2/7RAMSGATE தொடர்மாடி
58,37வது ஒழுங்கைவெள்ளவத்தை~6, கொழும்பு.



# வாழ்த்துரை



நம்மவர்கள் மத்தியில் தோன்றிய தமிழ்ச் சான்றோர்களின் வரலாற்றையோ, அவர்கள் எமக்கு விட்டுச் சென்ற கிடைத்தற்கரிய பொக்கிஷமான நூல் களையோ, ஏட்டு பிரதிகளையோ பாதுகாத்து மீள்பிரசுரம் செய்ய விரும்புபவர்கள் அரிதிலும் அரிது. நம் முன்னோர்கள் எமது தாய்மொழிக்கு ஆற்றிய தமிழ் இலக்கியப் படைப் புகளை, எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாத்து ஒப்ப டைக்கும் உயர்ந்த இலட்சிய நோக்குடன் உழைப் பவர்கள் எங்கள் தமிழீழ தாயக மண்ணில் இல்லாமல் இல்லை.

இதற்கு முன் உதாரணமாக வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம் சார்ந்த திரு.திருமதி .நகுலசிகாமணி அவர்கள் இருவரைக் கூறலாம்.


நமது உடுப்பிட்டி தேர்தல் தொகுதியில் அடங் கிய வல்வையைச்சேர்ந்த திரு.நகுலசிகாமணி அவர்களின் தொடர்பு உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல்லூரி பழைய மாணவர்சங்கம் நடத்தும் வானவில் (2002) என்னும் கலை விழா மூலமே எனக்குக்கிடைத்தது. அன்று வெளிவந்த

**"வானவில்"** மலரில் எம்மவர் உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் வரலாறு பற்றி நகுலசிகாமணி சிறு கட்டுரை எழுதியிருந்தார். அதுபற்றி அவருடன் உரையாடியபோது புலவரின் ஆக்கங்களை வெளிக்கொணர வேண்டும் என என்னிடம் கூறியிருந்தார்.

சில வருடங்களின் பின்பு என்னுடன் தொடர்பு கொண்டபோது சிவசம்புப்புலவரின் தனித்தனியாக வந்த ஆக்கங்களையும், இதுவரை வெளிவராத கிடைத்தவற்றையும் ஒன்று திரட்டி, **புலவரது 100வது சிரார்த்த தினமான 2010ல் வெளியிட இருக்கும் எண்ணத்தை அறியத்தந்தார்.** அந்த நூலை பார்வையிட்ட நான் மிகுந்த சந்தோஷத்துடன் அவர்களை வாழ்த்தியிருந்தேன். இந்த நூல் மூலம் அவர்கள் எமது **உடுப்பிட்டி நகரில் வாழ்ந்த பெரும்புலவர் அ.சிவசம்புப் புலவரின் பெருமைகளை வெளிக் கொணர்ந்ததோடு தமிழ் கூறும் நல்லுலகத்திற்கும் நற்பணியாற்றியுள்ளார்.**

இவர்தம் தமிழ்ப்பணி என்றும் சிறந்து தொடர வேண்டுமென வாழ்த்தி வணங்குவாம்

நன்றி ! வணக்கம் !



"கருணைஎம்பதி"
மு.சு.பேரின்பநாயகம்

# பதிப்புரை



ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் உடுப்பிட்டி சிவசம்புப்புலவரின் பங்களிப்பு பாரியதாகும். எப்பொழுதும் கற்றோர்கள் நிறைந்த யாழ்ப்பாணத்தில் கவிபாடிக் குவிக்கும் புலவர்களிடையே சிவசம்புப்புலவர் போல் கவிபாடியவர்கள் யாருமில்லை. அறுபதிற்கு மேற்பட்ட பிரபந்தங்களில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட பாடல்களை பாடிய புலவர் இவர் ஒருவரேயாவார். குறிக்கப்பட்ட பிரபந்தங்களினால் கம்பராமாயணம் யாத்த கம்பர் போலல்லாது எடுத்த எடுப்பில் எப்பொருளையும் பாடிய இவரின் கவித்துவம் உயர்ந்தது எனலாம்.

தமிழ் உரைநடை வல்லுனரான ஆறுமுகநாவலரை பின்தொடர்ந்து நாவலரின் உரைநடைகளின் சாரத்தை சபை யோருக்கு எடுத்துரைத்து வருவார். அவ்வாறான ஒருநாளில் புலோலியில் நாவலர் பிரசங்கம் செய்து கொண்டிருக்கையில் வெளியே மழை பொழிந்தது. இறுதியில் நாவலரின் உரைக்கு விளக்கம் தரவந்த சிவசம்புப்புலவர்

**அன்பர் கண்ணீர் மழையும் சிவ**
**னார் மெய்யருள் மழையும்**
**மன்பிரபந்த மழையும்**
**பிரசங்க மா மழையும்**
**கொன் புனை நீலப் புயலின்**

**மழையும் கொடை மழையும்**
**இன்பொடு மல்கப் புலோலி மெய்**
**வாழ்வினி லேறியதே.**

எனப்பாடிய பாடலில் மழை, மழையென பலவித மழைகளை உவமித்து நாவலரின் உரைக்கு பொருள் கூறினார். இப்பாட்டைக் கேட்ட நாவலர் அவர்கள் இவரை **"கம்பனுக்குப் பின் சம்பனல்லவோ"** எனப் பாடினாராம். பாடல்களிற்கு உரை எழுதும் புலமையாளர்களிடையே உரை நடைக்கு பாட்டால் பொருள் கூறும் இலகு நடை யும் கவியாக்கும் வரகவியாகவே இறுதிவரை வாழ்ந்தவர்.

ஈழத்தின் இலக்கிய வளர்ச்சிக்கு உரமிட்ட பலரை இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் முகம் காட்டிய **"செந் தமிழ் வளர்த்த செம்மல்கள்"**நூலின் ஆசிரியர் **குல.சபா நாதன்** இயன்றவரை இவரைப் பற்றிய விபரங்களை தந்து கட்டுரையாக்கியிருந்தார். சிவசம்புப்புலவரின் பெருமைக்கு அது சான்றாயிற்று.

இதுவரை பதிவிற்கொள்ளப்பட்டிருக்கும் ஈழத்துப் புலவர் சரித்திரத்தில் ஈழத்துப் பூதந்தேவனார் சி.வை. தாமோதரம்பிள்ளை, சிவசம்புப்புலவர், பேராசிரியரும் சமூக விஞ்ஞானியுமான கார்த்திகேசு சிவத்தம்பி, கைலாசபதி என்போர் தமிழகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட புலமையாளர்கள் ஆவர் இந்நிலையில் இன்றைக்கு **100 வருடங்களிற்கு** முன் மறைந்த சிவசம்புப்புலவரின் வரலாறோ அவரது படைப்புக்களோ சரியான முறையில் வெளிக் கொணரப்படவில்லை. இந்நிலையிலேயே இந்நூல் வெளிவருகின்றது.

**உடுப்பிட்டி வல்வெட்டித்துறை அருகருகே அமைந் திருக்கும் இரண்டு கிராமங்கள். கல்விப் புலமையில் ஒன்றுடன் ஒன்று இணைந்து இவைவளர்ச்சி கண்டவை.** வல்வெட்டித்துறையின் புகழ்வாய்ந்த இயற்றமிழ் போதகா

சிரியர் வயித்தியலிங்கபிள்ளை, பொன்னம்பலம் உபாத்தி யாயர் என்போர் சிவசம்புப்புலவரின் மாணாக்கராவார்.

**இதனைவிட சிவசம்புப்புலவர் பாடிய வல்வைக் கலித்துறை, கந்தசாமி பிரபாவபாமாலை இவைகளுடன் வல்வெட்டித்தறை வைத்தீஸ்வரன்கோயில் தந்த சமுகத் தலைவர் வெங்கடாசலம்பிள்ளையின் "சமரகவி" என இன்னோரன்ன விபரங்களை யாத்தவர். வல்வெட்டித் துறை வரலாற்றில் இவையெல்லாம் இன்று சரித்திரச் சான்றாக விளங்குகின்றன.**

உடுப்பிட்டி அமெரிக்கமிசன் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தால் கனடாவில் நடத்தப் பெறும் விழாவின் நிகழ்ச்சி நிரல் அடங்கிய "**வானவில்' 2002**" கையேட்டில் உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் பற்றி நான் எழுதிய சிறு குறிப்பே இப்புத்தகமாக இன்று பரிணாமம் அடைந்துள்ளது. பெரும் புலமைகொண்ட சிவசம்புப் புலவ ரின் படைப்புகளும் அவரது வரலாறும் இன்னும் தேடு தற்குரியது. அப்பணியினை ஆவணக்காப்கம் தொடர்ந்து மேற்கொள்ளும். அவரது **100வது சிரார்த்ததினம் ஏகும்** இவ்வாண்டில் இவ் **"உடுப்பிட்டி சிவசம்புப் புலவர்"** என் னும் நூல் ஆவணக் காப்பகத்தால் வெளி வருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்..

இந்நூலாக்கப் பணியில் உதவிபுரிந்தோரை நன்றி யறிதலுடன் நினைவு கொள்கின்றேன். இந்நூலுக்குப் பொருத்தமாக பேராசிரியர் எனது உறவினரான **கார்த்தி கேசு சிவத்தம்பி** அண்ணா அவர்கள் செம்மொழி மாநாட்டுக்குச் செல்லும் பலவேலை பளுவின் மத்தியில் அணிந்துரை நல்கியதற்கு எமது நன்றிகள் பல. உடுப்பிட் டியில் வாழும் புலவரின் பூட்டன் **திரு கா.நீலகண்டன்** ஆசிரியர் அவர்கள் அச்சேறாத புலவரின் ஆக்கங்கள் சிலவற்றை கனடாவில் வாழும் மகள் **செல்வநேசன்**

**தாரணி** மூலம் நாம் கேட்டதற் கிணங்க தனது சுகயீன நிலையிலும் தேடி அனுப்பியிருந்தார். கனடாவில் வாழும் அவரது பூட்டன் முறையானவரும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி கனடா பழைய மாணவர் சங்க மலர்குழு ஆசிரியராகப் பணியாற்றுப வருமான **சுப்பையா பேரின்ப நாயகம்** அவர்கள் **நாம்** நூலாக்கப் பணியில் ஈடுபட் டிருந்தபோது பாராட்டியதோடு நூலுக்கு வாழ்த்துரையும் வழங்கியிருந்தார். **அத்துடன் இந்த நூலை அச்சுப்பதிப்பு செய்யவதற்குரிய பொருள் உதவி முழுவதையும் தானே மனமுவந்து ஏற்றுக் கொண்டார்.** அண்ணன் திரு.பேரின் பநாயகம் செய்யும்பணி வரலாற்று காப்பகம் செய்யும் சிறுபணியை ஊக்குவிக்கின்றது .அவருக்கும் நன்றிகள் பல. இந்நூலைப் பார்வையிட்டு திருத்தங்கள் செய்து உதவிய தம்பி **திரு.தமிழ்நீ பொன். சிவகுமாரன்** அவர் களுக்கும் நன்றிகள்.

**அன்புடன்**
**வல்வை. ந .நகுலசிகாமணி**

**02 – Jun 2 2010**

# உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர்
# 1829 ~ 1910

~~~~ ~~~~ ~~~~ ~~~~

ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சியில் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவருக்குக் கணிசமான பங்குண்டு. இவரின் பங்களிப்பு சரியாக ஆராயப்படாமலும், அறியப்படாமலும் இருக்கிறது. 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இருப தாம் நூற்றாண்டின் முதல் தசாப்தம்வரை வாழ்ந்த சிவசம்பு புலவரின் ஆற்றலும் ஆளுமையும் ஈழத்து தமிழ்க்கல்வியி லும், இலக்கியத்திலும் மற்றும் ஆய்வுத்துறைகளிலும் இன் றைய இளந்தலைமுறையினர் முழுமையாக அறியும் வாய்ப் புக்கிட்டவில்லை எனலாம்.

யாழ்ப்பாணத்திலே தமிழ்புலமையிற் தனக்கென ஓர் உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ள வடமராட்சியின் வளஞ் செறிந்த கிராமங்களில் உடுப்பிட்டியும் ஒன்று. சிவசம்புப் புலவரின் தந்தையார் உடுப்பிட்டி அருளம்பலம் முதலியார். இவர் கல்விச் செல்வமும் பொருட்செல்வமும் மிக்கவராய் விளங்கினார். அவர்காலத்தில் வாழ்ந்த ஆசுகவி வல் வெட்டி குமாரசுவாமி முதலியார் என்பார் “அருளம்பலக் கோவை” என்னும் பிரபந்தம்பாடி அவரைப் போற்றியுள் ளார். மேற்படி குமாரசுவாமி முதலியார், அகராதி தந்த அறிஞரான வல்வெட்டித்துறை வைமன் கதிரவேற்பிள்ளை
~~~~

யின் தந்தையார் என்பது குறிப்பிடத்தக்கது. குமாரசுவாமி முதலியாரின் சிறப்பை அவர் பாடிய அருளம்பலக் கோவை யிலிருந்து கீழே தரப்படும் செய்யுள் புலப்படுத்தி நிற்கிறது.

**“திங்கா ளுடலகந் தேய்வுற மாய்வுறச் சித்திரைப் போற்**
**தங்கா மலந்தர மார்க்கந் தவம்புரிந் தாவுந்தமிழ்**
**மங்கா துடுவை வருமரு ளம்பல மன்னன்வரைக்**
**கொங்கார் குழலி முகம்போன் மெனநினைக் கூறாதே”**

இவ்வாறு முதலியாராற் பாடப்பெற்ற புகழுக்குரியவரான அருளம்பலத்தாருக்கு, அவரது இரண்டாந்தாரமான, கதிராசிப் பிள்ளை என்பவரிடம் 1829இல் பிறந்தவரே சிவசம்புப் புலவராவார். இவர்கள் மூன்று பிள்ளைகள். மூத்தவர் பெண். அவர் கமலம் என்பவர். அடுத்து பிறந்தவர் சிவசம்பு, இளையவர் கணபதிப்பிள்ளை. சின்னப்பிள்ளை. இவர்கள் பிறந்து வளர்ந்தவளவு இந்த செல்லப்பிள்ளையின் பெயர் கொண்டு வழங்கியது. இன்று அவர் வாழ்ந்த இல்லம் “புலவர்இல்லம்” எனப்பெயர் கொண்டு அழைக்கப் படுகின்றது.

## மரபுவழிக் கல்வி

சிவசம்புப் புலவரின் தந்தை அருளம்பல முதலியார் உடுப்பிட்டியில் பள்ளிக்கூடம் நிறுவியர். நாவலர் யாழ்ப்பாணத்தில் பாடசாலை நிறுவுவதற்கு முன்னரே உடுப்பிட்டியில் சைவப்பாடசாலையொன்று தருமப்பள்ளிக்கூடம் என்ற பெய

ரில் நிறுவப்பட்டிருந்தது. இப்பாடசாலை பற்றிய விபரங் களை ஆமுகநாவலருக்கு பத்தொன்பது வயதாயிருக்கும் பொழுது வெளிவந்த "உதயதாரகை" பத்திரிகையிலும் கவிமணி மு. இராமலிங்கம் அவர்கள் வெளியிட்ட "நாவலருக்கு முந்திய கல்வி முயற்சிகள்" என்ற நூலிலும் விரிவாக காணலாம். உரிய பருவத்தே சிவசம்பு புலவர் வித்தியாரம்பஞ் செய்யப் பெற்றார். வித்தியாரம்பம் பொலி கண்டி கந்தவனக் கடவை ஆலயத்தில் தந்தையாராற் செய்யப்பட்டது. ஆரம்பக்கல்வி தந்தையாரால் ஆரம்பிக் கப்பட்ட சைவ பாடசாலையிலேயே தொடங்கியது. பிள் ளையாக இருந்த சிவசம்புப்புலவரின் சாதகத்தைக் கணித்த சோதிடர்கள் இவன் பெரும் புலவனாய்த் தமிழ் கூறும் உலகெலாம் நல்ல பெயரெடுப்பான் எனக் கூறினர். இவற்றைக் கேட்டு மகிழ்ந்த அருளம்பலம் தம் மைந்தனை பெரிய புலவர்களிடம் ஒப்படைத்து உருவாக்கத் திட்டமிட்டு பிள்ளையையும் தாயையும் இருபாலையிலுள்ள தமது வள வில் குடியிருத்தினார். இளைஞன் சிவசம்பு நல்லூர் சரவ ணமுத்துப் புலவரிடத்தும் பின்பு அவர் மாணாக்கர் சம்பந்தப் புலவரிடத்தும் முறையாகக்கற்று வந்தார். இவருடன் ஏழுவயது மூத்த நாவலரும் அங்கே ஒன்றாகக் கற்றார்கள். நாவலர் பிறந்த ஆண்டு 1822, சிவசம்புப்புலவர் பிறந்த ஆண்டு 1829. இக்காலத்தில் இருவரும் ஒருவரை யொரு வர் நன்கு அளந்து எடைபோட்டுக்கொண்டனர் போலும். சம்பந்தப் புலவரும், சரவணமுத்துப் புலவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், மைத்துனர்கள். கல்லடி வேலுப்பிள்ளையின் "யாழ்ப்பாண வைபவகௌமுதி"(1918 பதிப்பித்த பக்கம் 198ல்) இவ்விபரத்தைப் பார்க்கலாம்.

மேற்படி இருவரிடமும் மாத்திரம் பன்னிரண்டு வருடங்கள் உயர்ந்த இலக்கண இலக்கியங்களையும் கற்றார். நல்லூரால் திரும்பிய சிவசம்புப்புலவர், புராணபடனம் செய்து கொண்டும் பல்வேறு தரத்தில் இலக்கிய, இலக்கண, புராணபடன வகுப்புக்கள் நடத்திக்கொண்டும் வந்தார். அக்காலத்தில் குடாநாட்டின் திண்ணைப் பள்ளிகளில் நடைமுறையிலிருந்த சாதி இறுக்கம் பாராது எவர்க்கும் கற்பித்தார். கற்பித்தலையே சீவனோபாயமாகக் கொண்டு பலருக்கும் கற்பித்தார்.

## நேரடி மாணவர்கள்

புலவர் அவர்களிடம் முறையாக பாடம் கேட்டவர்கள் வரிசை மிகப்பெரியது. உடுப்பிட்டி சிவசம்புப்புலவரிடம் பாடங் கேட்டவர்கள் பலர். நீண்டநாட்கள் அவரிடம் இலக்கணம், இலக்கியம், புராணபடனம், யாப்பு, அணி, நிகண்டு, முதலிய பலவற்றையும் தொடர்ந்து கற்று புலவரின் நேரடி மாணவர்களாகவும், தொண்டர்களாகவும் பின்வரு வோர் திகழ்ந்தனர் என அறியமுடிகின்றது.

| | |
|---|---|
| கணபதிப்பிள்ளை | (புலோலி) |
| குமாரசாமிப்புலவர் | (புலோலி) |
| முருகேசு பண்டிதர் | (சுன்னாகம்) |

| | |
|---|---|
| வைத்தியலிங்கம்பிள்ளை | (வல்வை) |
| தில்லைநாத நாவலர் | (புலோலி) |
| அ.வேன் மயில்வாகனப் புலவர் | (அச்சுவேலி) |
| நா.பொன்னம்பலம் உபாத்தியாயர் | (வல்வை) |
| முத்துக்குமாரசாமிக் குருக்கள் | (தும்பளை) |
| வி.அருணாசலம் உபாத்தியார் | (வல்வை) |
| நமச்சிவாயப் புலவர் | (ஆவரங்கால்) |
| சின்னத்தம்பி உபாத்தியார் | (உடுப்பிட்டி) |
| சுப்பிரமணியசாஸ்திரிகள் | (தும்பளை) |
| கனகசபாபதி குருக்கள் | (கரணவாய்) |
| ஞானப்பிரகாச தேசிகர் | (கரணவாய்) |
| திருஞானசம்பந்த தேசிகர் | (கரணவாய்) |
| ஆறுமுகம்பிள்ளை | (அல்வாய்) |
| சிதம்பரப்பிள்ளை | (பொலிகண்டி) |

வயித்திலிங்கச் செட்டியார் (மத்துவில்)

கார்த்திகேசு (கரவெட்டி)

இம்மாணவர் பரம்பரையினர் தமிழிலும் வட மொழியிலும் சிறந்த பாண்டித்தியம் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர் என்று கூறப்படுகின்றது. இம்மாணவர் பலர் உற்றுழி உதவியும் பொருள்கொடுத்தும் கற்றவர்கள் என்று அறியமுடிகின்றது. புலவர் அவர்கள் தம்மாணவர்கள் வீட்டிற்கும் சென்று வருவது வழக்கமென்று கூறப்படுகிறது. புலவரிடம் அழகான கூடார மாட்டுவண்டி ஒன்று இருந்ததாகவும், புலவர் இந்த மாட்டுவண்டியில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை கரணவாய், கரவெட்டி முதலிய இடங்களுக்குச் சென்றுவருவதும், வண்டியிலிருந்தவாறே மாணவர்களுடன் உரையாடி மீளுவதும் வழக்கம் என்றும் அறியமுடிகின்றது. இம் மாணவர்களின் தமிழ்ப்பணி தனித்தனியாக ஆராயப்பட வேண்டிய தாகும்.

## நாவலர் பாராட்டியமை

சிவசம்புப்புலவரைப் பேரும் புகழும் படைத்த பெரும் புலவர் என்பர். தமிழ் நாட்டில் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களைப்போல ஆயிரக்கணக்கான பாடல்கள் அசையாமற் பாடிக்குவித்தவர் எனப்போற்றுவர். பிறநாட்டு நாகரிகமும் மிலேச்சரின் போக்கும் மிகுந்திருந்த ஆங்கிலேயரின் காலத்திலே சுதேச மொழியான தமிழைவிரும்பிக் கற்றுப் புலமை பெற்றிருந்தவர் இவர் என்ப.

தாம் கல்விகற்ற பாரம்பரியத்தில் நாவலர் அவர் களை நன்கறிந்த சிவசம்புப்புலவர் நாவலர் சைவப் பிரசங்கஞ் செய்யுமிடங்கள் எங்கும் பின்தொடர்ந்து கேட்டு வந்தார் என்ப. அக்காலத்து வழக்கப்படி நாவலர் பிரசங் கம்கள் நிறைவேறியதும் சிவசம்புப் புலவர் அதன் சாரத்தை சபையோருக்குப் படித்துக்கூறுவார். ஒரு நாள் பருத்தித் துறை புலோலியில் பிரசங்கத்தின்போது, வெளியில் மழை பெய்த தாகவும், சிவசம்புப்புலவர் தாம் எடுத்த பிரசங் கத்தின் குறிப்போடு மழை பெய்ததையும் குறிப்பிட்டு அன் றைய சுருக்கத்தைப் பாட்டாகவே பாடினார். இவ்வாறு சிவசம்புப்புலவர் பாடியபாட்டு பலவித மழைகளை குறிக்கி றது.

**"அன்பர்கண் ணீர்மழை யுஞ்சிவ**
**னார்மெய் யருள் மழையும்**
**மன்பிர பந்த மழையும்**
**பிரசங்க மாமழையும்**
**கொன்புனை நீலப் புயலின்**
**மழையும் கொடைமழையும்**
**இன்பொடு மல்கப் புலோலிமெய்**
**வாழ்வினி லேறியதே"**

இந்தப் பாட்டைக்கேட்டு உருகிய நாவலர் அவர்கள் இவரைப் புலவரே என அழைக்க, அன்றுமுதல் எல்லோரும் இவ்வாறே கொண்டாடி அழைத்து வந்தனர்

இவ்வாறு ஆறுமுகநாவலரால் புலவர் என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்ற பெருமைக்குரியவர் இவர் என்பர். புலவரவர்கள் எட்டிக்குடி என்னும் தலத்திற்கு யாத்திரை செய்தபோது, அங்கே எட்டிக் குடிப் பிரபந்தம் பாடிக் கவியரங்கேறிய புலவராயினார் என்பதுவும் வரலாறு.

அன்று கந்தர்மடம் அம்மன் வீதியில் வாழ்ந்த மூ.ம. சின்னத்தம்பி என்பார் தாம் நடத்திய இலங்கை நேசன் பத்திரிகையில் 1880ம் ஆண்டில் வெளியிட்ட செய்தியொன்றில் புலவர்கள் இருவரினதும் நேயத்தைவியந்து, இத்தகைய நட்பு மற்றும் புலவர்களிடையேயும் நிலவுதல் வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

1879ம் ஆண்டில் ஆறுமுகநாவலர் அவர்கள் மறைந்தமை குறித்து புலவர்கள் பலரும் அவர்தம் பிரிவாற்றாமை குறித்துப் பாடியிருந்தனர். நாவலர் அவர்கள்மீது பேரன்புபூண்டிருந்த உடுப்பிட்டி சிவசம்புப்புலவரும் மனம் நொந்து பல பாடல்கள் பாடியிருந்தார். அப்பாடல்களுள் ஒன்றை அறியலாம்..

**"ஆரூர னில்லை புகலியர் கோனில்லை யப்பனில்லை**
**சீரூரு மாணிக்க வாசக னில்லைத் திசையளந்த**
**மேரூரு மாறு முகநாவலனில்லைப் பின் னிங்கியார்தான்**
**நீரூரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கும் நீர்மையரே"**

இப்பாடல் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களை வெகுவாக உருக்கிவிடவே, அவர் உடனடியாக இதனை

நயந்து, சிவசம்புப்புலவருக்குத் தாமுமொரு நயப்புப்பாடல் பாடியனுப்பினார்.

**"ஆரூர னில்லையென் காரிகை யாரிவ் வவனிதொழுப்**
**பேரூறு மாறுமுகநா வலர்பெரு மான் பெருமை**
**சீரூரு மாறு தெரித்தாய் சிவசம்பு தேசிகநிற்**
**காரூரி னேரின்றன் றோரின் சொல் வன்மை அறிந்தனனே.**

இவ்வாறு தாமோதரம்பிள்ளை அவர்களின் பாராட்டுப் பாவைப் படித்த சிவசம்புப்புலவர் மீண்டும் உணர்ச்சி வயப்பட்டுத் தாமும் தாமோதரம்பிள்ளை அவர்களைப் பல பாடல்கள் கொண்டு பாடி அவர்தம் பண்பினைப் பாராட்டிப் புகழ்ந்தார்.

**கற்றாரைக் கற்றவர் காமுறுவாரெனக் கண்ட மொழிக்**
**குற்றாயி லக்கியமாக வென் பாவையு வந்து கவி**
**சொற்றாய தென்றலைக் கண்ணதென் னன்பு தொடர்ந்து**
**கண்டேன் மற்றாரெனக்கிணைதாமோதரம்பிள்ளைமாணிக்கமே.**

**மன்னருத்யோகமும் வான்கலையாய்வும் பொன் மன்று**
**டையான்**
**பொன்னடிப் பூசையு நித்யு மெய்யும் புகழு முத**
**லின்னவெல்லாங் கொண்ட தாமோதரம்பிள்ளை யென்னும்**
**வள்ளல்**
**நென்னலி வெய்திக் கண்டேனின்றிமுக நேசத்தினே.**

அன்று நாவலர் அவர்கள் மறைந்தபோது சிவசம்புப் புலவர் அவர்கள் மனம் வருந்தியமைக்குக் காரணம் முன்பு இருந்த சமய குரவர் நால்வரும் மறைய அவர்கள் வழியில் நாவலரவர்கள் சைவம் வளர்த்தவர். நாவலர் மறைந்தபின் இனியார் சிவபிரானின் சைவத்தைப் போதிக்கும் திறமையுள் ளவர் எனக் கலங்கியமையாகும்!

சிவசம்புப்புலவர் அறுபதுக்கு மேற்பட்ட பிரபந்தங்க ளில் மூவாயிரத்திற்கும் அதிகமான செந்தமிழ்ப் பாடல்களைப் பாடிக்குவித்தவர். இவர் ஈழத் திருநாட்டில் மட்டுமன்றி சங்கம் நிலவிய தமிழ் நாட்டிலேயும் இணையற்ற புலவரெனப் பெயரெடுத்தவர். அங்கே இவர் எத்திசையும் புகழ்மணக்க, இராமநாதபுரம் பாஸ்கர சேதுபதி அவர்கள் மீதும் கவிபாடிப் பொன்னும் பொருளும் இன்னும் பலவும் பரிசாகப் பெற்றுப் பெருமையடைந்தவர்.

இவர் பாஸ்கரசேதுபதிமீது கல்லாடக் கலித்துறை, நான்மணிமாலை, இரட்டைமணிமாலை என்னும் பிரபந்தங் கள் பாடியவர். "கல்லாடம் கற்றவனோடு சொல்லாடாதே" என்பது பழமொழியாகவும், இவர் கல்லாடயாப்பில் உத்தர கல்லாடம் செய்து தனிச்சிறப்புப் பெற்றவர். கல்லாடக் கவி பாடுவதற்கு வேறெவரும் துணியாத காலத்தில் இவர் அந்த யாப்பைக் கையாண்டமை இவருக்குப் பெரும் பெருமைய ளித்தது.

# உரைநூல்கள் எழுதி உயர்ந்தவர்

சிவசம்புப் புலவர் உரையாசிரியர் வரிசையையும் அலங்கரித்துப் பெருமை பெற்றவர். மறைசையந்தாதி, திரு வேரகயமகவந்தாதி, திருச்செந்தில்மகவந்தாதி, திருச்செந்தில் திருக்கந்தாதி முதலிய அந்தாதி இலக்கியங்களுக்கும் தஞ்சை வாணன் கோவைக்கும், வள்ளியம்மை திருமணப் படலம், சேதுபுராணம் முதலிய புராணங்களுக்கும் நன்னூல் விருத்தி, நேமிநாதம், சிதம்பரப்பாட்டியல், யாப்பெரும் கலக் காரிகை, முதலாய இலக்கண நூல்களுக்கும் இவர் அமைவான உரை எழுதிப் புகழ் பெற்றிருந்தார். நல்லூர் சின்னத் தம்பிப் பிள்ளை இயற்றிய மறைசையந்தாதிக்கு சிவசம்புப் புலவர் எழுதிய மகத்தான உரை தமிழ்நாட்டவராலும் பெருமளவில் மதிக்கப் பெற்று வந்தது. இப்பதிப்புரையானது யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் 1905, 1934 மற்றும் 1939ம் ஆண்டுகளில் மும்முறை வெளியிடப்பட்ட சிறப்புக்குரிய உரையாகும்.

பிறப்பிலேயே புலமை பெறாதவர் தம் முயற்சியால் புலமை பெறுவதற்கு “யாப்பெருங்கலக்காரிகை கற்றுக் கவி பாடுவதிலும் பேரிகை கொட்டிப்பிழைப்பது நன்றே”என்னும் பழ மொழி எழுந்தது. இந்நிலையில் சிவசம்புப் புலவர் யாப்பெரும் கலகக்காரிகை நூலுக்கு 1893ல் உரையெழுதிப் பெயர் பெற்றார் என்றால் இவர் புலமையை எப்படி நாம் வியப்பது! இவருடைய உரை தமிழ்நாட்டுப் புலவர் பெரு மக்களிடையே பெரிய பரபரப்பை அக்காலத்தில் உண் டாக்கியது.

"இவர்சொல்லும் பொருளும் தொடைவகைகளும் சிறப்புற வைத்துக் கவியமைக்கும் புலமையிற் சிறந்தவர்" என்பது சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரவர்களின் கணிப்பு. இவர் சேனாதிராய முதலியாருக்கு அடுத்தபடியில் புலமைப் பெருக்கமுள்ளவர் என்பது பண்டிதமணி அவர்கள் கொண்ட கருத்து. தமிழ்நாட்டவர் இவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களுக்கு அடுத்தவர் எனக் கொண்டா டியதும் உண்டு. இவ்வாறு பல்வேறு பெரும்புலவர்கள் இவரைப் பல்வேறு துறைகளில் வைத்துப் போற்றியமை ஈழ நாட்டுப் புலவர் வரிசைக்கோர் ஏற்றமளித்தவையாகும்

புலவர் அவர்கள் தமிழ்நாட்டிலே தம்கவிதைகளுள் ஒருசிலவற்றை அரங்கேற்றிய அவையிலே "செந்தமிழ்ச்சிங் கம்" எனப்புகழ் பெற்ற ரா.இராகவையங்காரும் ஒருவராயி ருந்து இவர் புலமையை வெகுவாக மெச்சினார். அப்பால் புலவர் அவர்களின் புலமை பெருக்கெடுத்துப் பாய்ந்தது, அடுத்துப் பாடியவர், பொன்னுச்சாமித்தேவர் என்னும் பெரியாரின் மைந்தன் பாண்டித்துரை தேவராவர். பாண்டித் துரை தேவர் அவர்களே தக்க புலவர்களை அரவணைத்து மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவி பெரும் பெயர் பெற்ற சிவசம்புப் புலவரும் பாண்டித்துரைதேவரைப் புகழ்ந்து இன்னொரு நான்மணிமாலையும் பாடியுள்ளார்.

புலவரவர்கள் தம் தந்தையாரின் முதல்தாரத்து மைந்தனாகிய அம்பலவாணர் என்பார் மீதும், அவர்

மைந்தர் மயில்வாகனம் என்பார் மீதும்கொண்ட ஆசை நேசங்காரணமாக அவர்கள் பரம்பரைச் சிறப்பைப் புகழ்ந்து, மயில்வாகன வம்ச வைபவம் என்னும் பிரபந்தம் பாடியதும் உண்டு. ஐம்பத்தொன்பது நெடிய விருத்தப் பாக்களான இப்பிரபந்தம் பாட்டுடைத் தலைவர்களின் பாரம்பரியத் தையும், அவர்கள் செந்தமிழ் வளர்த்த செம்மையையும், சைவம் வளர்த்த சால்பையும் போற்றுவதாகும்.

புலவரவர்கள் தமது இளமைக் காலத்தில் சரவண முத்துப்பண்டிதர், சம்பந்தப் புலவர் ஆகிய பெரியவர்களிடம் படிப்பதற்கு ஒப்படைக்கப்பெற்ற நிகழ்ச்சியையும் இப் பிரபந் தத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**அந்தியகா லத்திற்றமிழ்க் சுகத்தி யன்போ**
**லமர்ந்தசர வணமுத்துப் பண்டி தன்சீர்**
**முந்துகுணச் சம்பந்தப் புலவன் றன்னை**
**முற்றொடரன் பினிலழைத்து முகமன் பேசிச்**
**சிந்தையுறும் பெருங்களியா லிவனை யோங்குஞ்**
**செந்தமிழா சிரியயெனத் திருத்தி வைம்மின்**
**சந்ததமு முமைமறவா னென்றன் றோர்கைத்**
**தலத்திலெனை அடைக்கலமர்த் தகவி லீந்தோன்.**

அக்காலத்து இல்லறமாய நல்லறமேற்ற சைவத் தமிழ்ப் பெண்ணின் பெருமையை ஓரிடத்தில் அன்னை, அன்னையென அழகுறப் பாடிய பாடலொன்றை இன்றைய

நங்கையர் நன்கு அறிந்து இருத்தல் நன்மை பயக்குமாத லால் அதனையறிந்து கொள்ளலாம்.

**எம்மையெலாந் தலையளியின் வளர்த்த வன்னை**
**இருமரபுந் தூயவன்னை இரந்து நேர்வார்**
**தம்மையெல்லம் புரந்தவன்னை தரும தான**
**தவம்வளர்த்த வன்னைதண் ணளிக்கோ ரன்னை**
**மெய்ம்மையெலாந் திகழ்விரதம் விழைந்தோம் பன்னை**
**விமலசிவ புராணங்கள் வினாய வன்னை**
**செம்மையெலாந் தம்வழிபோற் றிருத்தி நின்ற**
**சிதம்பரநா யகித்திருவை தீமுன் வேட்டான்.**

மயில்வாகனம் என்பார் புகழ்வாய்ந்த புரவலர் என்ப தோடு, அவர் தமக்குப் பல ஊர்களிலும் வாய்த்த பெருநில மெங்கும் குடியேறி வாழ்ந்த மக்கள் குற்றஞ்செய்தாலும் அவற்றைப் பொறுத்து அம்மக்களுக்கு வேண்டிய உதவிகள் செய்ததோடு, குடிக்கூலியாக அவர்கள் கொடுத்த குத்த கைப் பணத்தையும் குறைவு எனப்பாராது தாராளமான மனத்தோடு ஏற்றுக் கொண்டவர் என சிவசம்புப் புலவர் பாடுவர்.

**உன்னிருஞ்சீ ரிருவாலை கோப்பாய் கந்த**
**ரோடைசுன்னை யுருவி லுடுப்பிட்டி யூரின்**
**மன்னியதன் காணிகளில் வைகு மாக்கள்**
**வழுக்களியற் றிடினுமதி கொளுத்தி மாற்றி**
**பின்னலுற வவரையெழுப் பாம லெவ்வெவ்**
**விடர்ப்பிணியுற் றாலுமவர்க் கியல வாற்றி**

**அன்னவர்க ளிணங்கியிறை யீப வற்றை**
**யலமலமென் றேறகுமரு ளாழி யள்ளான்.**

அண்மையில் வாழ்ந்தபெரும் பண்டிதரானசெவ்வந்தி நாததேசிகர் அவர்கள், சிவசம்புப்புலவர் அவர்களின் பிரபந் தத்திரட்டு என்னும் தொகுப்பை வெளியிட்டுள்ளார். அதில் முதற்பாகம் எனக்குறிப்பிட்டுள்ளார். இரண்டாம் பாகம் வெளி வந்ததாகத் தெரியவில்லை.

செவ்வந்திநாததேசிகர் அவர்களின் தந்தையாரும், சிறியதந்தையாரும் புலவரிடத்து முறையாகக் கற்றவர்கள். பண்டிதர் அவர்கள் தொகுப்பிற்குப் புலவரின் மருகரும், மாணாக்கருமாய ஆறுமுக உபாத்தியாயர் உதவிபுரிந்தார். இவ்வரியதொகுப்பு ஈழகேசரி பொன்னையா அவர்களால் பிரசுரிக்க பெற்றுள்ளமை இதற்கு வாய்த்த மற்றோர் பெரு மையாகும்.

புலவர் அவர்கள் காலத்திலேதான் வண்ணை அப் புக்காத்தர் நாகலிங்கம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை ஆரம்பித்திருந்தார். நாகலிங்கம் அவர்களின் பெருமையை புல வரவர்கள் பலபாடல்களில் பாடியுள்ளவற்றில் ஒன்றை படித்து மகிழலாம்.

**“மன்னொத்த செல்வப் பெருவாழ்வி**
**னீரென்றும் வாழ்ந்திருக்க**
**வென்னொத்த பாவலர்க் கெய்திரு**
**மோதுய ரின்பவண்ணைத்**

**தன்னொத்த சீர்ச்சின்னத் தம்பி**
**மகீபன் தவத்துதித்த**
**பொன்னொத்த மேனிப் புகழ்நாகை**
**லிங்க புரந்தரனே"**

புலவர் அவர்கள் வாழ்வில் நாமகள் கடாட்சத்தால் புலமை அதிகரித்துவந்தபோது, திருமகள் புறக்கணிப்பாற் போலும் வறுமை விட்டு நீங்காமலே தொடர்ந்தது. இன்னும் புலவரவர்கள் ஆறடிக்கு மேற்பட்ட உயர்ந்தவராய்க் கவர்ச்சிகரமான தோற்றத்தவராய்த் தலையிலே தலைப்பாகையும் நெற்றியில் நீறும் சந்தனமும் பூசிக் காதில் கடுக்கனிட்டு கம்பீரமாக நடப்பார். தினமும் நல்ல உணவையே உண்பவராதலால் நல்ல திடகாத்திரமாயிருந்தாராம். அவர் சபைகளிற் புகுந்தால் ஆனைக் குட்டிப் புலவர் வருகிறார் என்று சிலர் நகைச்சுவையாகக் குறிப்பிடுவதும் வழக்கம்.

புலவர் அவர்கள் தமக்குக்கிடைத்த பொன்னையும் பொருளையும் பின்னர் தேவையெனப் பொத்தி வைக்காமல் ஏழைகளுக்கு வரையறாது கொடுத்துதவும் வள்ளல்குணமும் உடையவராயிருந்தார் இந்தவகையில் இவருக்கு பணத்தட்டுப்பாடிருக்கவே புரவலர்களைத் தேடித் தம்புலமையைக் காட் டிப் பொருள் பெறுபவராயிருந்தார் இவர் இராமேஸ்வரத்தில் வாழ்ந்த பெருந்தன்மைவாய்ந்த இப்புறாகிம்சாகிப் என்னும் பிரபுவையும் புகழ்ந்து பாடிச் சன்மானம் பெற்றிருந்தார் என்ப.

## ஆசிரியவிருத்தம்

சீர்பூத்த புனிதரா மேச்சுர எனப்படுந்
        தெய்வ ஸ்தலத்து வாசன்
செல்வமீ ராலெவ்வை முன்னா ளியற்றிய
        திருத்தவத் துற்ற குமரன்
செயமுகம் மதுநபி பெரும்புகழ் மறந்திடாச்
        செபவிரத நிலையினிற்போன்
சேதுபதி பாஸ்கர சுவாமிமா ராஜனொரு
        திரிபிலா துற்றநேசன்

வார்பூத்த நதிகுல முதித்தசின் னத்தம்பி
        வள்ளலரு ணாகைலிங்க
மகிபனொடு பிரியாத நண்பினான் சிட்டர்சக
        வாசனம் புவிவாசவன்
வங்கவள மன்னிய கிராமவள மின்பமனை
        வாழ்க்கைவள முற்றெய்தினோன்
வரமுறுஞ் சித்தாந்த வேதாந்த காவிய
        மதித்திறத் தினிதுணர்ந் தோன்

நீர்பூத்த சேதுக் கரைக்கண்யாழ்ப் பாணத்தார்
        நிருமித்த சத்திரத்தை
நிலைமைகுலை யாவண்ண முதவியா யூக்கமொடு
        நின்நிறை வேற்றிவைத்தோ

**நின்றுமலரா மேச்சுரத் துற்றமுக வாஸியென**
**நிலவுமோர் சிறப்பு முடையோன்**
**நெஞ்சமுற யாத்திரைக் கெய்திடு பவர்க்கேற்ற.**
**நெறிகுலவ வசதிதருவோன்.**

**நார்பூந்த வேணியர ணாலயப் பணிவகையு**
**மன்பனாய்ச் செய்விப்பவன்**
**அதிபர்போற் பிரசைதங் குறைதெரிந் தியனீதி**
**யாம்வகை நிறுத்துமுரவோன்**
**ஆருள மெலிந்து வந்தாமற் றன்னவரை**
**அன்னைபோ லப்பேணுவோன்**
**அரியகுண விபுறாம்கிம் சாகிபு வெனத்தினமும்**
**அனைவரு மதித்த துரையே**

இவ்வாறு தொடர்ந்துவரும் கலித்துறைப் பாடல் களில் அவரைக் "கற்றார்கள் தாரு, மதிகாண் உளத்தன்" உதவி சந்ததஞ் செய்யும் இபுறாகிம் சாகிபு என்றெல்லாம் பாடுவார். சாகிப் அவர்கள் புற மதத்தவராயிருந்தும் தமிழ் வளர்த்த செம்மல்களை ஆதரித்த சமரசஞானியாகவே வாழ்ந்தவர்.

வடமானிலத்திலே வடமராட்சியிலுள்ள வல்லிபுரத் தாள்வார் திருக்கோயிலிலே எழுந்தருளியுள்ள சக்கரத்தாழ் வாரைத் தங்கத்தகட்டினில் செய்துவைத்த சிதம்பரப்பிள்ளை என்னும் சீமான் புகழையும் புலவரவர்கள் பாடியுள்ளார்.

"திருந்துமெழில் வல்லிபுரழ்வாழ் சீதரன் திகிரியை தங்கத்தகட்டினால் செய்வித்தபத்தியாள" என்றும், "பேரேறு தருமதானங்களைச் சந்ததம் பீடுற நடத்தும் அன்ப"என்றும் "பசியில் நொந்தவரை அன்னை போறிபேணி அனமுதவு செல்வ" என்றும் "கோணாமல் ஏற்பவர்க்கு ஈயும் குலப் புகழ்மை குவலயத்துள்ளவர்" என்றும் ஆசிரியவிருத்தத்திற் பாடி, அப்பால் கலித்துறையிலும் அருமையாகத் தொடர்ந்து பாடி வாழ்த்துவர்.

**"சங்கக்கை யானமர் வல்லி**
**புரத்தினிற் சக்கரத்தைத்**
**தங்கத் தகட்டின் முழுது**
**மமைத்துத் தழைத்தபத்தித்**
**துங்கச் சிதம்பரப் பிள்ளாய் நின்**
**மேதகை தொல்லை விண்ணோர்**
**சங்கத்து முற்றது நின்பிறப்**
**பேதவச் சால்பினதே"**

சென்ற நூற்றாண்டில் மட்டக்களப்பு வைத்திலிங்க மென்று பெயர்பெற்ற வர்த்தகர் வட்டுக்கோட்டை சித்தங் கேணி பகுதியைச் சேர்ந்தவர். இவர் கப்பலோட்டி நெல் வியாபராஞ் செய்து ஈட்டிய பெரும்பொருள் பெரும்பாலும் தருமப் பணிக்கே செலவானது. மனங்கோணாது ஈயும் மார்க்கண்டு முதலாளியும் அந்த வள்ளல் பரம்பரையின

ரேயாவர். வயித்திலிங்க வள்ளலைப் பாடத்தொடங்கிய புலவர் கலித்துறை யாப்பைக் கையாண்டு பதினொரு பாடல்கள் பாடியுள்ளார். பதிகம் போலமைந்த புகழ்மாலை முழுதும் தமிழ் மணங்கமழும் பூக்களாய சொற்களாலாயது.

**“திருவாழும் வட்டு நகர்சித்தங்**
**கேணி செறிந் திருந்தே**
**மருவார் பொழிற்சங்கு வேலியி**
**லோங்கிடும் வாழ்வில் வைகும்**
**பொருவா ரிலாத வைத்திய**
**லிங்க புரந்தா மெய்க்**
**குருவான கந்த னருளால்வந்**
**தேயுன் குலமனைக்கே”**

இவ்வாறு பாடிக் கொண்டே புலவரவர்கள் புரவலர் மனையுட் புகுந்தார். புகுந்தவர் வீட்டுக்கு விளக்காகிய கற்புடை இல்லத்தரசியை வியந்து பாராட்டி, “செய்யாள் கற்புக்கு வடமீன், வறிஞர்க்குச் சேமவைப்பு” என்றெல்லாம் வாழ்த்துவர். பின் வைத்திலிங்கவள்ளலை வியந்து பாடுவர்.

**“மானுட யாக்கைக்குஞ் சைவமெய்ப்**
**பத்திக்கும் வான்புவிக்கு**
**மாநிதி கட்கும் வயித்திய**
**லிங்க வரோதயனே**

**ரானவில் வாழ்வுக்குந் தான**
**தருமங்க ளாற்றுதற்கு**
**மேனனி நீசெய்த மாதவம்**
**வேறெவர் மேவினரே."**
**"வாணிக வாரியு மூர்தொறு**
**மேவிய மட்டகன்ற**
**காணியின் வாரியுங் குன்றென**
**வோங்க......."**

**"இந்திரச் செல்வ மடைந்தும்**
**வைத்திய லிங்க வள்ளல்**
**சிந்தனை சற்றும் பிறிது**
**படாது செருக்க கன்று**
**சந்ததம் யார்க்கும் இதமே**
**புரிந்து தழைத்திட லால்**
**உந்தை உனைப்பெறச் செய்த**
**தவத்தினி லுங்கெதுவே"**

புலவர் அவர்கள் புரவலர்களைப் பாடிவாழ்த்தும் வரன்முறையில் சைவப்பாண்பாடு தவறுவதில்லை. "தீர்க்கா யுளோ நினைக்கீவன் சர்வாபீஷ்ட சித்தியுமே" என்பது இவரின்வாழ்த்து.

வடமராட்சியில் வல்வெட்டித்துறையின் மகத்தான பெருமைகளைக் கூறுமுகத்தால் சிவசம்புப் புலவர் அவர்கள் வல்வைக் கலித்துறை என்னும் நூலைப் பாடியுள்ளார். வீரர்கள், தீரர்கள், வள்ளல்கள் வாழ்ந்த அந்தவூர் என்றுமே பெருமைக்குரியதாயிருந்தது. அங்கும் அயலிலும் பழைய வீரர்களின் நினைவாகப் பல ஊர்கள் உருவாகியு ள்ளன. சமரபாகுதேவன், வென்றிபாகுதேவன், கல்லிடைத் தேவன் முதலானோர் பழைய வீரர்கள்.

வீரர்கள் ஒர் புறமாக அங்கே பாரம்பரியத்தில் வந்த வள்ளல்களும் இருந்தார்கள். ஆண்களேயன்றி அவர்கள் வழியொழுகிய பெண்களும் கொடையிற் சிறந்தவர்களாய் கணவன் கொடுப்பதைதாம் தடுக்காத பிராட்டிகளாய் இருந் தார்கள்.

~~~~~~

~~~

# கீரிமலை ஆறுமுகன் கோயிலைக் கட்டிய கந்தசாமியும் அவர்மீது பிரபாவப் பாமாலை பாடிய சிவசம்புப் புலவரும்

புலவர் காலத்தில் வல்வெட்டித்துறை கோ.கந்தசாமி என்னும் வர்த்தகர் மட்டக்களப்பில் மர வியாபாரியாக விளங்கி மனதுக்குகந்த தெய்வநாயகி என்னும் மங்கையை மணந்து பலதானதருமங்கள் செய்து வாழ்ந்துவருங்கால் இவர் மனைவியுடன் தனது பிறந்த ஊராகிய வல்வெட்டித்துறைக்கு வந்திருந்தபோது உடுப்பிட்டிசிவசம்புப் புலவர் அவர்கள் அவர்மீது "பிரபாவப்பாமாலை" ஒன்றைப் பாடிச் சென்று கண்டனர். கந்தசாமி உடனடியாகச் சிறு தொகை கொடுத்துதவியதோடு, மட்டக்களப்புக்கு வந்தால் ஆயிரம் ரூபா தருவதாக வாக்களித்தார்.

அந்த நாளில் ஆயிரம் ரூபா என்றால் யார்தாம் விடுவார். புலவர் அவர்கள் சிரமத்தைப் பாராமல் அங்கே சென்ற போது கந்த சாமியாரின் இல்லத்தரசி புலவரை வரவேற்று உபசரித்தவாறே கணவன் காட்டுக்குப் போயிருந்தார் என்று கூறினார் புலவரும் தாம் வந்த காரணத்தைக் கூறியதும், இல்லத்தரசியார் இரண்டாம் கதை பேசாமல் ஆயிரம் ரூபாவை எடுத்துவந்து கொடுத்துப் புலவரை வணங்கினாள் தெய்வநாயகி.

புலவர் தமக்கு ஆயிரம்ரூபா பாராமல் தந்த தெய்வ நாயகியையும், கந்தசாமியையும் பாடிய பாடல்கள் பிரபா வப்பாமாலை என பெயர்பெற்ற தொகுதியாகும். இதில் கலித்துறை, ஆசிரிய விருத்தம், விரவி வந்துள்ளன. ஈற்றில் கொச்சகம் என்றும் சில அடிகள் வந்துள்ளன.

பிரபாவப்பாமாலையில் எடுத்த எடுப்பிலேயே இந்திரச் செல்வம் பெற்றுயர்ந்த கந்தசாமி வள்ளலின் கொடைச் சிறப்பைக்கூறுவர். அதில் குறுந்தடி கொண்டு முழக்கும் முரசின் ஒலி ஒரு காத தூரம் கேட்கும் என்றும், அதைவிட உரத்து முழக்கும் ஒலி ஒரு யோசனை தூரம் கேட்கும் என்றும், ஒருவர் கொடுத்தார் என்னும் சொல் மூவுலகும் கேட்கும். என்று கூறும் நாலடியார் பாடலைத் தழுவிக் கந்தசாமி வள்ளலின் கொடைச்சிறப்பைப் பாடுவர்.

**கலித்துறை**

**"எடுத்தாயிரஞ் சொல்ல வேண்டுவ**
**தோநினக் கென்று நல்லோர்**
**கொடுத்தா ரெனப்படுஞ் சொன்னிமிர்ந்**
**தோடிக் குறைவற் றெழிஇ**
**யடுத்தாரு மூவுல குங்கேட்கு**
**மென்ப தறிந்து னைகா**
**ணடுத்தாழ் விலதா புகழ்க்கந்த**
**சாமி நரேத்திரனே."**

## அடுத்துவரும் ஆசிரியவிருத்தத்தில்

**கந்தசாமிப் பிள்ளையே வல்வை நகராச**
**கவிஞர் கண் மதித்த தருவே!......**
**மந்தகாசத்தினிய தேமொழியினெவ்வெவர்**
**மனத்தையு முருக்குமென்ப!.......**
**வடிவதமிழ்க் காவிய புராண சோதிடநூல்**
**வாழாதவகை தேர்ந்த நிபுண!.......**

**வரமுறுங் கீரிமலை யறுமுகன் கோவிறனை**
**மாண்புடனமைத்த துங்க!.........**
**கோள்திரிந்து மாரிபொய்த்துக் கோரக் கருப்புறுமந்**
**தாள்தனினு மீகைவிடா நல்லனே**

அதாவது கிரகங்கள் தத்தம் நிலைமாறி மழையின்றி கொடியபஞ்சம் வந்த காலத்தும் ஈகையைக் கைவிடா உத்த மனே! என்று அழைக்கின்றார். கீரிமலையில் அறுமுகன் கோயில் இவர்தான் அமைத்த தென்பதும் மேலேயுள்ள பாட லால் அறியக்கிடக்கின்றது

அடுத்துவரும் கலித்துறைப் பாடல்களிலொன்றில் பிரமதேவனை நோக்கி, தேவரீர் தாங்கள் கொடுக்கத் தெரி யாத புல்லர்கள் வீட்டில் குவித்து வைக்கும் செல்வத்தை, ஓயாமல் கொடுத்து மகிழும் கந்தசாமி வீட்டிலன்றோ குவித்து விடவேண்டும் என்று குறிப்பிட்டுப் பாடுவார்,

**சேயா யரியுந்தித் தாமரை**
**வந்த திசைமுகனே**
**ஈயாத புலவர் மனைதோறு**
**நீவைத்த வேமவெற்பை**
**வாயார் சரசு மொழிக்கந்த**
**சாமி மனையில் வைத்தால்**
**ஓயாமல் யார்க்கும் மகிழ்ந்தள்ளி**
**அள்ளி உதவுவனே.**

தொடர்ந்துவரும் கலிவெண்பாவில் யாழ்ப்பாணத்துப் புலமையையும் கொண்ட மகிமையும் குறிப்பிடுவர். ‘ஊரெல் லாம் பண்டிதரும் ஓங்கு கொடைச் செல்வரும் வாழ் பேரெல்லாம் கொண்டு பிரிவின்றிப்~பாரெல்லாம் பன்னியிட நின்றொளிர் யாழ்ப்பாணத்தின்'' என்பர். இன்னும் கந்தசாமி யவர்களின் பெருந்தன்மையையும், அவர் தம் தேவியார் தெய்வநாயகியின் மனைமங்கலத்தையும் விரித்துப் பாடுவார்.

அன்று புலவர் மட்டக்களப்புவீட்டுக்குச் சென்ற போது, மங்கை நல்லாள் அவரை விசாரித்து, “நீங்கள் உடனே பயணம் போவதாயிருந்தால் என் ஐயா வாக்களித்த தொகையைத் தந்துவிடுகிறேன்'' என்று சொன்ன வாய்ச் சொல்லை வியந்து புலவர் அவர்கள் பாடிய பாடல் கலித் துறைக்கு விருந்தாயுள்ளது.

**"ஐயா வனத்துக்கு வாணிகத்**
**துற்றனர் அன்பரிங்ஙன்**
**எய்யா தவர்வர முன்னர்ப்**
**பயணம் இசைவுளதேற்**
**பொய்யாதவர் சொன்ன பொன்னிவன்**
**யானென்ற பூவை வைக**
**மெய்யார் புகழ்க்கந்த சாமிக்கு**
**வான் செல்வம் வேறென்னையே"**

என்று கூறும் செய்யுளைக் கூர்ந்து நோக்குங்கள். இற்றைக்கு நூறு வருடங்கட்குமுன் ஓர் பெண் ஆயிரம் ரூபாயை அளித்துத் தனது கணவன் சொன்னசொல்லைக் காப்பாற்ற முன்வந்து தந்தாளென்றால் அவளை என்ன வென்று அழைப்பது? அச்செல்வி வீட்டில் இருக்கும்பொழுது வேறு செல்வமும் வேண்டுமோ? அவளிலும் மேலான செல்வம் வேறு யாது தேவை?

**ஆணாயி னோரு மரியசுவைச் செந்தமிழை**
**வீணான தென்று வெறுத்துவிடு மிந்நாளில்**
**நாணாதி பூண்டதெய்வ நாயகிமா னன்னதையுட்**
**கோணாது பூணக் குறித்த தெங்கள் புண்ணியமே.**

இத்தகையே தெய்வநாயகியை மேலும்!!!

**சாற்று புகழுக்கந்தசாமி மனக்கோவிலிடை**
**யேற்றி வைத்த வின்பவெழில்**
**விளக்கே — நாற்றிசைமா வத்திரனார்**
**தந்தவ சிட்டமுனி தேவிக்கும்**
**புத்தியினாற் கற்புரைக்கும் பூங்கிளியே**
**சார்ந்தவியன் ஞாலம்பரவு தெய்வநாயகியா**
**மெய்ச்சுகுணகோலங்கனிந்த மடக்கோகிலமே.**

**"நெஞ்சங் குளிர்ந்து விழிகுளிர்ந்து**
**இன்சொல் நிகிழ்த்தி முகக்**
**கஞ்சம் குளிர்ந்து பணிந்து என்**
**கவிக்குக் கனகம் தந்தாள்**
**தஞ்சஞ் செறிந்தவர் தாங்கிடுஞ்**
**சீர்க்கந்த சாமியில்லாள்**
**வஞ்சங் கடிந்த மனத்தெய்வ**
**நாயகி மாதரசே."**

.......என்றெல்லாம் பலபடப் பாராட்டிய புலவன் தனது ஆர்வம் அடங்காது தட்டுக்கெட்டுத் தடுமாறிக் கடைசியில் அவளைத் தனக்கு அந்நியளாக விடமுடியாமல் அடங்கா ஆர்வத்துடன்

**"நாளையன் நீ புதல்வி நன்மருகன்**
**நின்கணவன்தூனிதனை நம்பிடுதி**
**தப்பல்லத் தூநிலவும் உள்ளத்தால்**

**நீர்செய்த ஓங்குகாரத்தை எள்ளத்தனையும்**
**நான் மறவேன் ~ றள்ளற்றுச் சந்தகமும்**
**நேசந்தணவாமல் நாம் வாழக்**
**கந்தனருள் முன் நிற்குங்காண்"**

என்றுபாடி உரிமைபாராட்டியதை உற்று நோக்குங்கள்.

புலவர் அவர்களின் இறுதிக் காலத்தில், இவரை விட்டு என்றுமே நீங்காத வறுமையோடு நோய்களும் தொட்டுக்கொண்டன. தம்நிலையை இவர் கந்தர்மடம் சுவாமிநாத பண்டிதர் அவர்களுக்கு அறிவித்தார். சுவாமிநாத பண்டிதர் அவர்கள் முன்னர் வை.சி.சிவகுருநாதனுடன் வித்துவ சிரோமணி பொன்னம்பலம் பிள்ளை அவர்களிடம் படித்து வந்தவர். வித்துவசிரோமணி தமக்கு அவகாசமில்லாத வேளைகளில் சிவசம்புப்புலவர் அவர்களை இங்கே பாடஞ் சொல்ல வைத்தவர். அந்த முறையிலும் பின்னர் அவரோடு நெருங்கிப்பழகிய முறையிலும் புலவர் அவர்களும் பண்டிதர் அவர்களும் மிக நெருக்கமாயிருந்தார்கள்.

புலவர் அவர்கள் தம் நிலைமையை அறிவித்தும் சுவாமிநாத பண்டிதர் அவர்கள் அவரிடம் விரைந்து சென்றார். குருவுக்குச் செய்யவேண்டிய உதவிகளையும், பணிவிடைகளையும் குறைவறச் செய்தார். அவர்செய்த சேவையைப் பாராட்டிய புலவரின் பாடல்கள் சில திருநெல்வேலி சைவசித்தாந்தக் கழகத்தார் பதித்த தனிப்பாடற்றிரட்டில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் நீண்ட ஆசிரிய விருத்தமும், அதனைத் தொடர்ந்து ஆறு கலித்துறைப் பாடல்களும்

வந்துள்ளன. அச்சில்வராத அக்கவிகள் சில சாமிநாத பண்டிதர் அவர்களிடம் இருந்தன. அவை எங்குற்றன? என்று தெரியவில்லை.

கலித்துறை

**யாரும் புரப்பவர் இன்மையின் மூப்பினில் யான் பிணியும்**
**ஈரும் கொடிய மிடியும் அடஉள் இனைபொழுதில்**
**சாரும் புகழ்ப்பண் டிதன்சாமி நாத தயாநிதியைக்**
**கூடும் சுடாயில் வேலோன் திருவருள் கூட்டியதே.**

**எல்லாரும் கைவிடக் காணி பொருள்களை ஈனமெனப்**
**பொல்லார் கொளத்தஞ்சம் இன்றிப் புலம்புறும் போதெதிரா**
**நல்லார் தொழும்பண் டிதன்சாமி நாத நரேசன் இன்சொல்**
**சொல்லாட உய்த்த குகன்அரு ளேமெய்த் துணை எனக்கே.**

**நன்றியைப் பேணிடும் பண்டிதன்**
**மெய்ச்சாமி நாதன்உளத்**
**தொன்றிய பேரரு ளால்இடை**
**நேர்ந்தின் றுரைத்த இன்சொல்**
**என்திகைப் பைச்செற்ற தின்னவன்**
**போல இன்னுஞ் சிலரைக்**
**குன்றடும் வேலவன் சேர்த்திடு**
**மேலென் குறையெனக்கே.**

**பன்னாள் இவண்கண் டிலஞ்சாமி**
**நாதமெய்ப் பண்டிதனை**
**எந்நாள் இனிக்காண்பம் என்றெய்க்கும்**
**ஏழைதன் எண்ணத்தை (உள்)**
**உன்னா அறுமுகன் நேர் கூட்டி**
**னான்அவன் ஓங்கருளை**
**எந்நாளும் மெய்யென்ற ஆத்தர்கள்**
**வாக்கினை எந்சொல்வனே.**

**வற்றா அருட்பண் டிதன்சாமி**
**நூதன் வளர்செனினை நின்(று)**
**உற்றான் இவண் என யாழ்ப்பாணத்**
**தார் முற்றும் ஓகைாழீஇ**
**நற்றாரை வான்முகில் கண்ட**
**மயிலியல் நண்ணியிடின்**
**பெற்றாருந் தவ்வையும் உற்ற**
**களிப் பெவர் பேசுவரே.**

புலவருக்கு முதுமையில் கண்ணொளி மங்கியது. கந்தவனக்கடவை ஆறுமுகசுவாமியை விடாதவேண்டிப் பாடுகிடந்து கண்ணொளி பெற்றார். இதனால் **"கண்ணொளி தந்தாய் மறப்பேனோ"** என்னும் தொடரமைந்த பாடல் பாடினார். புலவர் **29-09-1910ம் நாளில் காலமானார்.** இவரின் மறைவுச் செய்தி ஈழத்துப் புலவர்களையும், தமிழ் நாட்டுப்

புலவர்களையும் பெருந்துயர் அடையச் செய்தது. புலவர் பெருமக்கள் பலர் இரங்கல் பாடல்கள் மூலம் தங்கள் துயரத்தை வெளிப்படுத்தியுள்ளனர். கரணவாய் செந்திநாத தேசிகர் என்னும் பண்டிதர், புலவரால் பாடப்பட்ட பிரபந்தங் கள் சிலவற்றைச் சேர்த்து **'சிவசம்புப்புலவர் பிரபந்தத் திரட்டு'** என்னும் நூலைத் தொகுத்து வெளியிட்டார். புலவரின் தமிழ்த் தொண்டினை உரிய முறையில் உணர்ந்து கொள்ளுவதற்கு அந்நூல் பேருதவியாக இருக்கிறது.

சிவசம்புப் புலவர் அவர்கள் "சொல்லும் பொருளும் தொடைவகைகளும் சிறப்புறவைத்துக் கவியமைக்கும் புல மையிற் சிறந்தவர்" என சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவ ராலும் "சேனாதிராயமுதலியாருக்கு அடுத்தபடியில் புலமைப் பெருக்கமுள்ளவர்" என பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையா லும் "மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளைக்கு அடுத் தவர்" என தமிழ்நாட்டுப் புலவர்களாலும் இவர் போற் றப்பட்டவர். இவர் மாணாக்கர்கள் பலர் இவரது பிரிவுக்கு வருந்திப் பாடினார்கள். அவர்களுள் அல்வாய் நொத்தாரிசு ஆறுமுகம் அவர்கள் பாடிய பாடல்கள் இரண்டு கிடைத் துள்ளன.

**"கவி காள மேகம் கவிச்சக் கரவர்த்தி கம்பனென**
**அவியா விளக்கனை யான்புக ழேந்தி யமைந்தொருங்கு**
**புவிமீது வந்த தெனுஞ்சிவ சம்புப் புலவனைக்கை**
**குவியாப் புலவ ரெவர்கவி பாடுங்குறிப் பறிந்தே"**

**"செந்தமிழ்வாழி கரைகண்டு சைவத் திறம்பரவி**
**கந்தசுவாமி திருத்தொண்டு பூண்டு கவிமழையே**
**சிந்துநற் தேசிக னாருடுப் பிட்டிச் சிவசம்புவை**
**எந்தப் பிறப்பினிற் கண்ணாரக்காண்ப திசைமிகவே"**

இவரது மாணாக்கருள் ஒருவராகிய தென்கருணை யூரைச் சேர்ந்த குருக்கள் கை.திருஞானசம்பந்த தேசிகர் பாடிய திதி நிர்ணய வெண்பா சில.

**சாதா ரணவனிதை சாந்தன் தேய் பிற்பக்க**
**மீதாரும் பன் மூன்றில் மேதினிவிட் ~ டாதார**
**மன்னு சிவசம்பு மாபுலவன் சங்கரனார்**
**தன்னுலகுற் றுற்றான் சுகம்.**

வனிதை என்றால் பெண். கன்னியும் பெண்தான். புரட்டாசி மாதத்தைக் கன்னிமாதம் என்பர், அது அம்பிகைக் குரியமாதம் ஆதலால், வனிதை என்னுமிடத்து, புரட்டாதி கன்னிமாதம் எனப்படும். அம்பிகை என்றுமே கன்னி. இது சைவ சித்தாந்த முடிபு. சோதிட முடிபுங்கூட. சாந்தன் ~ சந்திரன் சாந்தன் தேய் பிற்பக்கம் ~ தேய்பிறைக் காலம்.

**பாரளையு மிசையருளம் பலமுதலியொடு நிறைசூற்**
**காரளையு மலர்கூந்தற் கதிராசிப் பிள்ளைசெய்த**
**சீரளையுந் தவவடி வாஞ் சிவசம்புப் புலவவெந்த**
**வூரளையும் விருப்பாலிவ் வுலகொரு மறைந்தனையே...(1)**

பாடுபுக ழானருளம் பலமுதலியிரும் புகழை
நீடுபுவி யிதிலென்று நிலைக்க வைத்த சிவசம்புப்
பீடுபுல மியற்புலவ பெரும்புகழ்நா வலனாரைக்
கூடுமவாப் பெருக்காலோ குவலயத்தை யொருவினையே
(2)

வளமேவு பொழிற்கந்த வனமேவு மயின்முருகன்
தளமேவு கமலமலர்த் தாளிணைக்குத் தமிழ்மாலை
யுளமேவு தனியன்பா லுரைத்துவந்த வருட்புலமைக்
களமேவு சிவசம்புக் கவியரசுக் கெரிவணையே..(3)

செப்புதமிழ்ப் பதங்கணிற்குச் செழும்பணிக ணிதம்புரிய
ஒப்பரிய சுவைப்பாவி னூற்றிடமாய்ச் சிறந்திருந்தாய்
அப்பெரிய நாவலரு மவாவுநிலை கொளமிளிர்ந்தாய்
இப்புவியி னிகருனக்கா ரினியசிவ சம்பரரே.....(4)

கல்லாட நூற்பொருளைக் கலித்துறையா யமைத்தவொரு
வல்லாள ரெவருளரிம் மகிதலத்தி லுனைநிகர்க்கு
சொல்லாளு மறிஞரெலாஞ் சுவைத்ததனை நனி மகிழ்வர்
செல்லாளு முடுப்பிட்டிச் சிவசம்புப் புலவநிற்கே.....(5)

பருவமுகில் மழைபொழியப் பசம்பொழிலின் நறைபொழியத்
திருவுடையோர் நிதிபொழியத் திறத்திசைஞ ரிசைபொழிய
மருவுசுவைக் கவிபொழிந்தாய் மதியறிஞர் மணியானாய்
பொருவில் சீர்ச் சிவசம்புப் புலவவவெமை மறந்தனையோ
(6)

திறற்கம்ப னவற்பிறகோர் சிவசம்ப னெனநலையார்
மறக்கரிய புகழுரைத்தான் மறைந்திடுமோ கடலுலகில்
குறக்குயிலாள் கணவனடி கொழுங்கருணை மழை நனைசீர்
சிறக்கநின்ற வுடுப்பிட்டிச் சிவசம்புப் புலவநன்றே....(7)

பூவேந்து கலைமடந்தை பொழிந்தவருண் மழை வள்ளத்
தால்
மூவேந்தர் புரந்ததமிழ் முதுபுலமைத் திறம்பெற்றுப்
பாவேந்து மெனத் திகழ்ந்தாய் பரவுசிவ சம்புவெனும்
நாவேந்து புகழ்ப்புலவ நடந்தனைநீ தமிழ்க் கினியார்....(8)

வாரிகையாந் திரைகளினால் மணிதரளங் கொழிப்பதுபோல்
பாரிகையா மெனுமலரால் பகரரிய வுரைமணியக்
காரிகைக்கு வரைந்தளித்தாய் கலையறிஞ ருவந்திருந்தார்
பேரிகையா ஹறாவிசையான் பிறங்குசிவ சம் மன்னே.....(9)

~~~~~~~

~~~~

# பருத்தித்துறைக் கலித்துறை

~~~~ ~~~~ ~~~~ ~~~~

ஆறு வதனப் பிரானன்பர்க்
        கெய்ப்பில்வைப் பன்னவன்வா
னேறு மதிற் பருத் தித்துறைச்
        செல்வ ரிதயம்புக்கு
வீறு மகிழ்வி னெனைக்காக்க
        வூக்கிய வித்தகமாத்
தேறு வதற்கிட மான தன்
        னார்செய்த செவ்விகளே. (1)

சங்க வளம்பிர சங்க
        வளங்கல்விச் சாலைவளந்
தங்க வளம்வண் கொடைவளந்
        தான தருமவளம்
வங்க வளம்பன் னிலவளம்
        பூந்திரு வாழுமனைத்
துங்க வளம்வள முற்றும்
        பருத்தித் துறைக்கண்ணவே. (2)

மன்னவர் மன்றமு முல்கு
        பொருட்குவை வைப்பும்பல்லூர்த்
துன்னு நிகழ்ச்சி யுடனுடன்
        றெற்றிடுந் தூங்கவைப்பும்
~~~~

பொன்னணி யாடை யரிசிநெல்
லாதி பொலிந்தவைப்பு
மின்னவு மன்னிய பன்னற்
றுறைக்க ணவையிலவே. (3)

விருத்தரைப் பாலரை வான்கவி
வாணரை மெய்த்தவரை
யருத்தியிற் காத்திடுங் கூவல்
குளமட மாலயங்க
டிருத்து மருத்துவச் சாலைதண்
ணீர்ப்பந்தல் சேர்வித்திடும்
பருத்தித் துறைப்புரு டோத்தமர்
தேக்கிய பாக்கியமே. (4)

அருந்துதிக் கற்பி னரிவைய
ரோடில் லறத்திலென்றும்
பெருந்துதி மேவர வாழ்ந்தருட்
டெய்வம் பிதிரரொக்கல்
விருந்து பசுமட வார்பிணி
யாளர்கள் வேதியரைத்
திருந்துறக் காப்பர் பருத்தித்
துறைப்பெருஞ் செல்வர்களே (5)

கனமே றியதுலைத் தட்டுறத்
தாழுங் கணக்கிலென்றுந்
தனமேறத் தாழுவ ருதிய
வாணிகச் சால்பின்மிக்கார்
தினமே றியதுதி மன்னவர்
பாற்பெற்ற சீர்ப்பட்டத்தார்
மனமே றியதயை யார்பருத்
தித்துறை வாசவரே (6)

முன்னிற்ப ரீய வுலோபர்க்கு
மீயு முறைகற்பிப்பார்
பின்னிற்பர் பாவம் பழிக்கென்று
மோருரை பேசுவர்வான்
மன்னிற் பலதிறப் போகந்துய்ப்
பார்மழை வண்ணனெனப்
பொன்னிற் பிறங்குரத் தார்பருத்
தித்துறைப் புண்ணியரே (7)

நீற்றியற் செல்வந் தியான
செபத்தி னியமமன்பர்ப்
போற்றியற் செல்வந் திருவருட்
பாமெய்ப் புராணத்துண்மை
தேற்றியற் செல்வங் குகற்பாடு
வார்க்குத் தியாகமருள்
பேற்றியற் செல்வம்பன் னற்றுறை
வாழப் பெருகியவே (8)

திங்கட் கடவுண் முழுக்கலை
யோடு திகழிலென்று
மங்கட் புவிக்கின்ப மாவது
போல வரவிந்தப்பூச்
செங்கட் பருத்தித் துறையார்செல்
வத்தொடு சேர்ந்துநிற்பி
னெங்கட்கு மாத்திர மோவின்பந்
தாவுயிர் யாவுக்குமே (9)

எடுத்துமுன் னூருணி நீர்நிறைந்
தற்றே யெனவள்ளுவர்
தொடுத்த தொடர்புக் கிலக்கிய
மாகத் துணிந்துசொல
வடுத்தபன் னற்றுறை யார்க்கிட்ட
சித்திமுற் றாயுளெல்லாங்
கொடுத்திடு மாறு குகனைப்
பணிதுங் குழைந்துளமே (10)

முத்துக் குமார சுவாமிக்
குருமதி முன்னவர்நேர்
பத்திக் குமார சுவாமிப்
புலவனெம் பான்மகிழ்வு
வைத்துப்பன் னாட்பல நூல்கற்றுத்
தேறிய மாண்பினுள
மொத்துத் தளர்வி னுதவினர்
வாழ்கவவ் வுத்தமரே (11)

நேய முறத்தமி ழெம்பாற்கற்
றாங்கிள நீடிப்பிற
தேய நிபுணரி லெம்மே
நிலையுற்ற சீர்நமசி
வாய புதனிவண் றங்கூடினின்
றற்றத்தின் வந்துபொரு
ளேய மகிழ்விற்றந் தான்வாழ்க
வின்பத்தி லென்றைக்குமே (12)

## வெண்பா

சீர்சா ருடுப்பிட்டி செய்ய கரணவா
யேர்சார் புலோலி யிரும்பருத்திப் ~ பேர்சார்
துறைவல்லை புத்தூருத் துங்கரென்றும் மிந்நெஞ்
சுறைவதற்கென் னோன்புழந்தே னோ. (13)

~~~~~~
~~~~~~

# கந்தவனநாதர் ஆசிரிய விருத்தம்

## வெண்பா

செந்திருவாழ் கந்தவனச் செய்யவடி வேற்குகன் மேற்
பைந்தமிழின் மன்விருத்தம் பாடுதற்குச் ~ சந்ததமும்
வந்தனைசெ யுந்தவர்முன் வந்தருளு மைந்துகரக்
கந்தமத தந்திமுகன் காப்பு.

## விருத்தம்

திருமேவு மாறுமுக மும்விழியி ராறும்வளர்
திண்டிறற் றோண்முந்நான்குஞ்
செம்பவள வாயுமணி மூரலு நினாதுபய
சீறடியு மாரநிறமுங்
குருமேவு கோடிசுட ரன்னவடி வுஞ்சுடர்செய்
குண்டலமு மம்பொன் முடியுங்
குக்குடமும் வேலும்மயி லுங்கருத லார்பிறவி
கொள்ளப் படுந்தகைத்தோ

தருமமேவு நாட்டரசன் மதலைகன வுற்றினைய
றசநாளினுந்துயரெலாஞ்
சாடுது மெனச்சொற்ற பெரியவருண் மேகமே
தத்துவா தீதமுதலே
மருமேவு சோலைநிரை வானக டுடைக்கவெழும்

வளமருவு கந்தனமேல்
வருமமல பரமசிவ குருபரமெய் விரதர்புகழ்
வரதவுல கருண்முருகனே. (1)

ஆற்றமுடி யாதமுடி யாதிந்த நோய்த்தழ
லவுத்தன னவுந்தனனினைக்
கடிமைப்பட் டுப்பெற்ற பலனல மலங்கருணை
யாளனென் றுன்னை யறிஞர்
சாற்றும் வகையென்னையோ சிறியார்க்கிரங்கத்
தகாதோநன் மெய்யன்பரிச்
சஞ்சலமெலாஞ்சொலி யிரக்கவிலையோ வருட்
டன்மையிந் நாளிலிலையோ
வேற்றமுறநற்குண மிலாதமக வென்றாவு
மீன்றவர்கை விட்டிடுவரோ
வெல்லாம் விளக்கியுள நின்றிரு வுளத்தையினி
யெந்தவகை யாய்க்குழைப்பேன்
மாற்றல னெனப்புக்க சூரற்கு மின்புதவும்
வள்ளலே கந்தவனமேல்
வருமமல பரமசிவ குருபரமெய் விரதர்புகழ்
வரதவுல கருண்முருகனே. (2)

நின்னன்றி யுற்றதுணை வேறுகா ணாதவெனை
நீகைவிட னீதியோ வென்
னெஞ்சமுறு சஞ்சலங்காணிலொரு கல்லேனு
நெக்குற விரங்கிடாதோ

வெந்நன்றிகொன்றவரும் யான்படும் பாட்டினிலோ
        ரெட்டுணையு முற்றதில்லையே
யென்னென் றுரைத்திடுவ னின்னுளக் காழ்ப்பையினி
        யார்க்குரைசெய் தாறுவேன் காண்
பொன்னன் றிகறறுருவர் தஞ்செயல் சொலக் கருணை
        பூத்தமுழு ஞானமுதல்வா
புளினர்த மடக்கொடி பொருட்டெயின் சேரியிற்
        போந்தவிம லாபொஜலக
மன்னன் றிசாமுகன் முராரிபுகழ் பச்சை மயில்
        வாகனா கந்த வனமேல்
வருமமல பரமசிவ குருபர மெய் விரதர்புகழ்
        வரதவுல கருண்முருகனே (3)

உள்ளத்தழுக்காறு வெஞ்சின மகந்தைபொய்
        யுலோபமுத லானவினைய
வொன்றினுக் கொன்றதிக மாய்வளர வொருசிறிது
        முண்மைதெரி யாதுலைவுறாஉங்
கள்ளத்தி னேனுநின் னருட்குரிய னாவதெக்
        காலத்தி லுளநாளெலாங்
கண்டபடி வீணிற் கழிந்ததந் தோவினிக்
        காலனார்க் காளாகவோ
தெள்ளத் தெளிந்தவமு தேயினிய தேனே
        திரண்டபா கேசீனியே
தீவினைக் காட்டினை யெரித்தசெந் தழலே
        சிவாநந்த போகவிளைவே
வள்ளத்தி லம்பிகை யளித்தவமு துண்டமணி

வாயனே கந்தவனமேல்
வருமமல பரமசிவ குருபரமெய் விரதர்புகழ்
வரதவுல கருண்முருகனே. (4)

ஒன்றுசெய வொன்றாகி நாள்பலவும் வெந்துயர
வுத்தியிடை யாழ்ந்ததன்றி
யொருகடிகை யெனினுமிங் கடியரேஞ் சுகமா
வுறைந்ததுவு முண்டுகொல்லோ
வென்றுமினி யிவ்வகை நடக்குமோ மாறுமோ
வென்றுசிறி துந்தெரியலே
னேதுநி னுளக்குறிப் பாலியல்வ தன்றியெம
தெண்ணத்தி னாலுமாமோ
துன்றுயிர் செயும்பாவ புண்ணிய மெலாந்தெரிபு
துக்கசுக மேற்கவுதவுஞ்
சோதியே யாதிநடு வந்தங் கடந்தமெய்ச்
சுடரேநல் லொளிவிளக்கே
மன்றுதொறு நல்வலர் சொலுங்கலைக ளஞ்சுகம்
வழங்கிடுங் கந்தவனமே
ருமமல பரமசிவ குருபரமெய் விரதர்புகழ்
வரதவுல கருண்முருகனே. (5)

மேன்மே லரும்பத்தி கூட்டிடவு முட்கவலை
வீட்டிடவு மெண்ணினினையே
வேண்டியொழி யாதிரக் கத்துயர முன்னையிலு

மேவர மிகப்புணர்த்தா
னான்மே லியற்றுவதென் முன்னுள்ள சிற்றன்பு
நாளுக்குநா டேயவோ
நம்பினரை யோம்பிடும் வழக்கிய லிறந்ததோ
நாடுந ரெவர்க்குநகையிங்
கேன்மேவ வைத்தனை நினாதருட் சோதனைக்
கேழையுமோ ராளாவனோ
வின்னுமின் னும்பெரிது மாய்த்திடே மாய்த்திடி
லியார்மாட் டுரைத்தாறுவேன்
வான்மேவு பண்ணவரு மற்புதங் கண்டுதொழ
வந்திடுங் கந்தவனமேல்
வருமமல பரமசிவ குருபரமெய் விரதர்புகழ்
வரதவுல கருண்முருகனே. (6)

இப்போதி லுள்ளபிணி யொற்கமல் லாலின்னு
மின்னுமெவை சூழ்விக்கினு
மெள்ளளவி லேனுநி னருட்டகைமை கண்டகடை
யேனினை மறந்திடுவனோ
வெப்போது நின்றிரு வுளங்குழையு மப்போ
தெலாம்வாய்க்கு மென்றறுணிவே
யார்பிற ரிருந்திடினு மவரையருண் மூர்த்திக
ளெனச்சிறிது நம்புவேனோ
மெய்ப்போத வானந்த வெள்ளமே கள்ளமயல்
வெம்பிணிக் கோர்மருந்தே

விபுதர்கண் முடிக்க ணாளிர் மாணிக்கமே குறமின்
விழிவிருந் தயிலுமமுதே
மைப்போத காருநன் மகிழ்ந்திடு கனிட்டபுகழ்
வாய்த்திடுங் கந்தவனமேல்
வருமமல பரமசிவ குருபரமெய் விரதர்புகழ்
வரதவுல கருண்முருகனே. (7)

பெற்றார்கடஞ்சொலாற் றின்றலை நடந்திடாப்
பிள்ளையையொறுத் தடித்துப்
பின்னுறத் தளையுமிட லன்னோற் றிருத்திநற்
பெற்றியில்விடற் காதல்போற்
சற்றாயினுந் தயை யிலாவெனையு நீபெரிது
தண்டிக்கு மாறறிந்துஞ்
சர்வகா லமுநினை நினைத்திறஞ் சாதவித்
தாழ்வென்று பாழ்படுவதோ

பற்றாகு மனை மக்களாதிய பெருங்குடும்
பச்சேற்றி லுற்றழியினும்
பத்திவழு வாரெனி லவர்க்குமிரு மைக்கணும்
பலபேத வின்பமுதவும்
வற்றா வருட்பரவை யேசுத்த சாட்குண்ய
வள்ளலே கந்தவனமேல்
வருமமல பரமசிவ குருபரமெய் விரதர்புகழ்
வரதவுல கருண்முருகனே. (8)

ஐயனீ பெற்றவரு ளென்னைநீ தெய்வநீ
யடிகணீ யுறவுநீயென்
றாதரவி னம்பிய வெனைக்கொடிய மிடியாலு
மளவிறுய ரம்புரிவுறாஉம்
வெய்யநோ யாலுமொழி யாதுற வுடற்றிடனின்
மெய்யருட் கேற்றதேயோ
வேறொருவர் பாற்குறை யிரந்திடுவ னோநின்னின்
மேற்பட்ட தேவுமுண்டோ
செய்யனே மாசுர சமூகசே விதபாத
சிந்தனா தீதவநக
திமிரமல மறவந்த தேசோ மயானந்த
செகதீச பரிபூரண
மையனோய் தீர்த்திடு மருந்தே பெருங்கருணை
வாரியே கந்தவனமேல்
வருமமல பரமசிவ குருபரமெய் விரதர்புகழ்
வரதவுல கருண்முருகனே. (9)

வேலுமயி லுந்துணை யெனச்சதா காலமும்
விருப்புட னுரைக்கவருள்க
வெம்பிணிக ளாலுமிடி யாலுமுட லோடுள
மெலிந்திடா வண்ணமருள்க
காலுமுக மாறுநின தம்பவள வாயுங்
கனாவினு நினைக்கவருள்க
காலன்வரு மத்திய தினத்திலுயிர் சற்றுங்
கலங்கா திருக்கவருள்க

**மேலுமொரு தாய்வயின் விடுத்திடினு மாசைவ**
**மெய்ந்நிலையி னிற்கவருள்**
**வேறுபல வுண்டெனினு மெற்கிவைக ளேபெரிது**
**வேண்டும்வேண் டுந்தெய்வமே**
**மாலுமய னுஞ்சுருதி நாலுமுடி வோர்வரிய**
**வள்ளலே கந்தவனமேல்**
**வருமமல பரமசிவ குருபரமெய் விரதர்புகழ்**
**வரதவுல கருண்முருகனே.** (10)

~~~~~~

~~~

## யுத்தவீரர்கள் குடியேறிய இடம் வல்வெட்டித்துறை

ஆதியில் இவ்வூரில் குடியேறியவர்கள் ஊர் காவலலுக்காக இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட போர்வீரர்களே. இவ் வீரர்கள் கடற்படை, தரைப்படை இரண்டிலும் சேர்ந்திருந் தார்கள். இதுபற்றியும் வல்வெட்டித்துறை சிவன்கோயிலைக் கட்டிய திருமேனியார் வெங்கடாசலம் அவர்களின் சிறப்புப் பற்றியும் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவசம்புப் புலவர் வல்வைக்கலித்துறையில் இதுபற்றிப்பாடிச் சிறப்பித்து உள் ளார். இதுபற்றியான மேலும்விபரங்களை யாழ்ப்பாண வைபவ கௌமுதி (1918ல்)க.வேலுப்பிள்ளை என்பவரால் எழுதப்பட்ட நூலில் 65, 67, 272ம் பக்கங்களில் காண லாம்.

## வல்வைக் கலித்துறை

**கோவிற்சிறப்பு மடச்சிறப் போடை**
**குளச்சிறப்புக்**
**காவிற் சிறப்புப் புராணைச்**
**சிறப்புக் கனிந்தவருட்**

**பாவிற்சிறப்பு வெண் ணீற்றுச்**
**சிறப்பிசைப் பண் சிறப்பாற்**
**பூவிற் சிறப்பு முற்றும் வல்வை**
**யூரிற் பொலிந்தனவே.** (1)

கயற்செல்வம் வாணிகச்செல்வங்
கொடைச்செல்வங் காணிச்செல்வஞ்
கலைச்செல்வந் தானதருமச் செல்வங்
கல்விசச் செல்வங்
குலச்செல்வ மக்கண் மனைச்
செல்வஞ் சீர் செல்வங் கொண்டதபோ
பலச்செல்வமாய் வல்வை யூருக்கு
முற்றும் பலித்தனவே. (2)

மருத்துவ சாலைதண் ணீர்ப்பந்த ரானிரை
வைப்பு நிரைத்
தருத்திகழ் நீழல்வழியா
வணமன்ன சந்திரநோய்
விருத்தரனாதர் பிணியினர்
சாலைமிகக் குழுமக்
கருத்தொடு கண் புய்க்கலாதுறும்
வல்வைக்கடி நகர்க்கே (3)

கந்தவன நடுவாம்பருத்
தித்துறை காணுங்கிழக்
கந்தணவர்ப் பொழில் வல்வை
குடக்கிலனி விளைத்துச்
சிந்துவின் றென்கரைப் பாலுற்ற
மூன்றுமெய்ச் சீர் பயக்கு

மிந்தவகை நயமேனையெந்
நாட்டிலிசைத்ததுவே. (4)

நீதிமரபிற் றிருத்தொண்டரோடு
நிகழும் பத்திச்
சோதிமலர் முகவெங்கடாசலத்துங்
கவள்ளல்
பாதிமதிச் சடையான்றேவி
யோடு பயிலத்தந்த
சேதிம மொன்றையும் வல்வைச் சீரைத்
தெரிந்திடவே. (5)

விண்ணில் செல்வத்தின மண்ணியல்
செல்வமிதக்கத்துய்க்க
புண்ணிய சீலத்திருவேங்கடாசலப்
பூபன் வந்து
நண்ணியவான் குலத்தார் வாழும்
வல்வை நகரினிறுடங்
கெண்ணியல் போக நகர்
வேறிங்கியாவதி சைந்திடவே. (6)

நாணாளுஞ் செந்தமிழ் வாயருக்
        கேற்பன நல்லிசை
பூணா வணிந்து சிவபக்தியேறிப்
        பொறைமுதல்
கோணாதணிந்து தருமமன்
        றாகிக் குலவியிடு
மாணாவு லோபரைக் காணாத
        வல்வை வளநகரே. (7)

கார்காமர் கண்டத்து நம் வயித்தியேசர்
        கருணையினாற்
றீர்க்காயுளு மிட்டிசித்தியு மெய்திச்
        செறிந்தருள
நீர்க்காலெலா முத்தச் சங்கின மூர்ந்து
        நிறைந்த வல்வை
யூர்க் காவலர் வைகிலெங் களுக்கே
        பெரிதூதியமே. (8)

~~~~~~

~~~

## இராமநாதபுரம் பாற்கரசேதுபதி

### கல்லாடக்கலித்துறை

----- -----

வில்லாடன் மேருவில் வைத்தோன்
பொன்மன்றில் விழைந்துசெயு
நல்லாட னாடிடும் பாற்கர
சாமி நரேந்திரன்மேற்
கல்லாட நூலின் கருத்தை
யமைத்துக் கலித்துறையாச்
சொல்லாட வோர்மருப் பைங்கரத்
தும்பி துணைவருமே.

தேங்குமெய்த் தண்ணளி யோவாத
வாறு திருமுகமும்
வீங்கு மிராறு புயவெற்பு
நாட்டமு மேனிலைச்சீ
ரோங்கு மடிகளுஞ் சேயோன்
மயிலு முடம்பிடியும்
யாங்குமென் றந்தமி யேன்கண்ணி
னெஞ்சி னிலங்குவவே.

## நூல்

### தர்மநினைவுரைத்து வரைவுகடாதல்

சீர்முந்து பாற்கரன் வெற்பிற்
கறுத்துச் சிவந்தவிழி
வார்முந்து கொங்கை பணைத்தவொல்
கிற்றிடை மாமகடன்
றார்முந்து மோதி யிருண்ட
துரைப்பத் தமரிற்செறிப்
பேர்முந்து மன்னசிற் றூர்ச்சொற்
சிலபல வேறியவே. (1)

### தாயறிவு கூறல்

நொச்சியம் பூவுதிர் நள்ளிரு
ணாட்கழி நுன்னன்பர்த
மச்சியல் கூவிரந் தோற்றஞ்செய்
தென்றெனை யன்னைதெரீஇ
நச்சிய லைச்சினந் தோதாள்
புறத்தி னனிதுடித்தாள்
கச்சியல் பூண்முலை பாற்கர
சாமி கனவரைக்கே. (2)

### வழியொழுகி வற்புறுத்தல்

பொன்னை யாய்புகழ்ப் பாற்கர
பூபன் பொருப்பினின்பா
லின்ன னிரப்பினர்க் கீயவெங்
கான மிறந்தவர்க்கு
மின்னணி வாட விழிவெள்ளத்
தாழ்ந்த மெலிவுகண்டாற்
கன்னலந் தேமொழிக் குற்றதென்
னென்று கடுப்பர்களே. (3)

### பிரிவருமைகூறி வரைவுகடாதல்

மான்கா டினைகொய்யக் காலங்
குறித்து மலர்ந்தகணி
கான்கா ணிருவியி னன்றிகொல்
லாரிற் கலந்துபுள்ளுந்
தேன்கா னிமிர்தொடைப் பாற்கர
னன்பினிற் றீர்ந்தவர்போல்
வான்கா முறுமனைக் கேகவும்
யாமுள் வலித்தனமே. (4)

## இளைமைகூறி மறுத்தல்

முருந்து நிரைத்தபற் றோன்றாதெய்
தாது முடியளக
மருந்துற ழின்சொற் றிகழாது
நோக்கியல் வாய்த்திலகண்
டிருந்து முலைபொடி யாதிரப்
பென்னிச் சிறுமிதன்பால்
விருந்து புரந்தருள் பாற்கர
சாமிதன் வெற்பண்ணலே. (5)

## சுவடுகண்டறிதல்

புலிவாய மாக்கடிப் பீதிது
கற்பிற் புளினர்படை
நலிவாகத் தீய்த்த திவண்டுய்
நறுமலர் நற்றவத்தோர்
பொலிவாக வாசி புகன்றது
பாற்கரன் போற்றலர்போ
மெலிவார் சுரத்தழன் மாற்றிய
காற்குறி மெய்யிதுவே. (6)

## நற்றாய்வருந்தல்

இன்பெடுத் தோம்பிற நிற்கமெய்
யாவி யியல்சகியா
முன்பெடுத் தாளையுந் தீர்ந்தரும்
பாத முலையொருவ
னன்பெடுத் தாண்டகைப் பாற்கரன்
றெவ்வி லயரவிவ்வூர்
துன்பெடுத் துள்ளியைந் தாளோ
செலவெஞ் சுரத்தினிலே. (7)

## செலவுநினைந்துரைத்தல்

எல்லாரு மேத்திடும் பாற்கர
சாமி யெழில்வரையி
னல்லார் தருநடு நாளரி
தாக வடைந்திரென்றோர்
சொல்லார்வ மாய்நம் மெதிர்ப்பின்றி
யன்பரிற் றோன்றிடுமே
னில்லாம லங்கட் செலவு
முரிய நிரைவளையே. (8)

### அறத்தொடுநிற்றல்

சாய்ப்பாவை தந்துமொண் பூழியஞ்
சோறுண்டுந் தந்துஞ்செங்கை
தாய்ப்பா யலையுந்திக் கைதை
முறித்திட்டுந் தார்கொளச்செவ்
வாய்ப்பாவைக் கீந்துநின் றார்நிற்க
வீது மதிக்கவற்றோ
வாய்ப்பாடி வாழ்கண்ண னேர்தரும்
பாற்கர னத்திரிக்கே. (9)

### தேர்வரவு கண்டு மகிழ்ந்து கூறல்

நீதி யடைந்திடும் பாற்கர
வேள்வெற்பி னேரிழையீர்
சோதி யடைந்த வயிற்பெரு
மானைத் தொழுமன்பர்தேர்
வீதி யடைந்த துருட்பூழி
யாடுமின் மெய்யிசைப்பா
வோதி யடைந்தலர் தூமினும்
மேத மொழிமின்களே. (10)

## கல்விநலங் கூறல்

உந்தியு மேருவு மைந்தரு
        வுங்கண்ணு மோங்கருளு
முந்திய மூவரு மாங்கல்விச்
        செல்வந்தர் முத்தமிழ்க்குத்
தந்தியும் வாசியும் தந்திடும்
        பாற்கரன் சையமின்னே
செந்தியில் வேளருள் பெற்றாரி
        னீடுவர் சீர்மியே.        (11)

## முன்னிகழ்வுரைத்தூடறீர்த்தல்

தருவே மெரியதர் தீர்ந்தங்
        கெயிற்றியர் தங்குரம்பை
மருவேனன் மாத்துய்த் திபவெயிற்
        றிற்றலை வைத்ததண்மே
லிருவேமும் பாற்கரன் றேவையன்
        னாய்நுக ரின்பிஷக்குப்
பொருவேலன் றானுறு மின்பே
        யலது பொருந்திலதே.        (12)

நிலவு வெளிப்பட வருந்தல்

வெள்ளிய மாமதி தாழ்ந்தேநம்
பாற்கர வேந்தர்பிரான்
றெள்ளிய சீரிலெங் குந்திகழ்
வாயொன்று செய்நன்றியுண்
டுள்ளிய லன்பர்கண் ணன்னார்நங்
கண்முனுறுநடுகா ளொள்ளிய வாலறி
வுற்றமைந்தாரி னொடுங்குதியே. (13)

வரவெடுத்துரைத்தல்

அயல்வா யலரெஞ்ச நீயே
மடமக ளன்பர்பகை
முயல்வார் வெருவிட வேனோ
ரிடுதுறை முற்றுங்கொளீஇ
வியல்வாய தேர்க்குமுன் றோன்றலிற்
பாற்கரன் வெற்பன்னமே
புயல்வாழ் மனைமுற்றுங் கோடிக்க
பூணுக பூண்பனவே. (14)

## அழுங்கு தாய்க்குரைத்தல்

போக்கிய தாயுளந் தீதிரு
        வோரும் புணரமணந்
தேக்கிய விம்மனை சேர்ந்து
        வரும்வழி தேர்ந்துசொன்ன
வாக்கியல் வேத மகவும்
        பிறரும் வழாநிலையோர்
பாக்கிய மெய்தின ரூறிலை
        பாற்கரன் பாதவத்தே.    (15)

## வெறிவிலக்கல்

செந்தமிழ் வாணர்ப் புரந்திடும்
        பாற்கரத் தென்னன்வெற்பிற்
கந்த மலர்ப்பொன்னை யாறீர்த்
        திடாதுமுன் கைதந்தவர்
தந்த மயலு மிருக்க
        மறியின் றசைமிசைய
வந்தெய் வங்கற்ற போதம்
        பொறாதொர் மனமிடமே.    (16)

## உலகியல் புரைத்தல்

இக்காரம் பண்ணை மலைபிறர்க்
கீவ வெழிலுமைமா
மைக்காலன் றெவ்வரி பின்போகக்
கல்லத்தி மாழ்கிற்றில
மிக்கார் பரவிடும் பாற்கரன்
கற்கட மெய்யன்பன்பின்
புக்காளுக் கூருண்டி விட்டழல்
பேதைமை பொற்கொடியே. (17)

## மகிழ்ந்துரைத்தல்

வில்லுயர் மாமணிப் பூணணி
பாற்கர வேந்தன்வெற்பிற்
கல்லுயர் திண்புயத் தார்தந்த
வீர்ந்தழை கற்பினியல்
வல்லுயர் பொன்முலை யாளிடைத்
தேற்றிட வாட்டமுறா
தில்லுயர் மங்கலம் பூணுந்
துணையு மிலங்கியதே. (18)

## பிறைதொழுகென்றல்

மணிவான் மருமன் றுயில்பாற்
கடலிடை வந்தமுதோ
டணிவா னுலாய்நின் னுதலொத்
தரன்சடை யண்மிக்கொன்றைக்
கணிவாசந் தோய்ந்துதண் கங்கை
படியுங் கதிர்ப்பிறையைப்
பணிவாழி பாற்கர சேது
பதிவரைப் பைங்கிளியே. (19)

## ஆற்றாமை கூறல்

வனைதரு பொன்முடிப் பாற்கர
னாட்டன்ப வான்பொருட்கு
நினைதரு மெண்ணிற் படர்திவெவ்
வாடை நெருப்பெழுநா
ளினைதரு நெஞ்சிற் புலம்புறு
நம்மெல் லியற்கடைத்த
வினைதரு மாறன்றிக் காணேன்
புனைந்து விடச்சொற்களே. (20)

தன்னுட்கையாறெய்திடுகிளவி

புன்னைப் பொதும்பரிற் றம்முட்
பனைமடிப் பூவெகின
மின்னைப் பொருமயிற் பாற்கர
னாட்டுற மெய்க்கரியா
வென்னைப் புணர்ந்தவர் போக்குமற்
றீங்குழி யெய்துவது
முன்னைப் பதம்பணிந் தேன்றெரிந்
தாற்சொல் லொளிர்மதியே. (21)

வேறுபடுத்துக்கூறல்

என்னாவி யுங்கண்ணு மன்னா
ளொருத்தி யெறிசுனையின்
முன்னாட வுற்றன ளுக்குறு
வேர்வன்றி முற்றியலு
மன்னாளொ டொத்தி கணமிரு
மேவுமிங் காடுமலர்ப்
போன்னா ரிருவ ரெனப்பாற்
கரன்வரைப் பூங்கொடியே. (22)

காமமிக்ககழிபடர்கிளவி

கைதாய் பெருங்கழி யேகுரு
கேதிண் கருங்கடலே
மெய்தான் றழுவிய தண்ணந்
துறைவற்கிம் மெல்லியலுள்
வெய்தா வுடைந்தனள் பாற்கரன்
வெற்பில் விழியருவி
பொய்தாளென் னென்றெனைக் கேளீர்மெய்க்
கேண்மை பிழைத்தனிரே. (23)

இடமணித்துக்கூறிவற்புறுத்தல்

மாணிலை வேலற்கு மன்பர்க்குங்
கும்ப வரமுனிக்கு
நீணிலை யாய தமிழுக்கு
மகா நிகழெல்லைதான்
வாணிலை யுற்றநம் மூர்க்குநம்
மூர்ப்பொன் மலைக்குநங்காய்
சேணிலை யுள்ள நடுங்கலை
பாற்கரன் றெவ்வரினே. (24)

### நின்குறைநீயேசென்றுரையென்றல்

ஈயா வுலோபர் பொருளெனத்
    தேய்ந்த விடையிறச்செய்
சாயா முலையை மருவிக்
    கரவுந் தகையுமன்பு
நீயா வுரைத்துட னேர்விப்ப
    தேதகு நீர்மைவள்ளால்
வீயாத வான்புகழ்ப் பாற்கர
    சாமிதன் வெற்பினிலே. (25)

### இரவுக்குறிவேண்டேல்

புண்ணிய மேதகைப் பாற்கரன்
    வெற்பிற் புயல்பெய்கின்ற
தெண்ணியல் கல்வியி லாளரும்
    போல விருண்டதெங்குந்
திண்ணிய யானை புலியரி
    தாரி திரிவநும் மூர்க்
கண்ணிய நல்விருந் தாயினன்
    காண்முருந் தாநகையே. (26)

நகரணிமைகூறல்

உவந்தானெய் யுண்டவ னன்னீரும்
பொன்னொத்த வொள்ளிழையு
மவந்தா னில்லாவிம் மலைகடந்
தான்முன் னடைந்திடுவீர்
தவந்தா னுஞற்றுந் தவமா
யுதித்த தனாதுளத்தைச்
சிவந்தான் கொளத்தந்த பாற்கரன்
றேவைத் திருநகரே. (27)

அறியாள்போன்று நினைவுகேட்டல்

இரப்பார்கள் யாயெனும் பாற்கரன்
வெற்பி லெறிவர்கவண்
டுரைப்பார்கள் கந்துக மேற்பா
ரருவி சுனைகுடைவார்
புரப்பார் தினைசெம் மணிகொழிப்
பார்கடிப் போதுகொய்வார்
சரப்பார்வை யார்பலர் யார்கணின்
னார்வந் தராதிபனே. (28)

## சுடரோடிரத்தல்

எங்கோதை யாமுங் கிளிமுதல்
யாவு மினையக்கடத்
தங்கோர் விடலைபின் சென்றா
ளடவ னகமுங்கண்ணுங்
கொங்கோ வருமலர்த் தாமரை
போலக் குளிரச்செயாய்
செங்கோன்மைப் பாற்கரன் சீரினெங்
குந்திகழ் செஞ்சுடரே. (29)

## இன்னலெய்தல்

குகன்றா ளிறைஞ்சிடும் பாற்கரன்
வெற்பிற் குறிகள்பல
புகன்றாரும் யாயரு மாறில
வேலென் புரிவர்வைவேன்
மகன்றா னயர வெறிநோயும்
பீரமு மல்கவுறா
தகன்றா வுயிர்நிகர் வாரித்
துறைவற்கென் னாதுநெஞ்சே. (30)

நெஞ்சொடுநோதல்

பொன்னாசை யாற்றள்ளிக் கான்றடைந்
தெண்வழிப் பூவையங்க
மன்னாசை யாற்பொரு ளீட்டுதன்
மாறி மருளுநெஞ்சே
துன்னாசை யெட்டும் புகழ்ந்திடும்
பாற்கரத் துங்கன்வெற்பி
லென்னாசை சொல்லுமுன் னேற்செல்லு
மீடிபின் னென்றிடினே. (31)

ே
வழம் வினாதல்

நம்பிவந் தார்க்கருள் பாற்கரன்
வெற்பி னளினையன்னீர்
தும்பியும் புள்ளும் புயலும்
பிடியுந் தொடரமனை
யம்பி னரற்றிக் குழிகட்
டழைசெவி யாம்பலொன்று
கொம்பி னிலங்கிளைத் துற்றது
வோநுங் குளிர்புனத்தே. (32)

## உலகின்மேல் வைத்துரைத்தல்

திரங்கொண்ட வாசகப் பாற்கரன்
வெற்பினிற் செம்மகளி
ரரங்கொண்ட கட்டெய்வக் காட்சிப்
பட்டோர்க ளணிந்தெருக்கு
வரங்கொண்ட வெண்பொடி பூசுபு
பூண்டு வறியவென்பு
கரங்கொண் டருங்கிழி யூர்வர்
பனைமடற் கந்துகமே. (33)

## அல்லகுறியறிவித்தல்

பார்ப்பணைக் கும்பெடை யோடுசெங்
காலனம் பாயும்வையை
நீர்ப்பணைத் தேவைப் பதியோம்பும்
பாற்கர னேரலரிற்
கார்ப்பணைப் புன்னைக் குடம்பையின்
வைகறை காறுந்துஞ்சா
தேர்ப்பணைத் தோளி யழுங்க
வலமர லென்னுறத்தே. (34)

## நலம்புனைந்துரைத்தல்

சாலக் களியுற நீர்விழும்
பூவுட்சஞ் சாளிகங்காள்
கோலக் குகன்றனைப் பாடிடு
மன்பர் குறைதவிர்க்க
ஞாலக்கண் வைத்தருள் பாற்கரன்
றேவைநன் னாடனையார்
நீலக் குழன்மணம் போலவுண்
டாயி னிகழ்த்துமினே. (35)

## நாணிழந்துவருந்தல்

ஒன்னார் வெருவிடும் பாற்கர
னாட்டுயி ரோடுற்றவெ
னன்னாண் டறிவெற்பன் காதன்மென்
காலி னடுங்கிக்கற்பா
முன்னார்வன் காலிற் றரிப்பின்றி
வீழ்ந்தது முற்றுமந்தோ
வென்னான்செய் வேனினிப் பெண்பிறப்
பென்று மிழிபுடைத்தே. (36)

### தோழியியற்பழித்துரைத்தல்

சிரத்தை யரனடிக் கீந்திடும்
பாற்கரன் றேவையினம்
வரத்தைய னீரற வாடும்பைங்
கூழென மாழ்கிவைக
மரத்தை யணைந்திடு மூரியிற்
காட்டு மறுமனப்பொய்ப்
பரத்தைய ரில்வயி னல்குநம்
மூரன்மெய்ப் பண்பிலனே. (37)

### பொழுதுகண்டுமயங்கல்

கற்றாங் கமைந்திடும் பாற்கரன்
வெற்பிற் கதிர்ப்பிறையாம்
பற்றாங்கி யன்பர்த் தணைந்தவ
ரேங்கிப் பதைக்கச்செக்கர்ச்
சொற்றாங் கழலொ டெழுமாலை
யேயெனைச் சூழ்ந்துகொல்வா
யுற்றாங்குப் பாசறை யோர்க்கு
முளைகொ லுரைமதியே. (38)

### ஆடிடத்துயத்தல்

கண்ணா றிரண்டின னைத்தொழும்
பாற்கரக் காவலனை
யெண்ணாரி னேங்கி யினையலொன்
றேயென தின்னுரைகாண்
பெண்ணார் சிகாமணி யேமுன்னி
யாடு பெருமுழக்கத்
தண்ணா ரருவியஞ் சாரற்
கரந்திவட் சாருவனே. (39)

### விரதியரோடுரைத்தல்

தேயமெல் லாம்புகழ் பாற்கர
னாட்டிற் றிருவெண்பொடி
காயமெல் லாங்கொண்ட முக்கோற்
கரத்திர்நூங் காட்சிநன்கியா
னேயமெல் லாங்கொண்ட காளைபின்
கான்செலு நீர்மைதனை
யாயமெல் லாமகிழ் வாய்க்கேட்பக்
கூறுமி னன்னையர்க்கே. (40)

### அவயவங் கூறல்

அண்ணாந்த வம்ம மருப்பிடை
சீயஞ்செவ் வாம்பலிதழ்
கண்ணாந் தகமுக மப்போ
தலர்ந்த கடிக்கமலம்
விண்ணாந் தனித முகிலோதி
சம்பக மேனிசுவைப்
பண்ணாந் தகைமொழி பாற்கரன்
மால்வரைப் பைந்தொடிக்கே. (41)

### வன்புறையெதிரழிந்திரங்கல்

கறைவாய்ந்த கண்டத் திராமேசர்
தாளிற் கனிந்தபத்தி
முறைவாய்ந்த பாற்கர சேது
பதிபுகழ் முன்னலர்போ
லுறைவாய்ந்த கண்ணொ டிரங்கிடு
மாங்கியிற் கோங்கல்வெற்ப
னிறைவாய்ந்த கல்வி முதலின்ன
யாவு நெடிதுநன்றே. (42)

## அன்னமோடழிதல்

அன்பு கலந்துல கெல்லாந்
துயில வளியனந்தோ
நின்புக லென்றவர்த் தாங்கிடும்
பாற்கர னேரலர்போற்
றுன்பு கலந்தெய்ப் பதையன்பர்
பாலிற் சொலாதுளத்தென்
வன்பு கலந்தது சேவற
னீஇய மடக்குருவே. (43)

## சொல்லாதேகல்

விண்ணெதிர் வண்கரப் பாற்கர
னாட்டு விதித்திடிற்சூ
ளெண்ணெதி ருங்கலுழ்ம் போக்கென்
றயர்வி னெவர்சொலினுங்
கண்ணெதிர் நின்று முகங்கொளி
னோங்குங் கவன்றுயிர்க்கும்
பண்ணெதிர் சொல்லிக்கெச் சொல்லா
வுரைத்துப் படருவனே. (44)

## தெளிதல்

வணங்கல ரந்தகன் பாற்கரன்
வெற்பின் மயிலியற்குச்
சுணங்கவி ரம்மத் தொடுங்கின
கோதை சுழன்றதுள
நிணங்கமழ் வேற்கணி மைத்த
வடிக ணிலம்பற்றின
வணங்கமர் தண்முகம் வேர்த்ததற்
றாலணங் கல்லிணெஞ்சே. (45)

## கூதிர்கண்டு கவறல்

தருவினை நேர்தருங் கைத்தலப்
பாற்கர சாமிவெற்பிற்
கருவினை யுற்ற முகிலெம்
முயிரக்கன்றிக் கண்டவர்க்கும்
வெருவினை மாறுடற் றிக்கவை
யாது விரைநெஞ்சொடு
பொருவினைச் சென்றவர் கண்ணுங்
கவரப் புகுங்கொனெஞ்சே. (46)

## முகிலொடுகூறல்

நிரம்போகை மாறித் துயர்க்கடல்
வீழ்ந்தழு நேரிழைதன்
புரம்போ கலைதுணை வாகவென்
னாட்டப் பொறிகடந்து
பரம்போத மேய்ந்துநம் பாற்கர
சேது பதிவள்ளறன்
கரம்போ லுறைபெய்ய விண்ணத்
தெழுந்த கருமுகிலே. (47)

## தழைவிருப்புரைத்தல்

தேயாத வான்புகழ்ப் பாற்கரன்
வேற்பிற் சிறுமிநின்கை
வீயா மணித்தழை யைச்சென்னி
சூடி விழியிலொற்றிச்
சாயா முலைபி லணைத்து
மறந்தன டன்னையுந்தா
னீயான தன்றித் தழையான
தன்று நெடுந்தகையே. (48)

## விரவிக்கூறல்

இருமலர் கூற்றன பாற்கர
        னாட்டமு தேகழியிற்
றிருமலர்க் கள்ளைப் பெடையோடு
        துஞ்சுஞ் சிறையனமம்
மருமலர் வள்ளத் துதவுதல்
        பார்த்தொரு மன்னர்துஞ்சும்
பொருமல ராங்குறி காணினின்
        னாவி புரக்கலையே. (49)

## ஊடறணிவித்தல்

தொல்லிய றேய்வரும் பாற்கரன்
        வெற்பினிற் சூளையரைப்
புல்லிய பாணனைப் போக்கி
        யமைந்து பொறைமழலைச்
சொல்லியல் சேயை மணிமார்பி
        லேந்தித் தொடர்ந்தனான்
மல்லிய றோண்மன்னன் பாற்காண்
        பொருத்தம் வரிவளையே. (50)

### குலமுறைகூறிமறுத்தல்

நெல்லிலங்கு மோங்கும் வயனாட்டை
யாளு நெடுந்தகைநீர்
கல்லிலங்கு மோங்கும் புனக்காவன்
மானைக் கலந்தனிரே
லெல்லிலங்கு மோங்குஞ் சிவபுண்
ணியமுற்று மென்றுந்தன்னாட்
டிலங்கு மோங்க வரும்பாற்
கரன்ற னிரவியிலே. (51)

### காவற்பிரிவறிவித்தல்

விருத்திப் பொருட்கல்வி வாணரை
யுள்ள விழைவுமுற்ற
வருத்திப் பரித்திடும் பாற்கர
னேர்தரு மாண்டகைதான்
வருத்திப் பகையைப் புயவரை
மேற்கொண்ட மண்ணையின்னுந்
திருத்திப் புரக்கக் கருத்துறும்
போலுஞ் சிலைநுதலே. (52)

**உண்மகிழ்ந்துரைத்தல்**

பொருந்தனல் வெஞ்சுரம் பொன்னுக்குற்
றேன்கட் புணர்த்ததுன்புன்
வருந்தன மூழ்கத் தொடமுனம்
பாற்கர வள்ளறந்த
பெருந்தனந் தீண்டமுன் பாவல
ரொற்கம் பிரிந்ததென
மருந்தன வின்மொழி யாய்தீர்ந்த
தற்புதம் வாய்ப்பித்ததே. (53)

புனலாட்டுவித்தமைகூறிப் புலத்தல்

மன்னிலை யாவுந் திருந்திய
பாற்கரன் மால்வரைப்பொய்ப்
புன்னிலை யானைப் புனலாட்டி
யொன்றும் புரியலர்போற்
பொன்னிலை யாயவென் னில்லிற்
செறிந்த புணர்ப்பதுதான்
மின்னிலை வேலரை யென்னெனக்
கேட்குதி மென்கொடியே. (54)

## தன்னைவியந்துரைத்தல்

வீட்டிய வூலுணர் பாற்கர
        னாட்டொரு மின்னைப்புன
லாட்டிய வூர னலத்தினை
        மாற்றி யணைந்திலனேன்
மாட்டிய லென்னி லவற்றந்து
        பார்த்து வழிவிழிநீர்
காட்டி யணைய விஞமெண்ணு
        வாளெனக் காண்குவலே.        (55)

## புதல்வன்மேல்வைத்துப் புலவிதீர்த்தல்

சேயாய் குதட்டினை காணுந்தை
        போலப்பொய்ச் சிற்றனையர்
வாயார் பொதுத்தம் பலமது
        பூசிக்கு மாண்பதன்றே
போயா யிடையய ரன்றேனின்
        பேறென் பொலமுலைப்பா
றாயா யவனி புரந்திடும்
        பாற்கரன் றாணுவிலே.        (56)

## கலவிகருதிப்புலத்தல்

சும்மையெல் லாம்புகழ் பாற்கர
        னாட்டன்ப சூளையரை
வெம்மை யறாக்கிழப் பார்ப்பானைப்
        பாணனை விட்டறிவார்
செம்மை யகத்தரிற் செம்மாலை
        மாது திகழ்ந்தெதிர
வெம்மையும் நோக்கிச் சிறிதுகண்
        ணிவ்வில்லி லென்னுற்றதே.        (57)

## வழிபாடுகூறல்

பாவும் பொருளு முடலு
        முயிரும் பழமுமதின்
மேவுஞ் சுவையு மெனநின்ற
        தான்முனி மெய்ப்பசுவுங்
காவும் பொருவுங்கைப் பாற்கர
        னாட்டன்பர் கட்கமுங்கூ
ரேவும் புரைவிழி யாள்கற்பி
        னிற்பரென் னீன்றவளே.        (58)

### ஆதாரங்கூறல்

கற்றார்கள் கண்ணிகர் பாற்கர
　　னாட்டிற் கழனிரசு
முற்றார் பரன்முரம் பார
　　மரம்பை முதுகள்ளிகள்
சுற்றாருங் காஞ்சி மருதந்தென்
　　கால்கடுஞ் சூறைவள்ளால்
பற்றா வுயிரொத்து நின்னுட
　　னேகுநம் பான்மொழிக்கே. (59)

### முகங்கண்டுமகிழ்தல்

கண்டக ரந்தகன் பாற்கரன்
　　வெற்பிற் களங்கமெய்திக்
குண்டகல் வாரிப் பிறந்து
　　பணிக்கஞ்சிக் கோடிமெய்தேய்ப்
புண்டக நொந்த முழுமதி
　　யொப்புறு மோவிளர்த்தி
முண்டக மின்னமு தோவா
　　விவடன் முகமதிக்கே. (60)

### கற்புப்பயப்புரைத்தல்

ஒருகாலுந் தெய்வமென் றுன்னா
        வறக்கற் புடையணம்மான்
முருகார் தொடையண்ண லெண்ணின்
        முனைப்புகு மும்மதயா
றருகாத தந்திதன் பந்திக்க
        ணேவந் தருந்தியிடுந்
திருகாத மெய்மனப் பாற்கர
        சாமி சிலம்பினிலே. (61)

### வாழ்க்கைநலங்கூறல்

அன்னாய் கடந்த தவள்கற்
        புனையுமவ் வன்பர்குடை
நுன்னா யகனையின் னின்னிலை
        வான்பொறை நோன்புவியைப்
பொன்னார் மணியுரப் பாற்கர
        னாட்டவர் போர்ப்பரித்தேர்
துன்னார் திறைச்செலி னுங்கட
        வாதுதன் றொன்னிலையே. (62)

### பள்ளியிடத்தூடல்

நல்லஞ் செழுத்துண்மை முற்றுணர்
பாற்கர னாட்டன்பர்க்கு
வல்லஞ் செழின்முலை கண்முகந்
தேஞ்சொலின் மைந்தர்ப்பிணித்
தில்லஞ் செழும்பொன்னிற் காட்டையிற்
காட்டு மிளநகையார்
புல்லஞ் செயவெறி யோமுட்
டவறியென் போந்ததிங்கே. (63)

### வழிப்படுத்துரைத்தல்

தாயார் துயரமொழித் தாயங்
கடந்து தமிற்றமிஷர்
வாயா ரலரொழித் தோம்புவ
வோம்பி வருவனும்பாற்
றாயார் புகழ்முத்து ராமலிங்
கேந்திரன் றொல்லைத்தவச்
சேயாகி வந்தருள் பாற்கர
னாட்டினிற் சேர்மின்களே. (64)

## கடலிடைவைத்துத் துயரறிவித்தல்

பொறியா ரமுத மதியைத்தந்
தாய்கற் புணர்ந்தனையாய்ச்
சிறியா யலைமகப் பேற்றின்ன
றேர்வைநஞ் சேயிழைமா
லறியாய் கொலுட்குளி ரத்தீக்
குணைத்துட னார்ப்படங்காய்
நெறியார் பெரும்புகழ்ப் பாற்கர
னாட்டு நெடுங்கடலே. (65)

## பிரிவுணர்த்தல்

சொற்பிரி யாநிலைப் பாற்கர
னாட்டிற் றெகினிதிய
மிற்பிரி யாத கதவடைப்
பாரு மிருங்கையுறாஉ
மற்பிரி யாவமு தூற்றிடு
வாருமுண் டாயினன்றோ
நிற்பிரி வுள்ளு மனவுள
னாகுவ னேரிழையே. (66)

### ஊடனீடவாடியுரைத்தல்

நடுநிலை நின்றிடும் பாற்கர
நாட்டு நளிர்கழியி
னெடுநிலை யாய வுலகத்
துயிரை நிதங்கவருங்
கொடுநிலைக் கூற்ற மகளாய
வாறு குறிப்பனென்னின்
விடுநிலைப் பாலனல் லான்முன்
மருவ விழையலனே. (67)

### பங்கயத்தோடு பரிவுற்றுரைத்தல்

நின்னா யகன்மறை யத்திரு
வோடு ஞிமிறொடுநள்
ளென்னாண் மரீஇத்துஞ் சுழிக்காணின்
சொப்பனத் தன்பர்க்கழி
முன்னான தேரோடுங் கண்டேனென்
பாயெனின் முண்டகமே
யென்னா ருளமெய்தும் பாற்கரற்
பாடுந ரின்பினையே. (68)

## பதிபரிசுரைத்தல்

வரத்திய லோங்கிய பாற்கர
          னாட்டு வளவயல்பார்
தரத்தியல் வையைப் பெருக்கது
          பார்மலர்த் தண்டலைபார்
புரத்தியல் பாரன்ன சத்திரம்
          பார்செல்வர் பொன்மனைபார்
சரத்திய னோக்கன மேபார்
          தகுங்கல்விச் சாலைகளே. (69)

## தேறாதுபுலம்பல்

தொன்னாணெஞ் சைக்கரி வைத்துயிர்
          நீயென்ற சூள்பிழைப்ப
தன்னார் தவறன்று காலக்
          குறிகொன்மற் றக்குறியை
முன்னார் வினையின் மனந்தடு
          மாறிப்பின் முன்குறித்த
வென்னார் மதிகொலென் பாற்கர
          னாட்டன்ன மேசெய்வதே. (70)

### பொழுதுகண்டுமயங்கல்

எவ்வாய்நின் றோற்றம் பகைமேற்சென்
றாருட னென்னளவோ
நைவா விருதிணை யாவிக்கு
நின்னி னணுகிற்றின்னும்
வெவ்வால மாகி யிருண்டது
பார்மொக்குண் மேயதுவிண்
செவ்வான மாலைமெய்ப் பாற்கரன்
வெற்பிற் றெரிந்துசொன்மே. (71)

### வாய்மைகூறி வருத்தந்தணித்தல்

தினந்தான மோம்பிடும் பாற்கர
னாட்டு திகழ்வளைமுத்
தனந்தான் றருமண்ட மென்றணைக்
குங்கழி யம்புலம்பர்
முனந்தா னணைந்தவச் சூளோ
டணைந்த முதமறந்து
மனந்தான் ரிறிந்து தணக்க
வறிகிலம் வாணுதலே. (72)

## அயலறிவுரைத்தவளழுக்கமெய்தல்

வெற்பொன்று மெய்க்குணப் பாற்கர
னாட்டிவண் மேவிச்சொல
வற்பொன் றிவட்கவ ளூரனைத்
தந்த தருங்கலைகள்
பொற்பொன்று வாணிக் கரக்கியர்
தந்தது போல்வதன்று
கற்பொன் றிவடுணை யாய்ப்பெற்ற
தென்பது காண்டகுமே. (73)

## பிரிந்தமை கூறல்

குருவார் தருங்கதி ராயிரப்
பானு குலத்துதித்த
திருவார் மணிமுடிப் பாற்கர
சாமிதன் றேவையன்னாய்
செருவா ரயிலன்பர் தானை
யுடற்றுஞ் செழுங்கனலான்
மருவா ரிடுமதில் மும்மதில்
பட்ட வகைபடுமே. (74)

**கலக்கங்கண்டுரைத்தல்**

குலந்தரும் பாற்கரன் றேவையன்
னாட்குக் குரிசில்சொற்ற
புலந்தருங் கல்வியொன் றுண்டென்ற
சொற்கல்விப் பொற்பிலார்க்கு
நலந்தருங் கல்வியர் சொல்லா
யுயிர்க்கித நாடுநர்க்குச்
சலந்தரும் வெங்கொலைச் சொல்லாய்ச்
செவியினைச் சார்ந்ததுவே. (75)

**முன்பணிக்கு நொந்துரைத்தல்**

பனியாருக் காடி யனலுதல்
கையிற் பரித்ததைக்கன்
முனியார்பெண் ணைப்பிரி யார்கடல்
காயு முழுநெருப்பிற்
றனியா ருயிரில பாற்கரன்
கல்லிலெற் றந்தவடா
னனியார்வ மின்றி மகப்பெற
லாம்வர நண்ணினளே. (76)

### மறவாமைகூறல்

நாடிய நல்லவர்க் கின்பருள்
பாற்கர னாகமின்னே
தோடியல் வள்ளை வனசங்
குவளை துணைச்செப்பொடே
யேடியல் சஞ்சன் படையா
வொரோவநின் றென்னச்சய
நீடிய பாசறைக் கண்ணுமென்
கண்ணெஞ்சி னேர்ந்தனளே. (77)

### அணைந்தழியுடல்

வள்ளற் றகைதிகழ் பாற்கரன்
வெற்பினின் மார்புற்றவிவ்
வெள்ளப் படாமுலை நன்ன
ரிழந்த தெனமெலிந்துன்
னுள்ளக் களியினர் நிற்பகர்
வார்செற்ற மூரவற்றாற்
கள்ளப் புணர்ச்சி யுகவேமன்
றீண்டலென் கான்மலரே. (78)

## பொறையுவந் துரைத்தல்

வேளிற் றிகலெழிற் பாற்கரன்
வெற்பன்னர் வேசியர்தங்
கோளிற் றிகழ்மனை செல்லவே
னெஞ்சங் குலையிலவர்
தோளிற் றிகழ்ந்தும் பிரிவிற்
கலுழ்ந்துந் தொடைமறைந்துஞ்
சூளிற் றிகழ்ந்துநின் றாட்கென்
கொலாமினித் தொல்லுயிரே. (79)

## வாயிலவர் வாழ்த்தல்

காழியர் கோன்முத லோர்ப்புகழ்
பாற்கரன் கல்லிலிவ்விற்
கேழிய லோவிய வின்முன்றில்
வாசங் கெழுமுமுன்றி
றோழிய ராண்டைக் கலதிய
ராவைய சூழ்நவப்பொய்
யாழியல் பாணனொ டெய்தப்
பெரிதுடை யேந்தவமே. (80)

## வறும்புனங்கண்டு வருந்தல்

என்போ லலந்திர் புனமு
மெலிந்த தெனின்னி ழலா
யின்போகை தந்ததெய் வத்தேனிங்
கில்லை யிடைபி றிதோ
வன்போ தகப்படைப் பாற்கர
னாட்டுண்மை வாய்திறமின்
பின்போக லீர்கிளி யேயுழை
யேமெய்ப் பிரமரமே. (81)

## நெஞ்சோடு வருந்தல்

போன விடந்தொறும் போமோ
விடையிற் புகாதுறுமோ
வானவ ருந்தவத் தாமோபன்
னாளங் கமைந்தெய்துமோ
மான விருங்கலப் பாற்கர
னாட்டு மலர்ப்புன்னையங்
கானலிற் சூடுறந் தார்தேர்பின்
சென்றவென் கன்னெஞ்சமே (82)

### காப்புச்சிறைமிக்க கையறுகிளவி

இருளுறை நீந்திப் பலவிடர்
நீந்தியெம் மிற்புறஞ்சேர்
பொருளுறை யூரனைத் துஞ்சா
வனைபுறம் போக்கியவா
றருளுறை பாற்கர சாமிபொன்
மன்றுற்ற வான்றவரை
மருளுறை வஞ்சர் புறத்தோட்ட
நிற்பதின் மா கொடிதே. (83)

### மணமுரசுகேட்டு மகிழ்ந்துரைத்தல்

தாதா வெனப்படும் பாற்கரன்
வெற்பர் தகைவரவு
மூதா வுரைப்பது தூமின்கள்
பூவு முழுப்பொரியும்
போதார் நிறைகுடம் பூரிமி
னேற்றுமின் பூஞ்சுடர்கள்
காதார் விழிமண மென்றார்ப்ப
தில்லிற் கடிமுரசே. (84)

## வாய்மொழிகூறித் தலைமகள்வருந்தல்

காட்டி யிடத்தெய்வம் பாற்கரன்
வெற்பர் கரிவைத்துச்சூ
ணாட்டி யுவந்துண்டு பூழியஞ்
சோறு நயஞ்செய்துப
ராட்டி யணைந்துயி ரொன்றென்
றிருந்தன ரன்றின்றெலாம்
வீட்டி யறப்பொய்த் தனர்சான்ற
தக்கவர் மெய்ம்மனமே. (85)

## தோழியியற்பழித்தல்

சென்றா நதிவிழ வென்றாள்பொய்
யாளன்றிச் சீர்மெய்யைநீ
யுன்றாரை யத்து முகக்கவிழ்
வொன்ற வுறாமொழியென்
குன்றா வுளஞ்சுட்ட பாற்கரன்
வெற்பினக் கோலவஞ்சி
முன்றா னடையிற் பெறுமோ
குளிரு முடிமன்னனே. (86)

## புனலாட்டுவித்தமைகூறிப் புலத்தல்

மதியிற் றிகழ்குடைப் பாற்கரன்
    வெற்ப மனங்கவர்த்துச்
சதியிற் றலையணை யாட்டிச்
    சிறப்பித்துத் தாழ்ந்துற்றனை
விதியிற் றிரிவந்தவற் றுக்கிட
    மாமவண் மீட்டும்புகு
நதியிற் புதுப்புன லன்றேயில்
    வில்ல நராதிபனே. (87)

## வருத்தந்தணித்தல்

தேற்றம் பெறுமதிப் பாற்கர
    னாட்டிளஞ் சேயைப்பெருந்
தோற்றம் புலன்கல்வி நீதி
    யிவற்றைத் துவரவிட்ட
மாற்றங் கனிந்த கவிரக
    வூரன் மணிவடந்தா
ழேற்றம் பெறுமிம் முலைபுல்லு
    மோவென் றினையநெஞ்சே. (88)

## பாணற்புலந்துரைத்தல்

வளையார்கை யாய்புகழ்ப் பாற்கர
னாட்டென் மணிமுன்றினின்
றிளையார் துனியி லியம்பின
வண்ணற் கிலாப்பலதோ
மளையா வவற்கியல் பாண்மக
னேதில னாகக்களி
திளையா வுரைத்த புனைந்துரை
சேடற்குஞ் செப்பரிதே. (89)

## பாணனைப்புடைத்தமை பாங்கிக்குரைத்தல்

பங்கய வாண்முக வூரனைப்
பாற்கரன் பாய்புனனாட்
டெங்கயர் பாண்டொழிற் புல்ல
னிவன்மற் றெமக்குமன்னோ
தங்கையைச் சேர்ந்தன னென்னப்
புடைப்பத் தணந்தெய்தினா
னங்கை படப்பையிற் காய்க்குற்
றெய்த்தோடு நரியிடரே. (90)

## பாணன் வரவுரைத்தல்

இயலணி பாற்கரன் வெற்பிற்
கடிதரு மிற்புகுத்து
வயலணி யூரனை யூண்பெற
வேண்டி வளப்பந்தர்யாழ்
மயலணி யின்னிசை பாடவொர்
பால்வந்த மாண்பினற்குக்
கயலணி கண்ணி யுதவிட
வேண்டுமிக் கல்லையின்னே. (91)

## அன்னமோடயர்தல்

என்று மிதஞ்செயும் பாற்கரன்
வெற்பிவ ளின்னறனி
லொன்று முசாவி யிரங்கலென்
னாதொ ருழிவளர்ந்து
நன்று பயின்று மிவணடை
வாய்ந்து நயந்தவன்பு
குன்றுமச் சூளினர் தம்மிவ
மன்னங் கொடியதுவே. (92)

### வழியருமைகூறிமறுத்தல்

அரியோ வெனப்புவி யோம்பிடும்
பாற்கர வண்ணல்வெற்பிற்
புரியோ வியமனை யாள்பொன்
னகரப் புறத்திலன்பிற்
கரியோடுண் ணார்பழி யுண்ணே
ரிருளிடைக் காளமுகிற்
சரியோ துணிந்தறிந் தேகன்மின்
மேலைத் தகையவரே. (93)

### பருவங்காட்டி வற்புறுத்தல்

பாடற் றொடைபுனை பாற்கர
மாலைப் பணியவர்போல்
வாடற் றிறமென்னை வந்தது
கார்தெவ் வயந்தெறுந்தே
ராடற் றகையவர்க் கெண்ணித்
தினமண் ணகங்கிளைத்த
கோடற் றரவிறற் செங்கரங்
கூப்புதி கோல்வளையே. (94)

### பள்ளியிடத்தூடல்

பொன்மேக ஞாலத் தமர்ந்தன
பாற்கர பூபன்வெற்பி
லென்மேனின் னிற்பெரி தன்பின
ராய விளைஞர்கண்டா
னின்மே தகுமன்பு மின்புங்
குறையு நிருபவற்றாற்
சென்மேயங் கென்னை தொடர்பீங்
கொைதடி தீண்டலையே. (95)

### நெறிவிலக்கிக்கூறல்

கானா ரதரின வேடர்
விலங்கு கலந்ததிரு
டேனார் தினைநுண் பதமுய
லூனுண்டு சிற்றிலிலிம்
மானாரு நீரு மரைத்தோற்
றுயின்றினன் வந்திடமுன்
வானாடு நேர்நும் பதிச்சென்மின்
பாற்கரன் மால்வெற்பரே. (96)

ஆறுபார்த்துற்ற வச்சக்கிளவி

நல்லார் மகிழ்மத நின்னுயிர்க்
கேத நணுகினம
தல்லார் குழறகு மஃதே
திணிந்த வரையிருள்வா
யொல்லா விலங்குங் கிராதரும்
பேயு முலவும்வெங்கான்
செல்லா தொழிமதி பாற்கர
மன்னன் சிலம்பினிலே. (97)

மெலிவுகண்டு செவிலிகூறல்

கலைக்காட்சி யாமதிப் பாற்கரன்
வெற்பிற் கதியுறுமே
னிலைக்காட்சி யாரினம் முட்பார்வை
யும்பிற நீர்மையன
கொலைக்காட்சி யாகிய தெவ்வடு
வேற்கைக் குகன்றகர
மலைக்காட்சி மேவுற் றனளாதல்
வேண்டு மடமயிலே. (98)

## தேர்வுவரவுகூறல்

சூன்மேகங் கூடிப் பரித்தேர்நின்
கற்பிற் றுலங்குதெருக்
கான்மேய தன்பர் வரவினைக்
கேர்புக னிந்தசுவைத்
தேன்மேவு மென்மொழி யாயத்து
மேவுக தேவர்நரர்
மேன்மேலும் வாழ்த்திடும் பாற்கர
சாமிதன் வெற்பினிலே. (99)

## தூதுகண்டழுங்கல்

ஊறிய வின்பமன் பாதிதந்
தேன்னிணைப் புள்ளமுதற்
கூறிய கொண்டவ ரின்னுங்
கொடுப்பது கொள்வதுண்டோ
வீறிய தூத ரினிதெனிற்
செய்குறி விட்டுமறை
தேறிய செப்புமின் பாற்கரன்
சீரினிற் சீர்முந்துமே. (100)

~~~~~~~~~

~~~~

# புலோலி நான்மணிமாலை

வடமராட்சி பருத்தித்துறையில் புலோலி பசுபதீஸ்வரர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள பசுபதீஸ்வரர் பருவதவர்த்தினி அம்பாள் விநாயகர் முருகன் ஆகிய நால்வருக்கும் வெண்பா கலித்துறை, எழுசீர்விருத்தம் ஆகிய பாடல்களால் சிவசம்புப் புலவர் பாடியுள்ளார். இப் பாடல்கள் யாவும் செய்யுள் இலக்கணவிதி பிறளாது விளங்குகின்றன. இதன் பொருள் விளங்குவது கடினமாக விருத்தலின் இப்பாடல்களின் பொருளை இலகுவாக அறியும்பொருட்டு பசுபதீஸ்ரர் ஆலய ஓதுவார் பரம்பரையின் 7ம் தலைமுறையினரான பண்டிதர் சித்தாந்த சைவப் புலவர், ம.சா.வேதாரணியக் குருக்கள் அவர் களைக் கொண்டு ஒரு பொழிப்புரையும் எழுதுவித்து இப் பிரபந்தத்தை தேவஸ்தானத்தினர் வெளியிட்டுள்ளனர்.

# சிவசம்புப் புலவர் பாடியருளிய பருத்தித்துறை புலோலி நால்வர் நான்மணி மாலை மூலமும் ம.ச.வேதாரணியக் குருக்கள் செய்த பொழிப்புரையும்

காப்பு

**வெண்பா**

**பொங்கு புகழ்ச் செல்வப் புலோலியமர் சங்கரனார்
சங்கரி யைங்கைக் கடவுள் சத்தியவிர் ~ செங்கரனார்
மேனான் மணிமாலை வெள்ளறிவேன் பாடவவர்
தூநாண் மலர்த்தா டுணை.**

(இ ள்) புகழ் பொங்கிவிளங்குவதும் செல்வம் மலிந்து விளங்குவதுமாகிய புலோலிநகரின்கண்ணே கோயில் கொண்டெழுந்தருளிக் கருணைபாலிக்கும், சங்கரன், சங்கரி, ஐந்து கைக்கடவுள், வேற்படை விளங்கும் சிவந்த கையை யுடைய முருகன், ஆகிய நான்கு கடவுளர்மீதும் நான் மணிமாலை என்னும் பிரபந்தத்தை வெள்ளறிவுடைய நான் பாட அந்த நான்கு கடவுளரின் சுத்தமான அன்றலர்ந்த மலர் போன்ற பாதங்கள் துணைசெய்வதாக.

## நூல்
### வெண்பா

**பூமேவு கொன்றைப் புரிசடையா னைம்முகத்தான்**
**றேமேவு வேதத் திருவாயான் ~ காமேவு**
**பொன்னகர மன்ன புலோலிப் பசுபதியே**
**மன்னியசீ ராதி பகவன்.**

(இ~ள்) கொன்றை மலர் அணியப்பெற்ற முறுகிய சடையை யும் ஐந்து திருமுகங்களையும், தெய்வீகத் தன்மையைத் தர வல்ல வேதத்தை ஓதுகின்ற திருவாயையுங் கொண்டு, ஐந்த ருச்சோலையோடு விளங்கும் சுவர்க்கலோகம் போலக் காட்சி தரும் புலோலிநகர்ச் சிவாலயத்தில் எழுந்தருளியிருக்கும் பசு பதியே நிலைபெற்ற சிறப்புடைய முழுமுதற் கடவுள். (1)

### கலித்துறை

**வன்கண் ணனையர்க்கின்றே மைந்தர் மாட்டிலென்**
**மட்டிலென்று**
**முன்கண்ணனையதுண்டாயதென் னேமயிலூர்ந்து வரு**
**மென்கண் ணனைய புலோலி யிறையவனே**
**மன்கண் ணனையண்ண னாக்கொண்டவேம மலைவஞ்சியே**

(இ ள்) நல்லவர்களிடத்திலேயன்றி, வன்கண்ணர் கூட்டத்தில் செல்லாத நின்கண்ணருட்பார்வை, என்னிடத்

தில் என்றும் பதியப்பெற்ற தென்னேயதிசயம், மயில்வாக னத்தை செலுத்திக்கொண்டு வருகின்றவரும், என்னுடைய கண்போன் றவருமாகிய முருகனுடைய தாயே, புலோலி நகரை ஆழ்பவளே, நிலைபெற்ற விஷ்ணுமூர்த் தியை அண்ணனாகக் கொண்டு பொன்மயமான இமய மலையில் அவதரித்த வஞ்சிக் கொடிபோன்ற உமையே.

(02)

## எழுசீர் விருத்தம்

**வஞ்சநெஞ் சத்து மாற்றலர் துயர்க்கு**
**மாண்பின் ரிரங்குதலென்று**
**மெஞ்சல வாக வென்றுயர்க் கினு நீ**
**யிரங்குறா திருக்குமா றென்னே**
**நஞ்சொடு புரையு மஞ்சன நயன**
**நாரியர் குழலென விருண்ட**
**மஞ்சுதுஞ் சிடுமிஞ் சித்திருப் புலோலி**
**வழுவைமா முகத்துவா னவனே.**

(இ~ள்) நஞ்சுக்கு நிகரான மைதீட்டப்பட்ட கண் களையுடைய பெண்களின் கூந்தல்போன்று கருமையான முகில்கள் படியும் உயர்ந்த மதில்கள் சூழ்ந்து விளங்கும், தெய்வத்தன்மை பொருந்திய புலோலி நகரில் வீற்றிருக்கும் பெரிய யானையின் முகத்தைக்கொண்ட விநாயகக்கடவுளே! வஞ்சநெஞ்சத்து பகைவர்கள் செய்யுந் துன்பத்தைக் கண்டு தகுதிவாய்ந்த பெரியோர்கள் இரக்கம் கொள்வது எக்காலத்

தும் குறைவில்லாது இருந்தும் என்னுடைய துன்பத்திற்கு சுவாமி நீ இரங்காதிருக்கும் காரணம் யாதோ?

(3)

**அகவல்**

**வானக ரிதுவென வளம்பல படைத்து**
**மேனிமிர் புலோலி வியன் றிருத் தளியினும்**
**வீறிய வான்மைய விபுதருள் ளுந்திக**
**மூறு குணங்களா மாறுமுகத்தோய்**
**தத்துவத் தொகை தொறுஞ்சார்ந்துள புவன**
**மத்தனை களும்புரந் தாண்டிடு மாணையோ**
**யெத்தனை தவத்தினு மியுஞ்சுரர் காணாச்**
**சுத்தமெய் காட்டுபு சூரனை யாண்டோய்**
**சுரர்சிறை விடானெனல் துணிந்து மொற்றாய்**
**தரியலன் பாலொரு தம்பியை விடுத்தோ**
**யண்டலர் சூழ்வா லடலுடைப் பின்னவர்க்**
**கொண்டுள பலதிறக் குறைகளை முடித்தோய்**
**மாசா ரவுணர்கள் வரமுதற் பலவு**
**மாசான் சொலவறி யாரில் வினாவினோ**
**யருண கிரியா ரணிமணி வாயெழூஉக்**
**தெருணயச் சுவைநறாத் திருச்செவி மடுத்தோய்**
**கருங்கடல் குடித்த கரத்தமா முனிக்குப்**
**பெருங்குடி லைப்பொருள் பேசிய பெரியோய்**
**ஐந்திசைக் கருவிய லாதியிற் படுமரிச்**
**செந்துவர் வாய்ப்புயல் சிறுமியர்க் கருளினோய்**

**வண்ணத் திங்கண் மதிமுகச் சசிபுண**
**ரண்ணற் றவளைவிண் ணங்குடி யேற்றினாய்**
**வேடுவ ருளத்திலும் விழியலு மறைகளு**
**நாடருந் திருவுரு நன்குற நாட்டினோ**
**யல்கலி னெட்டுயிர்ப் பனிலமேன் மோத**
**மல்கிய பெரும்பிணி வன்னிக னற்ற**
**நல்குர வென்னு நஞ்சு தலைக்கொளப்**
**பல்நுரைச் சஞ்சலப் பரவையுட் டாழ்ந்தவிப்**
**பாவியைக் களையெலாம் பாற**
**வாவெனக் கடவனின் மாணருட்கடனே.**

(இ~ள்) சுவர்க்கவுலகம் இது எனச்சொல்லுந் தரத்த தான பல வளப்பங்களையுந் தன்னகத்தே கொண்டு மேன்மையோடு உயர்ந்துமிளரும் புலோலி நகர் ஆலயத்தில் பெருமையோடு எழுந்தருளியிருக்கும் உண்மைப்பொருளாகிய பசுபதீஸ்வரனிடத்து பொருந்திய ஆறுகுணங்களும் ஆறு முகங்களாக உடையவரே, தந்துவக்கூட்டத்தினால் உண் டாய உலகங்கள் எத்தனையோ, அத்தனையும் கோத்தா ளும் ஆஞ்ஞாசக்கரத்தை உடையவரே, எத்தனையோ தவத் தைச் செய்துங்கூட இன்னுமும் தேவர்கள் காணமுடியாத சுத்தமான திருவுருவைக் காண்பித்துச் சூரனை ஆட் கொண்டவரே, சூரன் தேவர்களைச் சிறையின்னின்றும் விடான் என்பது தெரிந்தும், பொறுமையற்றவனாகிய சூரனிடத்து ஒப்பற்ற தம்பியை தூதாக அனுப்பியவரே, பகை வர்களாகிய அசுரர் சூட்சியால் தேவர்கள் கொண்டுள்ள பல வகைப்பட்ட குறைகளை வலிமையுடைய தம்பியரைக் கொண்டு நீக்கியவரே, குற்றமுடைய அசுரர்கள் பெற்றுக்

கொண்டவரம் முதலாகிய வரலாறுகள் அனைத்தையும், குரு வாகிய வியாழபகவான் கூற அறியாதவர்களைப் போல கேட்டருளியவரே, அருணகிரி நாதருடைய அழகிய மாணிக்கமணி போன்ற வாயின்னின்றும் எழுந்த தெளிவான சொற்சுவை பொருட்சுவை ஆகிய சுவையோடு கூடிய சொன் மலர்தேனைத் திருச்செவியினால் ஏற்றருளியவரே, கருநிறங் கொண்ட கடல்நீர் முழுவதையும் ஒரே முறையில் அடக்கி ஆசமனஞ் செய்த அகத்திய மகாமுனிவருக்குப் பெருமையாகிய பிரணவத்தின் பொருளை உபதேசித்த பெருந் தகையே, முற்காலத்தில் விஷ்ணுமூர்த்தியின் பிள்ளைகளான சிவந்த வாயையுடைய சிறுமியர்க்கு ஐவகைப் பட்ட கருவி களின்னின்றும் எழுகின்ற இனியஇசை என்னுங் காற்றை ரசிக்கும்படி அருள்செய்தவரே திங்கள் என்னும் பெயரோடு கூடிய அழகிய பூரணச்சந்திரன் போன்ற முகத்தையுடைய இந்திராணியைச் சேருகின்ற அரசனாகிய இந்திரனை அழகிய சுவர்க்கத்தில் குடியேற்றி வைத்தவரே, வேதங்களி னாலும் தேடுதற்கரிய திருவடியை வேடுவர்களின் உள்ள திலும் கண்களிலும் நன்றாநிலை நிறுத்தியவரே, துன் பத்தினால் எழுகின்ற பெருமூச்சுக் காற்றானது மென்மேலும் மோத்மிகுதியான பெருநோய் என்னும் நெருப்புச்சுட வறுமை யாகிய நஞ்சு தலைக்கேற இவ்வாறான பல திறப்பட்ட துன்பம்மாகிய சமுத்திரத்தில் ஆழ்ந்துகிடக்கின்ற பாவியாகிய என்னைப் பிடித்துள்ள துன்பமாகிய கணைகள் எல்லாம் அழியும்பொருட்டு ஒருதரம் வாவென்று அழைப்பது தேவரீ ருடைய பெரிய அருளின் கடமையேயாம்.

(04)

**வெண்பா**

**கடயகத் தோலாடை கடனஞ் சமுத**
**மிடக்கயமு மூர்த்தியும் வெள்ளேறு — தடக்கயமேற்**
**கஞ்ச மலருங் கிவினார் புலோலியரற்**
**கஞ்சு தொழி லாறு குணமாம்.**

(இ-ள்) விசாலமாகிய தாடகத்தின்மேல் தாமரை மலர்ந்தழகு தவழ் புலோலிநகரில் மதசலம் பொழியும் யானை யின் தோலை ஆடையாகவும் கடலிலெழுந்த நஞ்சை அமுதமாக அடக்கிய கண்டத்தையும், வெண்ணிற இடபத்தை வாகனமாகவும் கொண்டு எழுந்தருளியிருக்கும் பசுபதிப் பெருமான், ஐந்தொழிலோடறு குணமுடையராம். (5)

**கலித்துறை**

**ஆம்பணி நின்றளிச் செய்கிலர் செங்கோளரவிந்தத்தா**
**டாம்பணி யார்பசித் தார்க்கிரங் காரிவர் சம்பவ மென்**
**றீம்பணி கர்த்த சொன் மானே புலோலித் திருப்பதியிற்**
**பாம்பணி வேணிப் பரனோ டமர்ந்தருள் பைந் தொடியே.**

(இ-ள்) புலோலித்திருத்தலத்தில் பாம்பை அணிந்த சடாபாரத்தையுடைய பரம்பொருளோடு எழுந்தருளியிருந்து அருள்பலிக்கும், பசிய வளையலை அணிந்த மானின் பார்வையைக் கொண்ட அம்மே, சிறந்தபணியை ஏற்றருள் செய்யும் கர்த்தாவே, செய்யவேண்டியதான பணிகளைச் செய்து அன்பு செலுத்தாதவரும் சிவந்த தாமரைமலர்

போன்ற திருவடிகளை தாங்கள் வணங்காதவர்களும், பசித்திருப்பவர்கட்கு இரங்கா தவர்களுமாகிய இவர்களது செயல்தான் என்னே சொல்லி யருளுக (06)

## ஏழுசீர்விருத்தம்

**தோடியமர் துணைக்கைப் பிணைவிழிச் செவ்வாய்ச்**
**சுரமட மங்கையர் துவன்றிப்**
**படியமர் மகளிர் பாற் சிவபத்தி**
**பயில்வுறும் புலோலியம் பதியான்**
**பொடியமர் வடிவப் பரமன்முற் பயந்த**
**புண்ணியன் வெண்ணிலா முடியோ**
**னடியமர் பத்தித் திருத்தொண்டர் பெறும்பே**
**றளந்திடக் கிடந்துள தன்றே**

(இ-ள்) வளையல் பொருந்திய சோடாகிய கைக ளையும் பெண்மானின் கண்களையொத்த கண்களையும், சிவந்த வாயையும் உடைய மடத்தன்மையோடு கூடிய தேவப் பெண்கள் கூடி பூமியிலுள்ள பெண்களிடத்து சிவபத்தியைப் பயிற்றும் அழகிய புலோலி நகரில் எழுந்தருளி இருப்பவரும், திருநீறு அணியப்பெற்ற திரு மேனியையுடை யவரும் ஆகிய பரம்பொருள் முதலிற் பெற்றவரும் வெண் ணிறமுடைய சந்திரனை முடியிலணிந்த புண்ணிய சொரூப ரான விநாயகப் பெருமானது பாதத்தை அடைந்த பக்தியையுடைய, திருத் தொண்டர்கள் பெறும் பேற்றை அளந்திடற்கரிய தல்லவா.

(07)

## அகவல்

அன்புறு மடியவ ரகத்திரு வாலையத்
தின்புற வென்றுநின் றிலங்கும் விளக்கே
சொல்லரும் வெவ்வினைத் தொல்லிரு டீரிய
நல்லொளி விரிக்கு ஞான பானுவே
யொழிக்கரு மாலுடை யொருகரு மேனி
கழிக்க வந்த கருணையின் விளைவே
யண்டமத் தனையயு மணிதிக ழுரோமத்
தெண்டகப் பரித்த விறைத் தொழிலரசே
வடநிழ லமர்ந்த மாண்குர வற்குந்
திடமுற மறைப்பொருடேற்றிய குருவே
துன்னிய வைவகைத் தொழிலு மொருதலை
யென்று மியற்றா தியற்றிடுந் தேவே
சினவலி யுவுணர்கோன் சிறைப்படு சயந்தன்
கனவி டைந்தருள் கருணையங்கடலே
யோவரும் வெம்பவ வுததியுற் றோரைத்
தாவிலின் பக்கரை சார்த்திடும் புணையே
கனந்தரு சீரிசைக் கவிபா டுநர்தினந்
தினங்கொள குறைபடாச் சேம வைப்பே
பொற்றல நிகரும் புலோலியம் பதிவாழ்
கற்றவர் விழுங்கிய கற்பகக் கனியே
மதக்கய வல்லியும் வள்ளியங் கொழுந்து
மிதம்பெறப் படர்ந்திடு மெழிற் கொளு கொம்பே
வாலறி வுடையார் மனந்தொறுந் ததும்பிச்
சாலவின் புதவிடுத் தனிப்பெரு மமுதே

**யெங்கணுந் தெரிவுற வெல்லையற் றோங்கித்**
**தூங்கலொ டுற்ற சுருணவே தண்டமே**
**யுள்ளுதோ றெல்லா முணர்ந்தவ ருளந்தொறுந்**
**தெள்ளுமாண் சுவைதருந் தேறலின் றெளிவே**
**தேறிய வுளத்தார் திரண்டு பவவிடா**
**யாறிடைப் பருகுமா னந்தப் பெருக்கே**
**மிடியினற் பிணியினால் வெந்துயர்ப் படாமலுங்**
**கொடியபுன் பரமதக் குழியில்வீ ழாமலுஞ்**
**சீலமில் லாரோடு செர்ந்தலை யாமலும்**
**காலனார் முனிவிற் கலக்க முறாமலு**
**மேலொரு சனனமேல் மேவி டாமலும்**
**வெள்ளறி வேமிகும் வெவ்வினைக்**
**கள்வ னேனையுங் கண்பார்த் தருளே.**

(இ-ள்) அன்புடைய அடியவர்களுடைய இருதயக் கமலமாகிய சிறந்த ஆலயத்தில் இன்பமுண்டாகும் வண்ணம் என்றும் நின்று ஒளிதரும்விளக்கு போன்றவரே சொல்லுதற் கரிய கொடிய வினையாகிய பெரிய இருள் தீரும்படி நல்ல ஒளியைப்பரவச் செய்யும் ஞானசூரியனைப் போன்றவரே, நீக்குதற்கரிய மயக்கத்தையுடைய இந்தக் கருவிலிருந்து உண்டாகின்ற உடம்பை எடுத்தலாகிய பிறவியை நீக்கும்படி எழுந்தருளும் கருணையில் விளைந்த விளைபொருளே, அண்டங்கள் எத்தனையோ அத்தனையை யும் தேவரீருடைய திருமேனியில் அமைந்த ரோமத்தில் எண்ணத் தகுந்ததாகச் சுமந்த ஆட்சித் தொழிலையுடைய அரசே, கல்லால நிழலில் அமர்ந்த பெருமைக்குரிய குருவாகிய தென்முகக் கடவுளுக்கு வலிமையோடு பிரணவப்

பொருளை உபதேசித்த குருவே நெருக்கமாகிய ஐவகைத் தொழிலையும் எக்காலத்தும் விளையாட்டாகச் செய்தருளுங் கடவுளே, கோபமும் வலிமையும் உடைய அசுரர் தலைவனான சூரபன்மனது சிறையில் அகப்பட்ட சயந்த குமாரனுடைய கனவிற் சென்று அருள்செய்த அழகிய கருணா சாகரமே இடையறாத கொடியபாவக் கடலில் வீழ்ந்தோரை, குற்றமில்லா இன்பமாகிய கரையிலே சேர்க் கும்மரக்கலம் போன்றவரே, இனிமையை தரும்சிறந்த இசையோடு கூடிய கவிகளைப் பாடும் கவிஞர்கள், நாளுக்கு நாள் பெற்றுக் கொள்ளக் குறைவுபடாத தன்மையாக சேமிக்கப் பட்ட சேமப் பொருளே, பொன்னுலகத்தை ஒத்து விளங்கும் புலோலி நகரில் வாழுகின்ற கல்வி மான்கள் உண்ணும் கற்பக விருட்சத்தின் கனிபோன்றவரே, மதத்தோடுகூடிய ஐராவத யானையினால் வளர்க்கப்பெற்ற தெய்வயானை என்னும் கொடியும், வள்ளி என்னும் அழகிய கொடியும் நன்மை பெறப் படருகின்ற அழகிய கொழுகொம்பு போன்றவரே, ஒளி பொருந்திய ஞான அறிவுடையவர்களது உள்ளங்கள்தோறும் நிறைந் துவழியும் மிகுதியான இன்பத் தையுதவும் ஒப்பற்ற பெரிய அமுதம் போன்றவரே, எவ்விடங்களிலும் தெரியும்படி அளவு கடந்து உயர்ந்து பெருமையோடு நிற்கும் நற்குண மாமாலை போன்றவரே, நினைக்கும் நேரமெல்லாம் நினைப்பவர் உள்ளந் தோறும் தெளிவான பெரிய சுவையைத் தருகின்ற தெளிந்த தேன்போன்றவரே, தெளிந்த வுள்ளத்தினர் கூடிபாவம் நீங் கும் பொருட்டு அருந்தும் ஆனந்தம் என்னும் ஆற்றுப் பெருக்குப் போன்றவரே, வறுமையாலும், பிணியாலுங் கொடிய துன்பமடையாதும், கொடுமையாகிய இழிந்த புறச்

சமயம் என்னும் குழியில் விழாமலும் நல்லொழுக்கம் இல் லாதவர்களோடு சேர்ந்து அலைந்து திரியாமலும், இயமனா ருடைய கோபத்தினால் கலக்கமடையாமலும், இனிமேல் வேறொரு பிறவியிற் சேராமலும், பயனற்ற அறிவையே மிகுதியாய்க்கொண்ட் கொடிய வினையோடு கூடிய கள்ள னாகிய என்னிடத்தும் தேவரீர் திருக்கண் சாத்தியருளுக. (08)

**வெண்பா**

**அருள் வாய்ந்த வாத்தா வத்தா புலோலிக்**
**கருள் வாய்ந்த துய்ய மணிகண்டா – தெருள்வாய்ந்த**
**நல்லவால் லற்கன்றி நாயிற் கடைப் பட்டே**
**னல்லலுக்குச் சற்றிரங்கா யா.**

(இ-ள்) திருவருட் சத்தியாகிய உமாபிராட்டியார் வீற் றிருக்கும் இடப்பாகத்தையுடையவரே, பரமபிதாவே, புலோலி எனும் நகரத்திலுள்ள உயிர்களுக்கு அருளை வழங்கும் சுத்தமான நீலரத்தினம் போன்ற கழுத்தையுடை யவரே, தேவரீர் தெளிவு பொருந்திய நல்லறிவுடையோர்க்கு மட்டுமல்லாது, நாயினுங் கீழ்ப்பட்டவானாகிய எனது துன்பத்திற்குஞ் சிறிது இரங்கமாட்டீரா (09)

**கலித்துறை**

**ஆயாத் திணிமனத் தார்பா னிதியுநன் றாய்ந்த வன்பின்**
**மாயாத் தகையினர் பாலொற்க மும்வந்த வண்ணமென்னோ**

**சேயாக் கரிமுகற் றந்தாய் புலொலித்திருப்பதிவாழ்**
**சாயாத் தனமயிலேயகி லாண்டமுந் தந்தவளே,**

(இ-ள்) முதற் புத்திரராக யானைமுகனைத் தந்த வரே, புலோலித் திருப்பதியில் வாழுகின்ற சரியாத் தன பாரங்களோடு மயிலின் சாயலையுடையவரே, எல்லாவண் டங்களையும் பெற்றதாயே, ஆராய்ச்சி செய்யாத வயிரித்த மன முடையவர்களிடத்துச் செல்வமும், நன்றாக ஆராய்ச் சிசெய்து அழியாத அன்புடையவர்களிடத்து வறுமையும் வந்திருப்பதன் காரணம் யாதோ?

(10)

## எழுசீர் விருத்தம்

**தந்தியின் வதனத் தற்பர வகில**
**தாரக தாரக வடிவ**
**கந்தியம் பொழிலிற் கந்தரமுறங்குங்**
**கவின்றிகழ் புலோலிமுக் கண்ண**
**செந்தமி ழருமைத் தீஞ்சுவை யுணரார்**
**திணியிரு ளுளத்தினின் னுளத்து**
**முந்துற வயிரம் புரிந்துநான் வைத்த**
**முன்வினைக் கென்று தான் முடிவே.**

(இ-ள்) யானைமுகத்தை உடைய நிலை பேறுடைய பொருளே உலகவட்டத்துள் பிரணவரூபமாகிய வடிவு உடை யவரே பிரகாசமும் அழகும் பொருந்திய சோலையில் வண்டுகள் உறங்கும் அழகுவிளங்கும் புலோலி நகரில் எழுந்தருளியிருக்கும் மூன்று கண்களையுடையவரே

செந்தமிழ் என்னும் தித்திப்பாகிய சுவையை உணராதவர் களது இருள் நிறைந்த உள்ளத்தைப்போல, தேவரீருடைய உள்ளத்தில் வயிரம் பொருந்தும்படியாக நான் முற்பிறவியிற் செய்து வைத்த தீவினைக்கு எப்போதுதான் முடிவுவருமோ, (11)

### அகவல்

**முடிதிகழ் காந்தளின் முழுவா ரத்தனே**
**கடிதிரு நிறத்தவிர் கனகவா ரத்தனே**
**சேரலர் கிளைகளைச் செற்றமா மைந்தனே**
**யாரணி சடைமுடி யமலனார் மைந்தனே**
**பலர்புகழ் புலோலிப் பதித்தா மத்தனே**
**மலர்திகழ் கடம்ப மணத்தா மத்தனே**
**யன்பருக் கினிதரு ளாறக் கரத்தனே**
**கொன்பொலி செவ்வயிற் கோலக் கரத்தனே**
**பாதக மெலாந்தெறும் பரங்குன் றானே**
**மாதவர்க் குதவிடும் வரங்குன் றானே**
**முற்றுல குக்கு முழுமுதற் பதியே**
**பொற்றொடிச் சுரமான் புளினமான் பதியே**
**வழுத்துநர் முன்னுறு மதவா ரணனே**
**விழுத்தகு மொருசதுர் விதவா ரணனே**
**யருட்டிரு பாவமு தடைத்தகா தானே**
**மருட்டிணிக் கபடமா மனம்புகா தானே**
**யாற்றுப் படைத் தொடைக் கருளிய மெய்யனே**
**யேற்றத் துப்பென விலங்கருண் மெய்யனே**
**கத்திகை யாக்கொளுங் காற்படை யானே**
**வித்தகத் தொண்டரை மேற்படையானே**

**மிகத்தவ மோம்பிய மிடலொக ரத்தனே**
**மகத்தழ லெழுந்த வயத்தக ரத்தனே**
**கழியுமா துயரிற் கடையே**
**னழியநீ செம்மாந் தமருமா றென்னே.**

(இ-ள்) முடியிலேவிளங்கும் காந்தள்மலர் மாலையை உடையவரே, வயிரித்த திருநெற்றிமேல் விளங்கு பொன்மாலையை உடையவரே, பகைவர்களாகிய அசுரர் கிளைகளை அழித்த பேரிளைஞரே, அழகு அமைந்த சடாமுடியையுடைய நின்மலரான சிவனது மகனே, பலரா லும் புகழப்படும் புலோலிப்பதியாகிய மாலையையுடைய வரே, கடப்ப மலரினால் ஆனமாலையை உடையவரே, அன்பர்களுக்கு இனிமையான அருளைத்தரும் ஆறெழுத்தை யுடையவரே, கூர்மையும் செந்நிறமும் பொலியும் வேலா யுதத்தையுடைய அழகியகையை உடையவரே, செய்த பாதகங்களை யெல்லாம் நீக்கும், திருப்பரங்குன்றை உடை யவரே, பெரிய தவத்தையுடையவர்கட்கு உதவிடும் வர மலையே, முழுவுலகுக்கும் முழுமுதற் கடவுளே, பொன் வளையலையுடைய தெய்வ யானைக்கும் வள்ளிநாயகிக்குந் தலைவரே, துதிப்பவர் முன் வரும் மதயானை போன்றவரே, நான்கு வகையான வேதத்தை உடையவரே அருள் பொருந்திய திருப்பாடலாகிய அமுதத் தேக்கிய செவியை யுடையவரே, மயக்கத்தோடு கூடிய வயிரித்த வஞ்சக மனத்தை யுடையவர்க்கு எட்டாதவரே, நக்கீரர் சூட்டிய திருமுருகாற்றுப்படை என்னும் மாலையை ஏற்றருள் செய்தவரே, உயர்ந்த பவளம் போல விளங்கும் அருட்திரு மேனியை உடையவரே, தொகுதியாக வேகமுடைய படைக்

கலங்களை உடையவரே, வில்வித்தையிற் சிறந்தவரும் தொண்டு செய்பவருமாகிய நந்தி கணத்த வைரச் சேனையாக வுடையவரே, மிகுதியான தவத்தைச் செய்த வலிமையுடைய மயில்வாகனத்தையுடையவரே யாகாக்கினி யில் எழுந்த வலிய ஆட்டுக்கடாவை வாகனமாக்கியவரே மிகுதியான துன்பத் தினால் எளியனேன் வருந்த தேவாரீர் அறியார் போன்றி ருக்கும் காரணம்யாதோ?

(12)

**வெண்பா**

**என்னைப் போன் மாள்வாருக் கெள்ளளவு முள்ளிரங்கா**
**துன்னைப் போல் வாழ்வாரு முள்ளாரே — பொன்னைப்போற்**
**றேசார் திருமேனிச் செல்வா புலோலி நகர்**
**வாசாவீ சாநிரு நாமா.**

(இ-ள்) பொன்னைப் போல ஒளிவிளங்கும் திரு மேனிச்செல்வரே, புலோலிநகரில் வாசஞ்செய்பவரே, ஈசரே, ஒரு நாமமும் இல்லாதவரே, என்னைப்போல மயங்குப வர்க்கு எள்ளளவேனும் உள்ளத்து இரங்காது உன்னைப் போல் வாழ் பவரும் இருக்கின்றாரோ.

(13)

**கலித்துறை**

**நாமா ரிஷங்கடை யேமாய்ப் புலம்பநின் னாமஞ் சொலார்**
**தாமா யிரங்கணன் போல்வாழ வந்ததலைமை யென்னோ**
**நாமா றிடாநல் லவர்வாழ் புலோலியி னால் வரருட்**
**பாமாலை சூடிய செம்மலை மேற்படர் பைங்கொடியே.**

(இ~ள்) நாக்கோணாத நல்லவர் வாழும் புலோலி நகரில் அடியார்கள் நால்வருடைய அருட்பாமாலையை யணிந்து வீற்றிருக்கும் பசுபதி எனும் சிவந்தமலையின் மேற்படர்கின்ற பசிய கொடியாகியவம்மே! நாம் எல்லோ ரினுங் கடைப்பட்டோமாய்ப் புலம்பிக்கொள்ள உன்னுடைய திருநாமத்தை செப்பாதவர்தாம், ஆயிரங் கண்ணனைப்போல் வாழவந்த உயர்வு யாதோ?

(14)

**விருத்தம்**

**கொடியபுன் றவர்குத் தடிந்தது மரக்கர்**
**குலத்தர சடல்குறைத் ததுமெய்க்**
**கடமுனி பரித்த கமண்டலப் பெருநீர்**
**கவிழ்த்துங் கருமமற் றினவு**
**மடியவர் பொருட்டா யினவெனி லளியே**
**மரந்தைக் கெனின்னிலா யதுதான்**
**துடியமர் கரத்துப் பரன்முதற் சுதனே**
**தோலைவில் சீர்ப் புலோலித் தூயவனே.**

(இ~ள்) கொடிய அசுரர்களை அழித்ததும், அரக்கர் குலத்து அரசனுடைய வலிமையைக் குறைத்ததும், உண்மை நிலையுடைய அகத்திய முனிவர் தாங்கிய கமண் டலத்தில் உள்ள கங்கைநீரைக் கவிழ்த்ததுமாகிய இக்கரு மங்களெல்லாம் அடியவர் பொருட்டாயின என்றால், எளி யவனாகிய எனது துன்பத்திற்கு அவ்வருள் வராதது தான் என்னே? உடுக்கை பொருந்திய திருக்கரத்தையுடைய

சிவனது முதற்புத்திரனே, அழியாப்புகழுடைய புலோலிநகரில் வாழுகின்ற பரிசுத்தமானவனே.

(15)

## அகவல்

**தூய நெடுந்தவத் தொல்லைப் பராசர**
**னேயமைந் தர்க்கு மெய்ந் நிலைப் பொருளுரைத் தோன்**
**வடவையந் தழலென வயங்கிடு செஞ்சிறைத்**
**திடமுறு முட்டாட் சேவலங் கொடியோன்**
**புண்ணியர் வாழும் புலோலித்திருநகர்க்**
**கண்ணிறை கடம்பமர் கண்ணியஞ் செல்வன்**
**மாதிரு மணியொடு வடித்தலைக் கட்டிரு**
**மாது திகழ்ந்திடு மரும முகுந்தனும்**
**பணிவா ழும்பணப் பார்ப்புறழ் புறவடி**
**வாணிவாழ் நாவுடை மலர்த்திசை முகனும்**
**வச்சிர நிகரிடை வழுவைமத் தகவகற்**
**கச்சின முலைச்சசி கலந்தகா தலனு**
**நீர்நிலை யெழுந்த நிமிர்சுவை யமுதச்**
**சீர்நிலை யுலகுடைத் தேவரு மறையு**
**நன்றியன் மேனறி நண்ணிய புனிதரு**
**மின்று முணரா விறைக்குணத் தெம்மான்**
**சேயமா ணிக்கத் திருவடித் துணைமுத**
**லாயமா ணருளுரு வனத்தையுங் காணப்**
**படித்தலை யென்னைதான் பண்டைச்**
**செடித்தலை யெயினர்கள் செய்தமா தவமே.**

(இ~ள்) சுத்தமான பெரிய தவத்தைச்செய்த முற் காலத்தில் வாழ்ந்த பராசர முனிவரது அன்புக்குரிய பிள்ளை கள் அறுவருக்கும் உண்மைநிலை அடைதற்குரியபொருளை உபதேசித்தவரும், வட வாமுகாக்கினியைப் போலச் சிவந்த சிறகுகளையும் முள்போன்ற நகத்தோடுகூடிய வலிமையான கால்களையுமுடைய சேவலைக் கொடியாக வுடையவரும், புண்ணியத்தையுடையவர் வாழுகின்ற அழகிய புலோலிநக ரில் நிறைந்துள்ள கடப்ப மரங்களில் மலர்ந்த மலரான மாலையையணிந்த செல்வரும், துளசிமணியோடு தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் இலக்குமிதேவியும் விளங்கும் மார்பையுடைய விக்ஷ்ணுவும், கையில் வாழும் அழகிய அன்னக் குஞ்சின் வண்ணமுடைய புறவடியைக் கொண்ட சரஸ்வதி வாழும் நாவையுடைய மலர்மேலிருக்கும் நான் முகனும், கொடிபோன்ற இடையையும், யானை மத்தகம் போன்று அகன்ற கச்சணியப்பெற்ற தனங்களையுடைய இந்திராணியைச் சேர்ந்த விந்திரனும், சமுத்திரத்திலெழுந்த உயர்ந்த சுவையுடைய அமுதம் உடையதும் சிறந்த நிலை மைகளையு முடைய விண்ணுலகுடைய தேவரும், வேதங் களும், நன்மை விளங்கும் மேன்மையான ஒழுக்கமுடைய பரிசுத்தமானவர்களும், இன்று வரையும் அறியமுடியாத தெய்வக் குணங்க ளோடுகூடிய எமது தலைவராகிய முருகப்பெருமானது சிவந்த மாணிக்க்ம் போன்ற சோடாகிய திருவடி முதல் முடிவரையான அருட்திருவுரு முழுவதை யுங்காணும் படியாக, முற்காலத்தில் செடிகளின் தழைகளை அணியுந் தலையினையுடைய வேடுவர்கள் செய்துள்ள பெரிய தவந்தான் இருந்து வாறேன்னே?

(16)

**வெண்பா**

**தவத்தினார் நால்வர் தமிழமுத மன்றி**
**யவத்தினேன் சொன்னஞ் சாடாதோ – பவத்தினிமிர்**
**பொய்யகத் தெய் தாதான் புலோலியரனிந் தொடராச்**
**செய்யசடைக் கொண்டான் செவிக்கு**

(இ-ள்) பாபச் செயலில் உயர்ந்து நிற்கும் பொய் மனத்தை உடையவருக்குத் தோற்றாதவரும், சந்திரன் விளங்கும் செந்நிறம் விளங்கும் சடையையுடையவருமாகிய புலோலி நகரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானது திருச்செவிக்கு, தவத்தையுடைய சமயகுரவர் நால்வருடைய தமிழ் வேதமாகிய அமுதமேயல்லாது அவத்தை உடைய வனாகிய எனது சொன்மாலையாகிய நஞ்சு பொருத்த மாகுமோ?

(17)

**கலித்துறை**

**செவிக்கின்ப மாமம்மென் றீஞ்சொல்லி மாணித் திறத்திறு மோர்**
**கவிக்கின்ப மாமறை யோதிய கார்முகக் கார்க் கிளையாள்**
**புவிக்கின்ப மாம்பல் வனத்திய லோங்கும் புலோலியிற்சாம்**
**பவிக்கின்ற மாகவி பாடுநர் பேறுபகர் வரிதே.**

(இ-ள்) அழகிய மென்மையான தித்திப்பான சொல் லினாற் செவிக்கின்பமாம், கலைத்திறத்தோடு கூடியவோர் கவியின்பமாம் அதுபோல பூமியில் உள்ளவர்களுக்கு இன்ப

மாகிய பலவளங்கள் இயல்பாகவே விளங்கும், புலோலி நகரில் எழுந்தருளியிருப்பவரும் சாம்பவி எனும் திருநாமத்தையுடையவரும், வில்லை ஆயுதமாகக்கொண்ட முகில் வண்ணற் கிளையவருமாகிய அம்பிகையார் மேல் இன்பந்தர வல்ல கவிபாடுபவர்களது பேற்றை கூறுவது அரிதாகும்.

(18)

## எழுசீர் விருத்தம்

**அரிக்குறும் பெறிந்து முறைபொதி வாச**
**மகச்சிறு வளிச் செல்வன் மறுகில**
**விரிக்குறும் பொழில் சூழ் கிடந்திடும் புலோலி**
**விநாயக விடங்கர் கோட் பட்ட**
**கரிக்குறு துயரங் களைந்தருண் மலர்க்கட்**
**கனந்துயர் களைந்ததோ கடையேன்**
**பரிக்குறு துயரம் பறிப்பதோ கருணைப்**
**பண்பினிற் றலைமைப்பா லதுவே.**

(இ-ள்) இளம் வண்டுகள் மொய்த்து ரீங்காரஞ் செய்ய முகையவிழ்து மலருகின்ற மலர்களிற் பொதிந்துள்ள நறுமணத்தை, உள்ளத்திற்கு மகிழ்ச்சியூட்டும் இளந்தென்றற் காற்றானது பக்கராக உள்ள இடங்களெங்கணும் பரப்புகின்ற சோலைகள் சூழ்ந்து விளங்குகின்ற புலோலி நகரில் வீற்றிருக்கும் விநாயகப்பெருமானே! முதலைவாயில் அகப்பட்டயானைக்கு உண்டாகிய துன்பத்தை நீக்கியருளிய்

தாமரைக்கண்ணனாம் முகில் வண்ணத்தையுடைய திருமாலின் சாபத்துன்பத்தை நீக்கியதோ? அன்றேல், கடைப்பட்டவனாகிய யான் சுமக்கின்ற துன்பத்தை நீக்கியருளுவதோ? தேவரீருடைய கருணைப் பண்பிற்றலைமைப் பாடானதாகும்.

(19)

**அகவல்**

**பாலனா யாடினான் பனிமராச் சூடினா**
**னீல வான் றோகையா னெடுமிடல் வாகையான்**
**மூவர்கண் முதல்வன் முக்கணான் புதல்வன்**
**தேவரைக் காத்தான் செகமெலாம் பூத்தான்**
**பொருவருந் தகரான் புலோலி நகரா**
**னருளியன் மெய்யா னாறிரு கையா**
**னெழுமலை கொன்றா னெங்கணு நின்றான்**
**கழுமலத் தெழுந்தான் கருவினி லழுந்தான்**
**முற்றுல குடையான் முனையயிற் படையான்**
**பற்றிக லற்றான் பகைவரைச் செற்றான்**
**றேறினர்க் கெளியான் சேண் விளங் கொளியா**
**னாறு முகத்தா னனந்த சுகத்தா**
**னாண்டலைக் கொடியா னாவினன் குடியான்**
**மாண்டகுங் கந்தன் வரைப்பகை மைந்தன்**
**கனவி னடந்தருள் கருணை**
**வினையினே னெஞ்சினை விட்டகலாதே.**

(இ~ள்) குழந்தையாய் விளையாடுபவரும், குளிர்ந்த குராமலரைச் சூடுபவரும், ஒளியோடு கூடிய நீலநிறமான தோகையை உடைய மயில்வாகனத்தை உடையவரும்,

உயர்ந்தவலிமையோடு கூடிய வெற்றியையுடையவரும், மும்மூர்த்திகட்கும் முதல்வரும், முக்கண்ணனுடைய சிவனின் புதல்வரும், தேவரைக்காத்தவரும், உலகமெல்லாவற்றையும் படைத்தவரும், சமானமில்லாத ஆட்டுக்கடாவையுடைய வரும், புலோலி நகரில் எழுந்தருளியிருப்பவரும், அருட்திரு மேனியை உடையவரும், பன்னிரண்டுகையை உடைய வரும், உயர்ந்த கிரௌவுஞ்ச மலையையழித்தவரும், எங்கும் நிறைந் திருப்பவரும் திருக்கழுமலமென்னும் தலத்தில் எழுந்தருளியிருப்பவரும், கருவினிற்றோன்றி வருந்தாதவரும், முழுவுலகையுந் தன்னுடமையாக உள்ளவரும், கூரிய வேற் படையை உடையவரும், விருப்பு வெறுப்பு இல்லாதவரும், பகைவராகிய அசுரரை அழித்தவரும், தெளிந்தஞானிகட்கு இலகுவாகக் காட்சிதருபவரும், எங்கும் நிறைந்தவொளிமய மானவரும், ஆறுமுகத்தையுடையவரும், அளவற்ற இன்பத் தையுடையவரும், சேவற்கொடி யையுடையவரும், திருவாவி னன் குடியாகிய தலத்தை உடையவரும் ஆகிய மாட்சிமை பொருந்திய கந்தக்கடவுளது மலைகளுக்குப் பகைவனாகிய இந்திரனுடைய மைந்தனாகி சயந்தனது கனவின்கட் சென் றருள் செய்த கருணையானது வினையினை உடையவ னாகிய எனது நெஞ்சைவிட்டு அகலாதிருக்கும்.

(20)

**வெண்பா**

**அகத்தி லமர் தருவோய்க் காவ வளியே**
**னகத்தி லமர்வ தரிதோ — வகத்திமிரம்**
**போக்கு மருட் சூரா புலோலியத்தா வெவ்வுலகுங்**
**காக்கு முதல் வாசங் கரா.**

(இ-ள்) அகத்திலுள்ள மருளை நீக்கும் வீரனே, புலோலி நகரில், எழுந்தருளியிருக்கும் தந்தையே, எவ்வுலகையும் காத்தருளும் முதல்வனே, சங்கரனே, ஞானிகளினுடைய உள்ளத்தில் எழுந்தருளியிருப்பவனே, எளியவனாகிய எனதுள்ளத்தில் எழுந்தருளியிருப்பது உனக்கு அரியகாரியமாகுமோ. (21)

## கலித்துறை

**சங்கமர் செங்கை முன்னோனைச் சபித்ததுந் தாதையுயி**
**ரங்க மகலப் புரிந்ததுஞ் செய்த வருவினையாற்**
**பொங்கிய செல்வப் புலோலியன் னேநின் புகழ் புகல்வேற்**
**கிங்குறச் செய்தென் கொல்லாமற் கொல்லு மிடரொன்**
**றையே.**

(இ-ள்) சங்கைக் கையிலே கொண்ட முன்னவனாகிய திருமாலைச் சபித்தும், செய்யப்பெற்ற கொடியசெயல் காரணமாக தந்தையாகிய தக்கனுடையயுயிரையுந் தலையையும் நீங்கும்படி செய்ததும் ஆகிய அருட்செயல்களைச் செய்தருளிச் செல்வம் பொங்கிவழியும் புலோலி நகரின் கண்ணே எழுந்தருளியிருக்கும் தாயே, உனது புகழையே கூறிக்கொண்டிருக்குமெனக்கு கொல்லாது கொல்லும்துன்பத்தைச் சேரும்படி செய்ததென்னையோ?

(22)

## எழுசீர் விருத்தம்

**ஒன்றொரு திறத்துங் குழைவுறா வயிர**
**வுளத்தையென் றுன்னையின் றளவு**

**நன்றறி பனுவற் புலவரா ரெனினு**
**நவின் றில ராகவென் னளவி**
**லின்றய் துடையை யாயின வகைமற்**
**றென்னையோ தெரிந்தில தெந்தாய்**
**பொன்றிகழ் பொருப்பிற் பாரதம் பொறித்த**
**பூரண புலோலிப்புண் ணியனே.**

(இ~ள்) பொன்மயமாகிய மேருமலையில் பாரதத்தை எழுதியருளிய பூரணப் பொருளாய்ப் புலோலி நகரில் எழுந் தருளியிருக்கும் புண்ணிய சொரூபத்தையுடைய விநாயகரே! ஒருவகையாலும் இளகாத வயிரம்பொருந்திய உள்ளத்தை உடையவர் என்று உன்னை இன்றுவரையும் நன்றாகக் கற்ற றிந்த பாவல்லுனரான புலவர்கள் எடுத்துக் கூறினார். இல் லையெனினும், என்னளவில் இப்போது இரக்கமுடைய தன்மை என்ன காரணமோ தெரிந்திலதென் தந்தையே.

(23)

**அகவல்**

**புண்ணிய நீற்றொளி பொலிந்த பொற் புடையது**
**தண்ணெனீர் நதிவளந் தயங்குநற் புடையது**
**வாரிசத் தடமெல்லாம் வழங்குவ வன்னம்**
**வாரிய மனையெலாம் வழங்குவ வன்ன**
**மார்க்கு முழங்கின வருத்தக் கலைக**
**ளார்கு மளிப்பன வருத்தக் கலைக**
**னடயலா ருயிர்க்கெலாந் தங்கற் பனையார்**
**னசயமார் தோட்டவர் தங்கற் பனையார்**
**வானவர் தேனுவை மானுவ குடங்கள்**
**பானிறைப் பனமணிப் பலபெருங் குடங்க**

ளறுகு முதலுணா வாங்கா வாய
வறலயில் கனநிரை யங்கா வாய
வருடரு சகட்டினரப் பொழியா மன்றந்
தெருடரு நூல்பல திகழ்வன மன்ற
மந்தமா ருதமளாய் வரலிற்சா லகங்கள்
சந்தவா சங்கொளத் தருவசா லகங்க
ளாகம முழக்கின மகலா மாமடங்கள்
போக விளங்குவ புனிதமா மடங்க
ளூழவினில் வாணிகத் துறாமையின் மாட்சி
விழவுபூ சனைச்செயல் விரிவன மாட்சி
தமிழ் மறை யாகமஞ் சாரிகை வன்னிக
ளமிழ்தென மிழற்றிட வணைப்பன வன்னிக
ளுளநெகிழ்ந் தருட்பா வோதுநர் தாரை
சளசள வெனநிதந் தருவன தாரை
மணிப்பயப் பந்தர்கள் வருநர்நந் தவனம்
வாவிக டொறுமறா மலர்விரி வாச

மாவயி னணைவன வளவிலா வாச
மன்னிய வாழைமா வாய்ந்த விரும்பலா
வின்னியக் கனிகா யேய்ந்த விருமல
கன்னல் கமுகெலாங் கலிவான் றலைய
நன்னய மழைக்குல நணிய வான்றலைய
வழிபுடை யுறநிழல் வழங்குவ பூதவம்
பழிப்புறா வரசுதும் பரமெகின் பூதவம்
தேசந் தொறுந்தொறுஞ் சேர்ந்துள கடலம்
பேசுந் தரமறப் பெருகுவ கடலம்
பீனுறு தகையகார்ப் பெரும்புயற் சிலம்பு

**மாளிகை தோறுந் தொறு மலிவநெற் சிலம்பு**
**வாணிகர் தெற்றில்வயங்குவ வனந்தம்**
**பூணொளிர் நவமணி புனைபல வனந்த**
**மென்று பலரு மியம்பு நிலைகெழீயித்**
**தொன்றியல் வாயந்து துதியுறுங் காமர்ப்**
**பொருவிலாத் தெய்வ புலோலிமா நகர்வா**
**ழுருளுரு வாகிய வாறு முகத்தோ**
**னன்னையு மப்பனு மாகிய வள்ளால்**
**பன்னிரு காண்பார்த் தென்னிடர் தீரா**
**தின்னமு நாள்கழித் திருப்பிற்**
**பின்னெவ ரிரங்கும் பெருந்தகை யாரே.**

(இ~ள்) புண்ணியத்தைதரவல்ல திருநீற்றினொளி பொலிந்த அழகிய பெருமையுடையதும், குளிர்ந்தநீருடை நிதிவளம் நிறைந்த நன்மையுடையதும், தாமரைத் தடாகங்கள் எங்கும் அன்னங்கள் வாழ்வதும், எவரிடத்தும் அருமையானகலைகள் முழங்குவதும் பகைமையுடையவர்க்கு கற்பனையாகவும், அன்போடுகூடிய மனத்தையுடையவர்க்கு உண்மை நிலையாகவும், தேவர்களது, பசுவை ஒப்பான குடங்களையுடையதும், அழகிய பல பெரிய குடங்கள் பால் நிறைந்து இருப்பதும், அறுகுமுதலிய உணவை வாங்கித் திறந்தவாயினால் உண்ணுகின்ற தருமவடிவான பசுநிரைகள் ஆங்காங்கு அழகுபெற நிற்பதும், இரக்கத்தை காட்டுகின்ற ஆஞ்ஞை உடையவர் ஆரவாரம் நீங்காத சபைகளும் தெளிவைத்தரும் நூல்கள் பலவும் விளங்கும் சபைகளும், வீதிகளில் தென்றற்காற்று பரந்து வருவதால் நல்ல நறுமணம்திகளும் வீதிகளும்,

ஆகமத்தின் ஒலியை தன்னுட் கொண்ட மடங்களும் செல்லச்செல்ல விளங்கும் புனிதமான பெரியமடங்களும், உழவுத்தொழில் வாணிபத்தொழில் ஆகியவற்றின் பெருமையும், பூசனைவிழா ஆகிய செயல் பரந்து விளங்கும் பெருமையும், தமிழ் வேதங்களும் ஆகமங்களும் பயிலும் சாலைகளும், அமுதம் போன்று ஓசையைத்தரும் இசைக்கலை பயிலுநரை அணைக்கும் சாலைகளும் உள்ளம் நெகிழ்ந்து அருட்பாடல்களை ஓதுகின்றவரின் இடையறாத ஒலித்தாரைகளும், சளசள என்னும் ஓசையோடு நிதமும் நிகழ் வனவாக விளங்கும் நீர்த் தாரைகளும், அமிர்தம் போலும் இன்பத்தையளித்து வெப்பத்தை நீக்கும் சோலைகளும், அங்கு வருபவர்களுக்கு அழகிய பயனைத் தருகின்ற நிழற்பந்தர்களும், வாவிகள் தோறும் மலர்கின்ற மலர்களிலிருந்தெழும் இடையறாத வாசனையும், பக்கங்கள் தோறும் பொருந்திய அளவற்ற வாசனையும், நிலையாகிய வாழை, மா, அழகு பொருந்திய பெரிய பலா, ஆகியமரங்கள் இனிய நயமாகிய கனிகளும், காய்களும் பொருந்திய மலர்களோடு கூடி விளங்குவதும், அச்சம் தரும்படி கரும்புகளும் கமுகுகளும் ஆகாயத்தைத் தழுவிநிற்பதும் நல்லநயத்தைத் தரும் மழை முகில்கள் ஆகாயத்தில் பொருந்தித் திகழ்வதும் வழிகளின் இருமருங்கும் பெரியமரங்கள் நிழலைத்தரும் அழகும், புகழப்படும் அரசு, ஆல், புளி ஆகிய மரங்கள் பொருந்தியிருப்பதும், நாடுகள் தோறும் விளங்குங்கடல்கள் இங்குள்ள கடலோடு இணைந்து சொல்லில் அடங்கா வகையிற் பெருகும் காட்சியும், பெருந்த கைமையுடைய கரிய பெரிய முகில் மலைகள் காட்சிதருவதும், மாளிகைகள் தோறும் நெல் மலைகள் மிகுந்திருப்பதும், அளவற்று விளங்கும்

வாணிகர்களுடைய திண்ணைகளில் ஆபரணங்களும் ஒளி யற்றதும் நவரத்தின மாலைகளும் அளவிறந்து காட்சிதரு வதும், ஆகிய பலவகைவளங்களும் பொருந்திய இயல்பு வாய்க்கப் பெற்றுப் போற்றப்படும் அழகு சாமான மில்லாது விளங்கும் தெய்வத்தன்மை பொருந்திய புலோலி எனப்படும் பெரிய நகரிலே வாழுகின்ற அருள்வடி வாகிய ஆறுமுகங் களை யுடையவரே! தாயுந் தந்தையுமாகிய வள்ளலே, பன்னிரண்டு கண்களினாலும் பார்த்து என்னுடைய துன் பத்தை நீக்காமல் இன்னமும் நாட்கழித்து இருப்பாராயின், வேறுயார்தான் இரங்கும் பெருந்தன்மை உடையவர்.

(24)

**வெண்பா**

**தகையார் புலோலில் வாழ் சங்கரா மூரன்**
**முகையாண் மணந்த முதல்வா – தொகை யாரும்**
**பன்னிரண்டு கோல பறளிடர்முன் னின்ற வரு**
**என்னிடர்க்குப் பின்னிற் பதென்.**

(இ-ள்) தகைமைகள் பொருந்தியுள்ள புலோலி நகரில் வாழும், சங்கரனே, இளஞ்சிரிப்போடு கூடிய உமையை மணந்த முதல்வரே, எண் மானத்தில்மிகுந்த பன்னிரண்டு பன்றிக்குட்டிகளின் துன்பத்தின் முன்னின்ற உமது திருவருள் என்னுடைய துன்பத்திற்குப்பின் நிற்பது எக்காரணம் பற்றியோ?

(25)

### கலித்துறை

**என்றா ரஞுரூறு வுத்தர பூதர மென்னவெழூஉம்**
**பொன்றாள் தொடி மதிற் செல்வப் புலோலிப்புரி புரந்தாள்**
**குன்றா மணிமுலைச் சாமள வஞ்சிக் குலநிதிய**
**மன்றா னிடமயிற் கொன்றாவென் புன்கவி மாலையுமே.**

(இ-ள்) சூரியதேவன் மயங்க மகாமேருமலை போலு யர்ந்து அழகியகால்களோடு வளைந்து விளங்கும் மதிலோடு கூடிய செல்வம்நிறைந்த புலோலிப்புரத்தை பாதுகாத்தவரும், மலைபோலுந் தனங்களுடைய சாமள வல்லியும், குலமணி போன்ற சபாநாயகரது இடப்பாகத் திருக்கும் மயிலின் சாயலையுடைய அம்பிகைக்கு எனது இழிவாகிய பாமாலையும் ஒரு பொருளாகுமா?

(26)

### எழுசீர் விருத்தம்

**மாலையங் கமஞ்சூன் மழையினந் துயிலு**
**மணிமதிற் புலோலிமா நகரோய்**
**நீலகந் தரனைச் செங்கனி வேண்டி**
**நெடும்புவி யாய் வலம் வந்தோய்**
**சீலமெய் கண்ட தேசிகன் னமல**
**சிவகாமப் பொருட்டிறன் றெரித்தோய்**
**காலமென் றறிவில் கடையனேன் றுயர்க்குன்**
**கருத்தினி னெகிழ்ச்சிகாண் பதுவே.**

(இ-ள்) மாலைபோற் சூழந்து அழகோடு பொருந்திய கருக்கொண்ட முகில்கள்படிகின்ற அழகிய உயர்ந்தமதில் சூழ்ந்த புலோலி நகரில் வாழ்கின்ற விநாயகரே, நீலநிறம் பொருந்திய கண்டத்தையுடைய சிவபிரானிடமுள்ள செப்பமாகிய பழத்தை பெறவிரும்பி அப்பெருமானையே வலம் வருவதே நீண்ட உலகை வலம்வருவதற்கு நிகராகுமென வலம்வந்தவரே, சிறந்த மெய்கண்ட குருவுக்கு நிர்மலமாகிய சிவகாமப் பொருளின் உண்மையையுணர்த்தியவரே, எக்காலமும் அறிவில்லாத கீழ்மகனாகிய எனதுதுன்பத்திற்கு தேவரீருடையவுள்ளத்தினால் இரக்கங்காட்டியருளுக.

(27)

## அகவல்

**காண்டகு தெய்வக் காழியி லெழுந்த**
**மாண்டகு ஞான வைதிகக் கொழுந்தே**
**யுறிபொறி கரகப் பறிதலை யூத்தை வாய்ச்**
**சிறியரெண் ணாயிரர்த் தெறு மொழி விரகா**
**திகழ்தலை யாற்பலி தேருந் தலைவனும்**
**புகழ்தரு மருளியற் போதகச் செல்வ**
**முந்தறும் பெருமறை முளைத்தசெவ் வாயாற்**
**சுந்தர விறாதனத் தூயபால லுண்டோய்**
**மாறிலா வருளுறீஇ மந்திர மாவது**
**நீறெனை வெடுத்தழ னெடுஞ்சுர மவித்தோய்**
**பாடலொன் றினுக்காகப் பலரொடோர் புலவனை**
**நீடல்சால் கிரிச்சிறை நீக்கிய வருளோய்**
**பொய்யா மொழிக் கவி புகர்துபு மடிநா**

**வையா ரயிலால் வரைந்த வருளினோ**
**யோவரு மலர்பொழி லுடுத்ததென் புலோலிவாழ்**
**மூவர்கண் முதல்வ முத்துக் குமார**
**வூரவ ரொடு தொழீஇ யுற்றார் கலங்கச்**
**சீரிய வன்பினோர் சித்தந் தேம்பத்**
**தண்டுகை யூன்றித் தளர்நடை பயின்று**
**மண்டழற் பசியால் வாடிமெய் யுலர்ந்து**
**நோயிடைப் பட்டு நோக்கு வேறாய்ப்**
**பாயலிற் கிடந்து படருமை மேலெழ**
**வொருபக லெனினு முறு கட்படாமலும்**
**பொருட்பகட் டரியாற் புன்கட் படாமலு**
**மக்கர மாறையு மன்புட னோதித்**
**தக்க திருப்புகழ் தவா வகை பாடிச்**
**சுகமா விறந்துனைத் தோய**
**வகமா லேற்கு நின் னாரருள் செய்வையே.**

(இ~ள்) காணத்தகுந்த சீர்காழிப்பதியில் தோன்றிய மாட்சிமைபொருந்திய வைதிக ஞானசம்பந்தக் கொழுந்தே யுறி பொறிக்கப்பட்ட கமண்டலத்தையும், மொட்டைத் தலையையும், அழுக்குவாயையும் உடைய இழிந்தவராகிய எண்ணாயிரம் சமணர்களைவென்ற சொற்களையுடைய வித்தகரே, விளங்குகின்ற கபாலத்தினால் பிட்சை ஏற்கின்ற சிவபிரானும் புகழ்ந்துகூறும் இயல்பாகவே அருளோடுகூடிய ஞானச்செல்வமே. முன்னர்க் காலத்திலே தோன்றிய பெரிய வேதங்கள் தோன்றுதற்கிடமாகிய சிவந்த வாயினால் அழகிய கார்த்திகைப்பெண்களின் தனத்தில் ஊறும் சுத்தமாகிய பாலை யுண்டவரே, குற்றமில்லாத அருளினால்

மந்திரமாக விளங்கு வது திருநீறு என்று திருநீற்றுப் பதிகம்பாடி அக்கினிபோல் வெப்பமுடையதாகிய வெப்பு நோயை நீக்கியவரே, முயற்சி பொருந்திய மலையிலேயுள்ள சிறையிலே, பலரோடு ஒருவனாக அடைப்பட்டிருந்த ஒருபுல வனாகிய நக்கீரனை அவன்பாடிய முருகாற்றுப்படை யென்றவொரு பாடலுக்காகச் சிறையின்னீக்கிய அருளையு டையவரே, உண்மைக்கவியைப் பாடும்படி ஊமையாயிருந்த குமர குருபரருடையநாக்கினில் வையிரித்த வேலால் பிரண வத்தை எழுதியருளியவரே, இடையறாது மலர்களோடு கூடிய சோலைசூழ்ந்து காட்சிதரும் புலோலியில் வாழு கின்ற மும்மூர்த்திகட்கு முதல்வரே, முத்துக்குமார மூர்த் தியே, ஊரவரோடு சேர்ந்து உறவினர் கலங்க, சிறந்த அன்பையுடையவர் மனம் வெதும்பவும், கையிலே தண்டு கொண்டூன்றித் தள்ளாடும் நடை நடந்து, நெருங்கிய வெப்ப மாகிய பசியால் வாடி உடம்பு காய்ந்து, நோயிலகப்பட்டு உள்ளக்கருத்து வேறுபட்டு, பாயிலேகிடந்து பரந்து சேடம் மேன்னோக்கித் தொடரப்படுதலாகிய துன்பங்களில் ஒரு நாளேனும் வருத்தப் படாமலும், போரிடத் தகுந்த எருமை வாகனத்தையுடைய யமன் எனும் சிங்கத்தினால் துன்பப் படாமலும், சடாட்ச்சரத்தை அன்போடு உச்சரித்து தகுதி வாய்ந்த திருப்புகழைத் தவறுத லில்லாது பாடிச் சுகத்தோடு இறந்து உம்மைச்சேரும்படி, உள்ளமயான மயக்கமுடை யேனாகிய எனக்கு தேவாரீருடைய அருளைப் பாலித்தருள வேண்டும்.

(28)

## வெண்பா

**செய்யாய் வளைமுழங்குஞ் செய்யார் புலோலியில் வாழ்**
**மெய்யானே துய்யவருண் மெய்யானே — மையாருங்**
**கண்டா விமையமயில் கண்டா தொண்டானேற்கு**
**மண்டாத்துன் பாக்கிடலா மா.**

(இ-ள்) சிவந்த நிறமுடையவரே, சங்குகள் முழங்கு கின்ற செப்பமாகிய புலோலிநகரில் வாழும் உண்மைப் பொருளே, சுத்தமாகிய, வருட்டிரு மேனியரே, மை போன்று கறுத்த கண்டத்தையுடையவரே இமயமலையில் அவதரித்த மயிலின் சாயலையுடைய உமை அம்பிகையின் தலைவரே, தொண்டனாகிய எனக்கு அடங்காத துன்பத்தை உண்டாக் கலாமா? (29)

## கலித்துறை

**ஆமாத ரட்டிலி லூட்டு மூணாநன் றருந்தியசைஇத்**
**தேமா நிழற்றுஞ்சுஞ் செல்வப் புலோலியிற் சேயிழையே**
**காமாரி பாகமின் னேயென் றுயுர்முற்றுங் கண்டின்னமுந்**
**தாமா ணுளங்குழை யாயையென் யாவெனச் சொல்லு**
**வதோ.**

(இ-ள்) அழகிய பெண்கள் சமையற்சாலையிலூட்டுகின்ற உணவை நன்றாக உண்டு. இளைப்புற்றுத் தித்திப்பான பழத்oதைத்தரும் மாமரநிழலில் உறங்கும் தொண்டர்கள் விளங்கும் செல்வம்நிறைந்த புலோலிநகரில் வாழும்செப்ப மாகிய ஆபரணத்தோடு விளங்கும் உமையம்மையே, மன்

மததகனரின் இடப்பாகத்திருக்கும் மின்னற்கொடிபோன்றவரே, அடியேனுடையதுன்பம் முழுவதையுந் தெரிந்தும் இன்னமும் சுத்தமாகிய மாட்சிமை பொருந்திய உள்ள மிரங்காதிருக் கின்றவுன்னை, என்னுடையதாயெனச் சொல்லுவதாகுமோ?

(30)

## எழுசீர்விருத்தம்

**சொல்வளர் சண்பை வனத்தல மந்த**
**சுரபதி துயர்க்குத்தூ நதியை**
**யல்வளர் பொழிலில் விடுத்தவான் கருணை**
**யளியனே னுக்குமா குவதோ**
**கல்வளர் கனக விலங்கலா மேட்டிற்**
**கவுரவர் கதையினைக் கவினா**
**ரெல்வளர் மருப்பிற் பொறித்தவே ரம்ப**
**வெழிற்புலோ லிப்பதி யிறையே.**

(இ-ள்) புகழ்ந்து சொல்லப்படும் சண்பக வனத்தில் சுழன்றுகொண்டிருந்த இந்திரனுடைய துன்பந்நீங்குவதற்காக சுத்தமான காவிரி நதியை, இருள்நிறைந்த பூஞ்சோலையில் செல்லும்படி விடுத்த உயர்ந்த கருணை, யளியனேனுக்கும் கிடைப்பதாகுமோ, கற்கள் வளர்ந்திருக்கும் பொன்மயமான மகாமேருமலை யென்னுமேட்டில் பாண்டவர்களின் கதையை அழகு விளங்கும் ஒளிபொருந்திய தந்தத்தினால் எழுதிய ஏரம்பரே, அழகிய புலோலிப்பதியின் தலைவரே.

(31)

## அகவல்

**இறையவன் மருமா னெழிலரி மருமான்**
**மறையவன் குரவன் வனைதருங் குரவன்**
**வேதநான் குடையான் வியனடக் குடையான்**
**பூதங் கடந்தான் பொறிபுலங் கடந்தான்**
**புரையவம் புரியான் புலோலியம் புரியான்**
**விரையிணர்ச் செச்சையான் விரைதருஞ் செச்சையான்**
**கடம்பமர் கண்ணியான் கருதினர்க் கண்ணியான்**
**உடம்பிடி யத்த னுலகரு ளத்தன்**
**சீரலை வாயன் சிவனூல் வாயான்**
**ஏரகக் கண்ணா னிராறு கண்ணான்**
**மாவொகரத்தான் வயமோ கரத்தான்**
**பாவினி லினியான் பாடுதற் கினியான்**
**புரவெனற் காத்தான் புலவரைக் காத்தான்**
**சரணமெய்த் துணையே தமியனேன்றுணையே**

(இ-ள்) சிவபிரானது வழித்தோன்றலானவரும் ,அழகிய விக்ஷ்ணுவின் மருமகனானவரும், வேதத்தை ஓது கின்ற பிரமனுக்கு குருவானவரும், உலகைப் படைத்த குருவானவரும், நான்கு வேதங்களை உடையவரும் வியப் புக்குரிய வலிமை யுடையவரும், பஞ்சபூதங்களையுங் கடந்துநிற்பவரும், புலன்களையும் பொறிகளையுங் கடந்து நிற்பவரும், குற்றமுடைய அவத்தைச் செய்யாதவரும், அழகிய புலோலி புரத்திலிருப்பவரும், வாசனையோடு கூடிய வெட்சிமலரையணிபவரும், வேகமாகச் செல்லும் செம்மரியாட்டுக்கடா வாகனத்தையுடை யவரும், கடப்ப

மலரினாலான மாலையணிந்தவரும் நினைப்பவர்களுக்குக் கிட்டிநிற்பவரும், வேற்படைக்குத் தலைவரும், உலகத்தைக் காக்கும் தலைவரும் சீரலைவாய் எனப்படுஞ் செந்தூரில் இருப்பவருஞ் சிவாகமத்தை உபதேசிக்கின்ற திருவாயையு டையவரும் திருவேரகத்திலிருக்குந் தலைவரும் பன்னி ரண்டு கண்களையுடையவரும், மாமரத்தைத் தடிந்த கையையுடையவரும், பாடல்களினால் இனிமையாக கூறப் படுபவரும், பாடுவதற்கு இனிமையானவரும், காக்கவேண்டு மெனக் காப்பவரும், புலவர்களைக் காப்பவரும், தனித்தவ னாகிய எனக்குத் துணையாக உள்ளவருமாகிய முருகப் பெரு மானது பாததாம ரைகள் சரணடைந்தவற்கு துணை யாகவிளங்கும்.

(32)

**வெண்பா**

**துணையேது மின்றித் துயர்க்கடற் பட்டோர்க்குப்**
**புணையே சுகுணப் பொருப்பே – யணையேறும்**
**பண்ணைப் புலோலிப் பசுபதியே யார்துணையென்**
**னெண்ணைப் பெறாத விடர்க்கு.**

(இ-ள்) துணை எதுவும் இல்லாது துன்பமாகிய கட லில் அகப்பட்டவர்களுக்கு, மரக்கலம் போன்றவரே, நற்குண மலையே, மதில்கள் உயர்ந்து விளங்குவதும், பண்ணை களையுடையதுமாகிய புலோலி நகரிலெழுந்தருளி இருக்கும் பசுபதியே, கணக்கிடமுடியாத என்னுடைய துன்பத்திற்குத் தேவரீரேயல்லாது வேறுயார் துணையாவார்.

(33)

## கலத்துறை

**இடம்பெறு சீர்த்திமுன் னோன்மெய் நின்மெய்முதலெச்சமூக**
**நடம்பெறு காந்தன் களந்தன் களந்திகழ் கார்க்கினு**
**நாணமின்றி**
**மடம்பெறு மென்னுளக் கார்க்குவர்ப் புன்னுளம் வந்திடுமோ**
**தடம்பெறு செல்வப் புலோலியில் வாழ்சிவசங்கரியே.**

(இ ள்) தடாகங்கள் பெற்றுள்ள புலோலிநகரில் வாழும் சிவசங்கரியே, எவ்விடங்களிலும் பரந்தசிறப்பினை யுடைய முதல்வராகிய சிவனுடைய திருமேனி அருளாகிய நின்னுடைய மேனியே, எச்சமூகமும் விரும்பும் நடனத்தைப் பெற்றுள்ள உனது நாயகனது கழுத்தில் விளங்கும் கறுப்புக்கு நாணமடையாத நீ, உன்னுள்ளத்தில், அறிவற்ற எனதுள்ளக் கறுப்புக்கு வெறுப்பு வந்திடுமோ.

(34)

## எழுசீர் விருத்தம்

**சங்கரன் பயந்தோ னியலெண்ணான் கறமுந்**
**தவாமலோம் பிடுபரை நற்றா**
**யெங்குள வுயிரு முயவருள் வடிவோ**
**டெழுந்தவே லிறையவ னிளையோன்**
**கங்கையு மொருதா யாகத்தண் ணளிநின்**
**கருத்துறாக் கருமமீ தென்னோ**
**சங்கின முழவக் கணத்திரங் கணத்திற்**
**தவழ்ந்திடும் புலோலித்தற் பரனே**

(இ ள்) கூட்டங்கூட்டமாகச் சங்குகள் ஓலமிடும் நீர் நிறைந்த கடலின் அயலிலே விளங்கும் புலோலி நகரில் வாழுகின்ற தற்பரவஸ்துவாகிய விநாயகப் பெருமானே! சிவபெருமானே தேவாரீரைப் பெற்றதந்தை, இயல்பாகவுள்ள முப்பத்திரண்டு தருமங்களையும் வளர்த்த பராபரையாகிய அம்மையே பெற்றதாய், எவ்வுலகிலுமுள்ள உயிர்களெல்லாம் உய்யும்பொருட்டு அருளோடு எழுந்த வேற்படைக்குத் தலைவனான முருகன் தம்பி, கங்கையுமொரு தாய், இவ்வாறாகவிருக்க, உமது உள்ளத்தில் இரக்கமில்லாதிருக்கின்ற செயல் யாது காரணமோ?

(35)

**அகவல்**

**பரந்திடு முனைதிரைப் பரவைமா நிலமெலாங்**
**கரந்தொழ வாழ்த்திடு களிப்பு மாறா**
**விரவிய நறுமுகை வேயுளம் பட்ட**
**தருநிழ லமர்ந்த சதமகன் சீரும்**
**தாமரை மலர்ப்பெருந் தவிசினிற் சேக்கு**
**மாமுக நான்குடை மறையவன் சீருஞ்**
**சேக்கொளுநளினத் திருமகட் புணர்ந்த**
**பூக்கொளு பைந்துளாய்ப் புண்ணியன் சீருமா**
**மின்னன வேயலா திறப்பப் பிறப்பற**
**மன்னிய வின்பம் வழங்குமாண் புடையது**
**மேதக வோங்குபு விண்ணஞ் சுமந்த**
**பூதர மணிமதிற் புலோலிமா நகர்வாழ்**
**முத்துக் குமரா முதல்வ னிராமயன்**

**சத்தித் திருக்கரத் தனிப்பெருஞ் சோதி**
**யியலறி மாந்தர்வா யீன்றசெங் கவிக்குப்**
**பயனுறு கருணைப் பரிசினன் கருள்வோ**
**னக்கர மாறையு மன்புட னிரட்டும்**
**பக்குவ வார்த்தர்கள் பத்திவலைப் பட்டோன்**
**முன்னருள் வாக்கு முற்றிடச் சூரனைப்**
**பின்னினி தாண்டருள் பேரருட் பெரியோன்**
**கலைமைத் திறனெலாங் கசடற விரிப்பான்**
**றலைமைப் புலவனாச் சங்கத் தமர்ந்தோன்**
**சேயாமா ணிக்கத் திருவடி வினவுந்**
**தூயவன் பக்திமைத் துகளிலாச் சீரென்**
**றெத்திறக் கலைகளு மியம்பிடக் கேட்டுமென்**
**னத்தனை யேனு மதிநிலை நில்லா**
**தின்னமும் பிறவியி னெய்த**
**முன்னுமென் வினையின் முதிர்வென் றொழிவதே.**

(இ ள்) பரந்தெழும் திரைகளோடு கூடிய சமுத்திரத் தாற் சூழப்பட்ட உலகமெல்லாம் கைகூப்பி வணங்கி வாழ்த்துக்கூற, ஏற்பட்ட மகிழ்ச்சிநீங்காது பரந்த நல்ல மணத்தோடுகூடிய அரும்புகளும், மலர்களும்பொருந்தி விளங்கும் ஐவகை விருட்ச நிழலில் வீற்றிருக்கும் யாகாதப னாகிய இந்திரனுடைய சிறப்பும், தாமரைமலர் ஆசனத் திலிருக்கும் நான்கு முகங்களையுடைய வேதத்தை யோதும் பிரமாவினுடைய சிறப்பும் செந்நிறம்விளங்கும் தாமரை மலர் ஆசனத்திருக்கும் திருமகளை மணந்த பூக்களோடுவிளங்கும் பசுமையான துளசியை விரும்பும் விட்டுணுவின் சிறப்புமாகிய மின்னல் போன்றதன்மையில்லாத, இறப்புப்பிறப்பு அற்ற

நிலை பெற்ற இன்பத்தை கொடுக்கும் பெருந்தன்மையுடை யதும், மேன்மையோடுயர்ந்து ஆகாய உலகைச் சுமக்கு மலை போன்ற அழகிய மதிலோடுகூடிய புலோலி என்னும் பெரிய நகரில் வாழுகின்ற முத்துக் குமாரரே, முதல்வரே, மயலற்றவரே, வேற்படையை திருக்கரத்திலேதாங்கிய ஒப் பற்றசோதி வடிவானவரே, இயல்பாகவே அறிவினையுடைய மனிதர்தமது வாயினாற் பாடிய பாடலுக்குப் பயனைத் தருகின்ற கருணை யாகிய பரிசிலை நன்றாகக் கொடுத்தருள் பவரே. சடாட்சரத் தையன்போடு செபிக்கும் பக்குவம் பொருந்திய, அருள்வழி நிற்பவர்களது பத்தியாகிய வலை யிலகப்படடுபவரே, முற்பிறவியிற் கொடுத்த அருள்வாக்கு நிறை வேறும்படி சூரபத்மனையடுத்த பிறவியின்கண்ணே நன்மை யோடாட்கொண்டருள் பாலித்த பெருங்கருணைப் பெரியவரே, கலைத்திறமைகளை யெல்லாம் சந்தேகமில்லாது விரித்துக் கூறும் பொருட்டுத் தமிழ்ச்சங்கத்திலே தலையாய புலவராய் எழுந்தருளியிருந்தவரே, சிவந்த மாணிக்கரத்தினம் போன்ற தேவரீருடைய திருவடிப் பெருமைகளை ஆயும் சுத்தமாகிய வலிமையான பத்தியில் சிறிதளவேனும் இல் லாததன்மை பெற்றுமென்ன எவ்வகைப்பட்ட கலைகளையும் எடுத்துக் கூறக்கேட்டு மென்ன அவற்றுள் ஒன்றேனும் புத்தியில் நிலையாக நில்லாமல் இன்னமும் இனிமேலும் பிறவியில் சேரநினைக்கும் என்னுடைய வினையினுடைய முதிர்ச்சி எக்காலத்தில் நீங்கும்.

(36)

**வெண்பா**

**ஒழியாவன் புத்தருமி யுள்ளிடரைத் தீர்த்த**
**வழியா வருளெனக்கு மாமோ — சுழியார்**
**புனல்வயல் சூழ் செல்வப்புலோயத்தா நித்தா**
**வனல் வளர்கை யாவருள்மெய் யா.**

(இ ள்) சுழியோடுகூடிய நீர் நிறைந்த வயல்கள் சூழ்ந்து விளங்குவதும், செல்வம் நிறைந்ததுமாகி விளங்கும் புலோலிநகரில் வாழுந்தந்தையே நிரத்தியப்பொருளே,அக்கினி பொருந்திய கையை உடையவரே, திருவருளே திருமேனி யாகவுடையவரே, தேவரீர், இடையறாதவன்பினையுடைய தருமியினுடைய உள்ளத்திற்தோன்றிய துன்பத்தை நீக்கிய உமது அழிவில்லாத திருவருள் அடியேனுக்கும்கிடைக் குமோ.

(37)

**கலித்துறை**

**மெய்யான வன்புடைத் தொண்டர்கண் ணீரென்றும்**
**வீதி நிறைந்**
**துய்யான மல்கிடப்பாயும் புலோலி யூரைச் சயிலத்**
**தையாலனந்த குணவல்லி யேயின்த் தாழ்க்கலெனை**
**மையார் மலர்த்திருக் கண்பார்கண் பார்புன்கண் மாறிடவே.**

(இ ள்) உண்மையன்புடைத் தொண்டர்கள் பொழி கின்ற கண்ணீரானது எந்நாளும் தெருக்களெல்லாந்நிறைந்து நந்தவனங்கள் நிறையும்படி பாய்ந்து கொண்டிருக்கும்

புலோலி என்று கூறப்படும் மலையில் வாழுகின்ற தையலே, அனந்த குணவல்லியே இனியுந்தாமதியாது உனது மைதீட்டப்பட்ட மலர்போன்ற திருக்கண்களால் என்னுடைய துன்பங்கள் நீங் கும் பொருட்டு என்னைப் பார்த்தருளுக.

(38)

## எழுசீர் விருத்தம்

**மாறிடாக் கருணை யுள்ளத்தினிர் நால்வர்**
**வரந்தரவ ல்லாரா யுறுவந்**
**தேறிடா வயிரச் சிறியனே னொருவன்**
**தினந்தினம் புலம்பித் தேம் புவனோ**
**சோறிடா மனையு நீறிடா நுதலந்**
**துதித்திடா நாவுமெய்ப் பத்தி**
**யூறிடா வுளமு மிலாததென் புலோலி**
**யுவாமுக முடையவுத் தமனே.**

(இ ள்) பசித்தோர்க்கு அன்னமிடாத வீடும், திருநீறு அணியாத நெற்றியும், துதிப்பாடல்களைப் பாடாத நாவும் மெய்மையான பக்தி ஊறாத உள்ளமும் உடையோர் இல் லாது விளங்கும் புலோலி நகரில்வாழும் யானை முகத்தை யுடைய உத்தமரே, மாறுபாடில்லாத கருணை நிறைந்த உள்ளத்தை உடையவர்களாகிய நீங்கள் நால்வரும் வரந் தருவதற்கு வல்லமை உடையராக இருக்கவும், தெளிவில் லாத வயிரித்த மனமுடையவனாகிய சிறியேனொருவன் நிதந்நிதம் அழுது தேம்புவேனோ.

(39)

## அகவல்

உத்தம நெறிச்சிவ யோகசா தனையுறாஉம்
வித்தக ருணர்வு விழியா னாடுவ
வுரையுணர் வவிழ வுளபடி யுனையுணர்
புரையிலா ரவரனு பூதி யாயின
மூத்தவ னுடனிகள் மூண்டோரேழ் புவியை
மாத்திரை யொன்றில் வலமா யோடுவ
வொருவகை யாப்பினு முறாவெனி னுந்திட
மருவிய பத்தி வலையாப் புறுவன
விப்பவத் துறத்தவ மிலையெனி லதுமுதி
ரெப்பவத் தென்னினு மெனக்கும் வாய்ப்பன
வாலாந் தோமெனு மன்பர்கள் விளிப்புறு
மாவயி னெலாம் விரைந் தாதரத் தணைவன
தஞ்ச மிலாதுசஞ் சலமுறு நெடுவழி
நெஞ்சிடை யெவரெவர் நினைப்பினு மணைவன
வியவுலா மாந்தர்வா மீன்சொற் றொடையொடு
மயலனே னுத்தையவாய் மாலையும் புனைவன
வாரிவன் றொழுநமோ டணைவதென் னென்றெனைச்
சீரிய தொண்டர்கள் சினவா தளிப்பன
வுவுத்துரைப் பாடி யுளம்புண் ணாவுற
வவுத்தபே யேன்படு மவலமுந் தணிப்பன
வெத்தனை பெருந்துய ரெய்தியுஞ் சிறியேன்
சித்தமற் றொருசார் திரும்பா தளித்தன
வரம்பெற வருந்திரு மான்முத லானோர்
சிரம்பல கரம்பல திகழுந் தரத்தன
வித்தரை நாதமுன் னீறாக் கிடந்த

தத்துவ முடிவினிற் றாண்டவம் புரிவன
தேறிய சடக்கரத் திருமந்திரஞ் செபித்
நூறிய களியுறா வுளந்தொறு மமர்வன
விஞ்சிய யுகம்பல வியன்றவ நிரப்பிய
பைஞ்சிறை மஞ்ஞைமேற் பரிந்துலா வருவன
மாதவன் மகத்தெழும் வியத்தக ரேற்றிவு
மேதகு பிணிமுக வெற்பிவு மிவர்வன
புறப்படை யகப்புடை பொலிந்துநின் றிடவெழூஉ
மறப்பகை யனந்தம்வாட்டுந் தகையன
வனைவரு மருச்சித் தன்பொடு தூஉ
நனைவரு நறுமலர் நாறிடுந் தகையன
முத்தியும் போகமும் முன்னிய முன்னியாங்
கெத்திறத் துயிர்க்கு மினிதருள் செய்வன
மரணவே தனையால் வாடுபு சரணஞ்
சரணமென் பார்க்கெதிர் தஞ்சமாய் நிற்பன
கருங்கடற் படிந்துகளை கணற்றோரைப்
பொருக்கென வெடுத்திடும் பொற்புணையாயின
வந்திறைஞ் சான்கர மலர்கூப் பியமறை
யந்தணக் கள்வனை யகந்தை வேர் பறித்தன
விண்மதி கிடக்கு மிரவியின் மிதிக்கப்
பொருவெனமறைவாய் புலம்பநின் றாடின
மாறிடா வெம்பவ மயக்கினி லுடைந்தவ
ராறிடா விழிப்புன லருவியி னனைவன
வீடும் புனிதநால் வேதமும் போதமுங்
காடும் புனமுங் கமழுந் தகையன
பொய்யிலார் மேவிய புலோலிச்
செய்யவே லறுமுகன் றிருவடிப் பூவே.

(இ ள்) உத்தமமான வழியைக்காட்டுஞ் சிவயோகத்தைச் சாதனை செய்யும் ஞானவான்கள் தங்கள் ஞான உணர்ச்சியாகிய கண்களாற்காணப்படுவதும், சொல்லப்படும் புலன் உணர்வுகளை அடக்கி விதிப்படி உணர்கின்ற குற்றமில்லாத ஞானிகளுக்கு அனுபூதியாவதும், தமையனாராகிய விநாயகருடன் பகைகொண்டு பதின்னான்குவகையான உலகையும் ஒரு மாத்திரைப் பொழுதினுள் வலமாகவருவதும், ஒருவகையான கட்டிலும் அகப்படாததாகவிருப்பினும் திடமானபக்தி எனும்வலையினாற் கட்டப்படுவதும், இந்தப்பிறவியில் உறுதியாகிய தவம்மில்லாதிருந்தபோதும், அவ்வுறுதியான தவம் மேல்வரும் எப்பிறவியிலாயினும் அடியேனுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பைத்தருவதும், ஆ! ஆலந்தோம் என்று அன்பர்கள் அழைக்கின்ற நேரங்களிலெல்லாம் விரைவாக வந்தணைந்து ஆதரவாக நிற்பதும், அடைக் கலமாவாரிலாததும் துன்பம் தருவதுமாகிய நீண்ட வழியில் அன்பொடு மனத்தில் யார் யார் நினைக்கிறார்களோ அவர்கள் முன்கிட்டிப் பாதுகாப்பதும், இயல்பாகவே புலமை வாய்ந்த மனிதர்கள் வாயினாற்பாடிய பாமாலை ஏற்றருளு வதோடு, மயக்கமுடைய அடியேன் எனது அழுக்குநிறைந்த வாயினாற் பாடிய பாமாலையை ஏற்று அருளுவதும், இவன் யார் எம்மோடு சேர்ந்து வணங்குவதற்கு வருவது, என என்னைச் சிறந்த ஒழுக்கமுடைய தொண்டர்கள் கோபியா வண்ணம் பாதுகாப்பதும் உலுத்தர்களைப் பாடி உள்ளம் புண்ணாகி அலுப்படைந்த பேயேனாகிய நான் படுந்துன்பத்தைத் தீர்ப்பதும், எத்தனை பெரியதுன் படைந்துஞ் சிறியவனாகிய எனதுமனம்

வேறொரு மதத்திற் சேராது பாதுகாத்ததும், வரம்பெறும் பொருட்டு வருகின்ற விக்ஷ்ணு முதலான தேவர்களது கபாலங்கள் பலவும் பல திருக்கைகளிலும் விளங்குந்தன்மை உடையதும், பிருதவி முதல் நாததத்துவம் வரையும் அழிந்த சங்கார காலத்தில் தத்துவங்கள் ஒடுங்கிய இடத்தில் நடனம் ஆடியருளுவதும், தெளிவைத் தருகின்ற சடாட்சர மந்திரத்தைச்செபித்து மகிழ்ச்சியுறுகின்ற உள்ளங் கள் தோறும் எழுந்தருளி இருப்பதும், மிகுதியான பலயுகங் கள் வியக்கத்தக்க தவம் செய்து நிரம்பிய பசிய சிறகுகளை யுடைய மயிலின் மீது விருப்பினோடு உலாவருவதும், பெரிய தவத்தையுடைய நாரதமுனிவரின் யாக அக்கினியில் உதித்த வலிமையுடைய செம்மரியாட்டுக்கடாவின் மேலும் எழுந்தருளுவதும், மேன்மை பொருந்திய மயில் என்னும் மலையிலும் எழுந்தருளுவதும், உள்ளும் புறமும் பொலிவாக நின்று என்னை அழிக்கும்படி எழுகின்ற இரு வினையாகிய வலிய அளவற்ற பகையை நீக்குந்தன்மையுடையதும், உலகிலுள்ள எல்லோரும் பூசித்து அன்போடு தூவும் தேனோடும் வாசைனயோடுங் கூடிய மலர்களின்மணம் தன்னிடத்து விளங்குவதும், முத்தியும்போகமும் எண்ணி யபடியே எவ்வகைப்பட்ட உயிர் களுக்கும் இனிமையாகக் கொடுத்து அருள்செய்வதும், மரணவேதனையால் வாடு கின்றபோது அடைக்கலம் அடைக்கலம் என்று அழைப் பவர்கட்கு அடைக்கலப் பொருளாய் நிற்பதும் கருநிறம் பொருந்திய கடலுள் வீழ்ந்து தத்தளிப்போரை விரைவாக எடுத்திடும் அழகிய மரக்கலம் போன்றதும், வேதத்தை ஓதுகின்ற பிரமா எனப்படுங்கள்வன் கிட்டிவந்து வணங்காத கையைமட்டுங் குவித்துக் கொண்டு சென்றபோது அவனது

அகந்தையை வேரோடுகளைந்ததும், நட்சத்திரங்களும் சந்திரனும் விளங்கும் விண்ணிலுள்ள சூரியனில் மிதிக்க இந்த மிருதுவான மலர்போலுந் திருவடி தாங்கமாட்டாதென வேதங்கள் வாய்விட்டுக் குழறுவதுபோல, சிலம்புகள் ஒலி செய்ய நின்று நடனமாடியதும், நீங்கா கொடிய பாபமயக் கினால் மனமுடைந்து வருந்துபவர்கள் ஆறுபாய்வது போலக் கண்களினின்றும் பொழிகின்ற கண்ணீர் அருவியில் நனைவதும், முத்தித்தானத்தும், சுத்தமான நான்கு வேதங் களினிடத்தும், ஞானத்தும், காட்டினும் சிறு தானியங்கள் விளைநிலத்தும் தெய்வமணங்கமழுந் தன்மையுடையதும், ஆகிய இன்னோரன்ன கருணைச் செயற் சிறப்புக்களோடு கூடி விளங்கும் தனிச்சிறப்புடைப் பொய்மை யில்லாத உண்மையன்பர்களே பொருந்தி வாழுகின்ற புலோலிமா மாநகரிற் கோயில் கொண்டெழுந்தருளி விளங்கும் செவ் வொளிகாலும் வேலாயுத கரத்தராகிய ஆறுமுகப்பரம் பொருளின் திருப்பாதம் எனப்படும் மலரேயாம் என்க.

(40)

## புலோலி நால்வர் நான்மணிமாலை நிறைவுற்றது
## சுபம்

~~~~~~

~~~~

# வல்லை வாளிச் சித்தி விநாயகர் ஊஞ்சல், எச்சரீக்கை பராக்கு, லாலி, மங்களம் என்பன

## உடுப்பிட்டி ஸ்ரீ அ.சிவசம்பு புலவரவர்கள் ஆக்கியவை

காப்பு
விருத்தம்

மேதகைய விசுவகுலம் விளங்கத் தோன்றி
மிளிர் தரும் பொற்பணி செய்வோர் மேன்மேலோங்க
மாதகையி னோம்பியெழில் வல்வை வாளி
வாழ்சித்தி விநாயகர் மேல் வழங்கு மூஞ்சல்
போதவடி வாய் மறையின் பொருளாய்ப் பாசம்
போக்கிய வித் தகருளத்துப் பொலிய மேவி
நாதமுடி வாயுமைக்கு நடனங் காட்டு
நாதனார் திருவருளி னடப்ப தாமே.

நூல்

திருமேவு தவளவொளி திகழ்மாடத்துச்
செவ்வியதா ணாற்றிசையுஞ் சேர்த்து நாப்ப
ணுருமேவு தொடர்கனகத் தொளிரப் பூண்ட
வுத்தமமா மணிப்பலகை யும்பர் மேவிக்

குருமேவு கழலடிகும் பிட்டுத் தொண்டர்
குறைவகலுஞ் சுகோததியிற் குழைத்து மூழ்கி
மருமேவு மலரிறைக்க வல்லை வாளி
வாழ்சித்தி விநாயகரே யாட ரூஞ்சல். (1)

ஏற்றசுடர் விளக்கநிரை யிருள்கால் சீக்க
விரட்டுமிணைக் கவரிமென்கா லிதமுண் டாக்கச்
சூற்றனிமா விசையை வளைத் துழனி போக்கத்
துளை செவியிற் சின்னமிசைச் சுவைத்தேன் வாக்கப்
போற்று துதி யெழுபவத்தின் புன்மை வீக்கப்
பூந்தொடைத் தேனாசிதொறும் புலவோர் மோக்க
மாற்றருஞ்சிற் பத்தியலார் வல்லை வாளி
வாழ்சித்தி விநாயகரே யாட ரூஞ்சல். (2)

பிறவாத பெருந்தகையும் பிராட்டி யாரும்
பெற்றுயிரைக் காக்க வைத்த பிள்ளை யாரே
யறவாதஞ் செயும் வினையா லலமந் தோரை
யங்கங் கே யுற்றருளு மன்னை யாரே
துறவாத பத்தியெனுஞ் சுகோத திக்கட்
டுறைந்து பாரான ந்தவடி தொடர்ந்தெந் நாளு
மறவாத வருளம்போல் வல்வை வாளி
வாழ்சித்தி விநாயகரே யாட ரூஞ்சல். (3)

சென்னிமணி முடிபரிதி தேசு வாட்டத்
        திருநுதலி லோடை செவ்வான் சீர்மை காட்ட
மின்னியலு மருப்பிளைய விதுவைக் கூட்ட
        மெய்ச்செவிகள் சாமரத்தின் விதம்பா ராட்டப்
பொன்னியலுங்கழல்கள் கருப் புணர்வை வீட்டப்
        பொருமுகத்தண் ணளியெமதுட் போத மூட்ட
வன்னிமுதற் றருநிரையார் வல்லை வாளி
        வாழ்சித்தி விநாயகரே யாடீ ரூஞ்சல் (4)

மோதகவத் தாவனக முத்தா நித்தா
        மூஷிகவா கனதுவை மா துரமுக் கண்ணா
போதகவித் தகவிபுத பூசா நேச
        போற்றிடுமோர் கொம்பாவே ரம்பா நம்பாற்
பாதககாந் தாரமடு பால காகண்
        பார்த்தருளென் றேத்துமன்பர் பாங்கிற் சூழ
மாதகவா ரற்புதத்து வல்லை வாளி
        வாழ்க சித்திவிநாயகரே யாடீ ரூஞ்சல். (5)

அகத்தியனார் புகழ் நம்பி யாண்டார் நம்பி
        யௌவைவெண்ணெய் மெய்கண்டார் அமரர் கோமா
னகத்தியலும் பக்திமையா ராது போற்ற
        வருளியமெய் யருணமக்கு மாமோ வென்ன

மிகத்துயருற் றடியேமு மெலிந்து வேண்ட
மென்முறுவல் பூத்தொருகால் விழியி னோக்கு
மகத்துவவற் புதனாரே வல்லை வாளி
வாழ்சித்தி விநாயகரே யாட ரூஞ்சல் (6)

சங்கையிலா வன்பரொரு தந்தா யோலந்
தந்திமுகத் தறப்புதமெய்த் தந்தா யோலங்
கங்கை யுமை குமரவயக் கணேச வோலங்
கண்ணெருமுன் றுவடதெய்வக் கரும்பே யோல
மெங்களிரு கண்மணியா மிறைவா வோல
மின்னுயிரே யோலமென்றெய்த் திரைக்கு மோல
மங்குலினிரைப் பொடுமலையும் வல்லை வாளி
வாழ்சித்தி விநாயகரே யாட ரூஞ்சல். (7)

பன்னிருதோட் சிலம்புடைநம் பரன் முன் னாரே
பாதகர்க டுயரமொழிப் பான்முன் னாரே
பன்னகவெம் பணிப்பகவன் பாலனாரே
பத்தருளந் தொறுஞ்சுவைக்கும் பால னாரே
துன்னுமல விருளடர்க்குஞ் சூர னாரே
தும்பி முகன் மிடலடர்ந்த சூர னாரே
வன்ன மலி மதிலுடுத்த வல்வை வாளி
வாழ்சித்தி விநாயகரே யாட ரூஞ்சல். (8)

மோதகமார் கரத்தாரே யாடீ ரூஞ்சல்
முப் புரிநூ லுரத்தாரே யாடீ ரூஞ்சல்
போதகவா னனத்தாரே யாடீ ரூஞ்சல்
புனிதமுத்தித் தனத்தாரே யாடீ ரூஞ்சல்
சாதக வெம் படையாரே யாடீ ரூஞ்சல்
தயங்கொருகொம் புடையாரே யாடீ ரூஞ்சல்
வாதகமில் லார்பரவ வல்லை வாளி
வாழ் சித்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். (9)

ஆவாழ வாழ மறை யாக மங்க
ளன்பரொடு மெய்த்தவமு மறமும் வாழப்
பூவாழ வந்தசெங் கோற் பொருநர் வாழப்
புத்தமிர்தச் செந்தமிழைப் புரப்போர் வாழத்
தூவாழக் குலவுசைவத் தொன்மை வாழத்
தொழுதகைய வாலயங்க ளிலங்கி வாழ
மாவாழ வொளிர் பொழில் சூழ் வல்லை வாளி
வாழ்சித்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். (10)

## எச்சரீக்கை

திருவே சுர தருவே யருளுருவே யெச்சரீக்கை
தேசா பவ நாசா வெம தீசா வெச்சரீக்கை
மருவா ருள மருவாய் மலர் மருவா யெச்சரீக்கை
மந்தா கினி னமந்தா மருப்பிந்தா வெச்சரீக்கை.
உடையா யெமையுடையாய் மதிச்சடையா யெச்சரீக்கை
ஊனாயுயிரானாய் பிறவானா யெச்சரீக்கை
படையாய் மருப் புடையாய் கவித் தொடையா யெச்சரீக்கை
பழையா யருள் மழையாய் புரியிழையாயெச்சரீக்கை.

## பராக்கு

இந்திரனுக் காறளித்த வருளே பராக்கு
எங்குமெலா மானபரப் பொருளே பராக்கு
சந்திரனுக் கின்பளித்த கதியே பராக்கு
சந்தவிசைக் கதைவரைந்த பதியே பராக்கு
மந்திரமு மாமறையு மானாய் பராக்கு
மல்கின்ப மேறுபர வானாய் பராக்கு
அந்திவணன் றேரிறச் செய் அத்தா பராக்கு
அணிவல்லை வாளியருட் சித்தா பராக்கு.

## லாலி

மாயவனா ரகியுருவந் தீர்த்தவருட் சீலா லாலி
மாயவலைப்பட்டே முக்கருளுமலர்க் காலா லாலி
லாலி
அகத்தியனா ருடனாடல் புரிந்தவொரு மூலா லாலி
சகத்தையெல்லாம் பயந்தவுமை யளித்த முதற்
பாலா லாலி லாலி.
சக்தியயிலேந்து தமிழ் முருகனுக்கு முத்தாய் லாலி
சித்தி புத்தி யிருமருங்கு மாரவருள் பூத்தாய் லாலி
லாலி
கயமுகன்ற னுரம்பிழந்த வெண்டவளத் தந்தா லாலி
சயவல்லை வாளியம ரானைமுகத் தெந்தாய் லாலி
லாலி.

## மங்களம்

வல்லை வாளி வாசகருக்கு மங்களம் ~ பக்தி
வாய்ந்த தொண்டர் நேசருக்கு மங்களம்
தொல்லை வினை நாசருக்கு மங்களம் ~ ஔவை
சொற்றமிழ்கூ டீசருக்கு மங்களம்.
பேறுதரு பாதகருக்கு மங்களம் ~ மறை
பேசுபர போதகருக்கு மங்களம்
வீறுகண நாதருக்கு மங்களம் ~ எங்கும்
விளங்கருள தீதருக்கு மங்களம்.

முற்றிற்று

# நேரிசை வெண்பா

**சிவசம்புப் புலவர் அவர்களால் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் ஸ்ரீ சிதம்பரநடராஜ பெருமானுடைய குஞ்சி தபாத நிழலை அடைந்தபோது சொல்லப்பட்ட செய்யுட்கள் வருமாறு**

தேவரசு மெய்ந்நூற் றிறம்புபலவு மாயிருக்
கூவலினாற் போதித்த வாறுமுக — நாவலனார்
சீர்முகத்தைக் கண்டவர்க டெண்டிரைப்பூ மண்டலத்தில்
யார்முகத்தைக் காண்ப தினிது.

கற்றார் பிறரெல்லாங் காசினிப்பொய் வாழ்விலலைந்
துற்றார் செயற்போல வுன்னராய் ~ முற்றார்
நயத்தகைய வாறுமுக நவலனே யென்றுஞ்
சேயத்தகைய செய்தான் றெளிந்து.

I — I இவர் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அருளம்பலம் முதலியாரின் மைந்தர். நல்லூர் சம்பந்தப்புலவர், சரவணமுத்துப் புலவர் ஆகியோரிடம் இலக்கிய இலக்கணம் பயின்றவர். நாவலரின் ஒருசாலை மாணாக்கர். சிறந்த கவிவாணர். சொல்லும் பொருளும் தொடைகளும் சிறப்புற வைத்துக் கவியாக்கும் புலமையிற் சிறந்தவர். கந்தவனநாதர் பதிகம், வல்லிபுரநாதர் பதிகம், வேரக அந்தாதி, எட்டிக்குடி பிரபந்தம், புலோலி நான் மணிமாலை, செந்திற் திருவந்தாதி, பாண்டித் துரைத்தேவர் நான்மணிமாலை, பாஸ்கரசேதுபதி, கல்லாடக் கலித்துறை, மயில்வாகனவம்ச வைபவம் முதலானவை இவர் பாடிய

கவிதை நூல்களாகும். மறைசையந்தாதி, யாப்பருங் கலகக் காரிகை, கந்தபுராணம் ~ வள்ளியம்மை முதலான நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். மேற்படி பாடல்கள் 1879 வருடம், மார்கழி மாதம், 24ந் தேதி இலங்கைநேசனில் வெளிவந்தவையாகும்.

## எழுபத்திரண்டுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

தருமேவு பொன்னுலக நிகரான நல்லைத்
 தலத்திமலர் சிந்தாமணி
சாலப்பன் னாட்கந்த வேள்செய்து வைத்தவொண்
 டவவித்தின் வந்தவிளைவு
சான்றமது ரைச்சங்க மூன்றுமிங் கொன்றாய்த்
 தலைப்பட்ட பெரியசங்கஞ்
சம்புபூ சாதியம மேத்திய நயிட்டி கந்
 தவறூறாப் பிரமசாரி
சமஸ்கிருத பாஷா வியாகரண சித்தாந்த
 தர்க்கவே தாந்தநிலையந்
தகையுறும் பதிபாச பசுலக்ஷ ணப்ரபல
 சைவாகம மப்பொக்கிஷஞ்
சார்ந்தவர் தமக்கரிய நுண்பொருட் குவைதருஞ்
 சகலசாஸ் திரசாகரஞ்
சத்தியசிவ தர்மிணித் தீக்ஷாவி சிட்டவர்
 சாரியச மூகதிலகந்
தண்டமிழ்ப் பரவையை முகந்துயிர்ப் பயிர்களைத்
 தழைவித்த பருவமேகந்
தமிழ்நிலக் கனகவட பர்வத முகட்டிற்

றயங்குமா ணிக்கதீபந்
தன்னாணை வழியினிற் பச்சைவ நாட்டையொரு
தனிபுரந் திடுமெயரசு
தழனிரைய வாய்ப்புகுத் திடுமிதர சமயத்
தமத்தினைப் பருகுமென்றாழ்.

மருமேவு வெண்கமல வாணிநட மகலா
மகத்வப்ர தாபமன்றம்
வழிவழித் தலைநின்ற பரமாப்த பரசிவ
மதாசார தெய்வசொரூப
மாதவ நன்மாணவகர் நெஞ்சகக் கோயிலில்
வளர்ந்திடுஞ் சேமவைப்பு
மாணிக்க வாசகர் முதற்குரவ ரோடறிஞர்
வாழ்த்தியேத் தியமெய்க்குரு
வாடும் பசிப்பிணிக் கறுசுவையு ணாத்தினம்
வழங்கிடும் காமதேனு
வள்ளன்மை யொழியா திலங்குமா டம்பர
மகாராச ராசபிரபு
மதுரப்ர சங்கவமிர் தத்தினா லுலகத்தை
வாழ்வித்த சற்பாத்திர
மாண்புபெற முற்றியுண் ணெகிழ்ந்தின்ப மாமது
வழிந்திடும் பத்திக்கனி
வந்திரப் பவர்குறை கிளக்கமுன் வேண்டுவ
மகிழ்ந்துதவு பாரிசாதம்
வாலறிவி னோரருட் பாடனற வொழுகுறாஉ
மணிவளப் பூர்ணகும்ப
மண்டல மெல்லாம்பெரிது மேற்கொளமெல் கிக்குளிரு

மங்களசு கந்தபுஷ்பம்
வரசாது சனசங்க பூச்யபூ ஷணநடுவில்
வாய்ந்தநா யகரத்தினங்

கருமேவு முயிர்களுக் கானந்த மெய்ந்நிலைமை
காட்டிய தெருட்பிரகாசங்
கவினும்வீ ணாபுர மகீபதி சித்திரனொளிர்
காஞ்சன மணிக்கிரீடங்
கல்லூரி யூர்தொறு மமைத்துச் சிறார்க்கினிய
கல்வியமு தூட்டு மன்னை
கற்பியல் வழாவகை நிரம்பிய வியுற்பனக்
கவிஞருக் கிருகண்மணி
காதலிற் பலகாலு மோடிக் மெய்க் கல்விக்
கடற்கரைகள் கண்டவங்கங்
கங்கா குலப்புனித க்ஷீரோ ததித்தலைக்
காண்டகவு தித்தமதியங்
கலபமயி லூருமெம் மான்புகழ்ப் பணிகளமர்
கதிர்செயு மணிப்பேடகம்
கலைஞராம் பொன்னுயர்வு தாழ்கவு டெரித்திடுங்
காமர வரஞ்சியாணி
கலகப்ர சங்கவிப சங்கமிட லெஞசிக்
கலங்கச்செய் விசயாசிங்கங்

கனிவுடைச் செந்தமிழ்க் கலைதலை யெடுத்துக்
களிப்புறச் செய்தவழுதி
கமையறி வடக்கமுத லாஞ்சிகர முடனெழூஉங்
கனசுகுண மாபூதரங்

காவலர்க ளேனையர்கள் காணிக்கை யொடுநிதங்
கைதொழூந் தேவாலயந்.
திருமேவு மன்னவர் தமக்குமுத் யோகத்
திறந்தேற்று மதியமைச்சு
தேசாபி மானமுஞ் சமயாபி மானமுஞ்
சிதையாமல் வாழ்ந்தவாழ்வு
சேர்ந்தவர் செயுங்குறையை யன்றே மறந்திடுஞ்
சித்தசுத் தித்தயாளு
திகழ்நாத பரியந்த விளைவெலா முடியத்
தெளிந்திடும் பெரியயோகி
தேற்றுறும் போதனா நியமசா மர்த்திய
சிரேட்டசன் மார்க்கபீடம்
திரிபகல நூலுரைகள் பலவுலகு வந்திடச்
செய்தவதி யூகசாரஞ்

சிற்றம் பலத்தாடு மானந்த நாடக
தியானபுண் ணியசிறில
சிறியாறு முகநா வலன்வரசு கானுபூ
தித்தகைய சைவமுதல்வன்
செறிதரும் பிரமாதி வற்சரத் தேண்மதித்
தேதியிரு பத்தொன்றினிற்
செயசுங்க வாரமக நாளபர பக்கமுறு
திதியெனுஞ் சத்தமியினிற்
றேசோ மயானந்த வாசாம கோசர
திகம்பர சமஸ்தசுரபூ
சிதவகில சகதண்ட நாதநித் தியசுத்த
சிவபதத் தெய்தினானே.

## பன்னிரு சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

வரமேவு துய்யமறை யாமக வழக்கொடுநன்
மக்கள்பயி றேசமதனில்
வளர்தவச் சாதியி லுதித்திதர மதமுறா
மாபாக்கய மாண்புகுலவித்
தரமேவு கலைமுழு துணர்ந்துவாழ் வெனுமயற்
சாகரந் தப்பிமிடியிற்
றளரா தடக்கநிறை வாய்மைகொண்ட யாதிய
தழீஇயுயிர்கண் மாட்டன்புறீஇத்
திருமேவு மருண்டப் பதிபாச பசுவிய
றெரிந்துமெய்ப் பத்திவாய்ந்து
சிவபூசை செய்துதமிழ் நாட்டினைத் தனியரசு
செய்துபல நூல்பரப்பி
யுரமேவு சைவப்ர சங்கஞ்செய் திளைஞர்கட்
குணர்வுதரு கழகநிறுவி
யோங்குபுக ழாறுமுக நாவலன் பெற்றவுயர்
வொருசேர யார்க்குமிலையே.

## எண்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

ஓங்கியதொல் காப்பியத்திற் குரைமுன் செய்த
வுவப்பினாற் சிலருரையா சிரிய னென்ன
வூங்கிளம்பூ ரணனைவியந் துரைத்தா ரன்னோ
னவ்வுரையு மிழிவின்க ணமைந்த தம்மா
தாங்குபுகழ் நாவலனாஞ் சிறப்புப் பேராற்

றன்னியற்பே ருலகமெலாந் தழைக்க நின்ற
வீங்கிவன்செய்ந் நூலுரைகள் பலசற் றேனு
மிழிவின்கட் படுவவென்றா ரியம்பு வாரே.
வெண்நீறுங் கண்டிகையும் வெண்பொற் றூசும்
வெண்ணகையும் பவித்திரமும் விளங்கக் காட்டி
யுண்ணீடு பத்தியினர் போலிங் குள்ள
வொருசிலர்தா முரைக்குமொழி யுவந்து கொள்ளோம்
மண்ணீடு புகழ்ந்திருநா வலனார் சொல்லும்
வாசகங்கள் யெவையவையே வைய முய்யப்
பண்ணீடு மொழிபங்கன் பகர்ந்த வாக்காப்
பணிந்துகொள்வே மிதுநமக்குப் பயன்பட் டன்றே.
வித்தகமெய்ந் நூலுரைக டுகளிற் பல்கி
விராய்க்கிடந்து வரம்பிகந்த விதங்கள் பல்வே
றுத்தனையு மேடுகளின் முன்னர்க் கற்ற
வாசிரியர் பெரிதுணர்வ ரவைநன் றாய்ந்து
சுத்தமுறத் திருத்தியச்சி விடுவித் தியார்க்குந்
தொலைவிலுணர் வுதிப்பித்தான் றொல்லைச் சீர்த்தி
யுத்தமநாவலனவன்போ லவற்றை யெல்லா
முய்த்துணர்ந்து திருத்தவல்லா ருலகத் தியாரே.

## கட்டளைக் கலித்துறை

மறையோ ரருட்சைவ தேசிகர் பாவலர் வாழ்ந்தனர்நூற்
றுறையோடு சைவந் தலைசாய்ந் திடக்கண்டு தூங்கினர்நா
விறையோ னொருதனி யேநின் றவற்றை யெழுப்பிநிறீஇக்
குறையோ வறவைத்த தற்கென்கைம் மாறு கொடுத்தனரே

பாவலர் பற்பலர் செல்வர்கள் பற்பலர் பாரடங்க
மேவின ரேனு மவரா லுலகுக்கு மெய்ப்பயனென்
னுாவல னாலிங்கு நாளுக்கு நாள்வந்த நன்மையெல்லா
மேவருந் தேர்வ ரிவன்போல் வருபவர் யாரினியே.

ஏன்பிர பந்தங்கள் கேட்டுப் புலமை யிருஞ்சிறப்பீந்
தன்பிரி யாமற் பரிசு செயுமென் றறைந்தெவர்க்கு
நன்பிரி யத்திற் றலைமையெல் லாந்தந்த நாவலனா
ரின்பிற வாநிலத் துற்றா ரினித்துணை யாரெமெக்கே.

ஆரூர னில்லைப் புகலியர் கோனில்லை யப்பனில்லைச்
சீரூரு மாணிக்க வாசக னில்லைத் திசையளந்த
பேரூரு மாறு முகநா வலனில்லைப் பின்னிங்கியார்
நீரூரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கு நீர்மையரே.

புல்லரை யேயுள்ள சொற்பொருள் யாவும் புலவர்தெரீஇ
நல்லன வாகப் புனைந்துவிட் டாரினி நாமென்செய்வேந்
தொல்லிய வாறு முகநா வலனைச் சுருக்கமறச்
சொல்லிய நாமகட் கெண்ணமுண் டேலென்றுஞ் சொல்லு
கவே

~~~~~~~~

~~~~

**தாது வருடம், புரட்டாதி மாதம் (1876) பருத்தித்துறையைச் சார்ந்த புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையிலே, கல்வி கற்கும் பிள்ளைகளைப் பரீக்ஷிக்கப் போயிருந்தபோது, அ.சிவசம்புப்புலவர் பாடிய பாடல்கள் வருமாறு.**

ஆறுமுக நாவலன்சீ ரான்றதமிழ்க் காவலன்மெய்
வேறுபடும் பொய்மதத்தோர் மேவலன்றன் ~ வீறுபுகழ்ச்
சைவப்பிர காசவித்தியா சாலைமிக வோங்கிடுக
வெவ்வெப் பகலு மினிது.

விருத்தம்

ஆறுமுக நாவலனா மறிஞர் கோனா
லணிதிகழும் புலோலியினி லமைக்கப் பெற்ற
வேறுபுகழ்க் கழகத்திற் கற்கு மைந்த
ரிருஞ்சபையிற் காட்டியநூ லியல்பு முற்ற
வூறுமகிழ் வொடுதெரிந்தா மிவருக் கிவ்வா
றொருசின்னா ளினிற்றேற்ற முதிப்பச் செய்த
மாறுபெறா மதிக்குரவர் முயல்வை யின்னும்
வளர்த்திடுதல் சிவன் கருணை மாண்ப தாமே.

**ஈசுர வருடம், புரட்டாதி மாதம் (1877) மேற்படி வித்தியா சாலை பரீக்ஷைக்குப் போயிருந்தபோது அ.சிவசம்புப்புலவர் சொல்லிய பாடல்கள் வருமாறு.**

## வெண்பா

சைவமத மாதுந் தமிழ்மாது மாட்டுகந்த
தெய்வசபை யைப்புலமைச் சீர்வாய்ந்த — மெய்வளரு
மாறுமுக நாவலனா மான்றபெரும் புண்ணியனா
லேறியகல் லூரியென்ப தென்.

## கலிவெண்பா

ஆரூர னும்புகலி யாப்பனுமெய்ந் நாவரகஞ்
சீரூரும் வாதவூர்த் தேசிகனும் ~ பேரூரும்
பொன்னா டொருசிறிய புன்னா டெனப்புரியுந்
தென்னாடு காத்த செங்கோற் சீரியரு — முன்னாடு
மூத்த வறிவினரு முச்சங்கப் பாவலரும்
வாய்த்த பரனோம்பி மன்னவைத்த — வேத்துதகைச்
சைவமத முந்தமிழும் பின்னா டனிபுரக்குஞ்
செவ்வியரில் லாமற் றிறம்பலுறுஞ் ~ செவ்வியிடைக்
குன்றெறிந்த செவ்வேற் குகனருளோ தென்புலியூர்
மன்றுகிழ வோனருளோ வாய்த்தவவை — நன்றுபெற
நாம்பன்னாட் செய்துவைத்த நற்றவத்தா லென்றுலகின்
மேம்படுநல் லோர்கைசிர மேலேற — வேம்பலுறீஇ
யுப்பு முலகு முளவளவும் வாழ்கவெனச்
செப்பிடுமெய் வாழ்த்தெண்டிசைவிழுங்க — வொப்பினல்லூர்

நண்ணியசீ ராறுமுக நாவலனா மொண்படிவப்
புண்ணியனா லின்பப் புலோலிநகர்க் ~ கண்ணிலவுஞ்
சாலுநய வாய்மைபெறூஉஞ் சைவப்பிர காசவித்யா
சாலையிடைக் கற்குந் தனயர்பால் ~ வாலியசீ
ராரணமோ கோவையோ வந்தாதி யோநிகண்டோ
சீரணவுஞ் சுத்த சிவாகமமோ — பேரணவுங்
காவியமோ வாய்ந்த கணக்கோ விலக்கணமோ
தூவியலு நீதித் துறைகளோ — தாவியலாத்
துக்க புராணமோ தர்க்கமோ நாணாளும்
புக்குவமாய் வீறிப் பலிக்கவுநும் ~ மக்கடமைக்
கானலைநீ ரென்னுங் கருத்தாற் பிறபுலத்தி
னேனலைய வைத்தீ ரெமரெங்காள் ~ ஈனமிலாக்
கல்விசில வாண்டுமுள காண்மினெனிற் சைவபத்திச்
செல்வமுண்டோ மெய்ந்நூற் றெளிவுண்டோ நல்வளனார்
கன்னல்கைக்குங் கையாது கானிம்ப மென்பாரை
யின்னிலத்திற் கண்டவர்கள் யார்.

~~~~~~

~~~

# சிவசம்புப் புலவரின் ஆக்கங்கள்

~~~~ ~~~~ ~~~~ ~~~~ ~~~~

## 1. பதிகம்

1. அல்வாய் வரதராஜ விநாயகர் பதிகம்.
2. கந்தவனநாதர் பதிகம்.
3. வல்லிபுரநாதர் பதிகம்.
4. இணுவிற் சுப்பிரமணியசுவாமி பதிகம்.
5. திருகோணமலைப் பெருமாள் பதிகம்.
6. திருகோணமலை விசுவநாதசுவாமி பதிகம்.
7. மண்டூர்ப் பதிகம்.
8. கண்டிக் கதிரேசர் பதிகம்.
9. கண்டிச் செல்வ விநாயகர் பதிகம்.
10. மறைசைப் பதிகம்.
11. எட்டிக்குடிப் பதிகம்.
12. பினாங்கு தண்ணீர்மலைக் கந்தசுவாமி பதிகம். (மலேசியாவில் உள்ள பினாங்கு)
13. அல்வாய்க் குமிழடி விநாயகர் பதிகம்.

## 2. ஊஞ்சல்.

1. வல்லைவாளிச் சித்தி விநாயகரூஞ்சல் .(உடுப்பிட்டிசந்தியருகிலுள்ளது)
2. கந்தவன நாயகரூஞ்சல்.
3. புலோலி பருவத வர்தனியூஞ்சல்.
4. புலோலி முத்துக்குமாரசுவாமியூஞ்சல்.
5. பருத்தித்துறை சித்தி விநாயகரூஞ்சல்.
~~~~

6. உடுப்பிட்டி வீரபத்திரரூஞ்சல்
7. கெருடாவில் தொட்டிற் கந்தசுவாமியூஞ்சல்.
   (கெருடாவில் தொண்டைமானாற்றிற்கு கிழக்கே)
8. எட்டிகுடியூஞ்சல். பராக்கு, எச்சரிக்கை, லாலி,
   மங்களம், ஏசல், நலுங்கு, முறையீடு, தாலாட்டு.
9. திருகோணமலை விசுவநாத சுவாமியூஞ்சல்.
10. பெரியதுறை முத்துக்குமாரசுவாமியூஞ்சல்.
11. வல்லிபுரநாதரூஞ்சல்.
12. வண்ணைக் குருநாதசுவாமியூஞ்சல்.

## 3. இரட்டை மணிமாலை

1. கோணேசரிரட்டை மணிமாலை.
2. மண்டூரிரட்டை மணிமாலை.
3. கோடிக் குழகரிரட்டை மணிமாலை.
4. பாஸ்கரசேதுபதியிரட்டை மணிமாலை.

## 4. மும்மணிக் கோவை

1. எட்டிகுடி மும்மணிக்கோவை.
2. வில்லூன்றி மும்மணிக்கோவை. (திருகோண
   மலை)

## 5. நான்மணிமாலை

1. அல்வாய் மாலிசந்தி நான்மணிமாலை.
2. கந்தவன நான்மணிமாலை
3. புலோலி நால்வர் நான்மணிமாலை.
4. பருத்தித்துறை சித்திவிநாயகர் நான்மணி
   மாலை
5. மறைசை நான்மணிமாலை.
6. பாஸ்கர சேதுபதி நான்மணிமாலை.

7. பாண்டித்துரைத் தேவர் நான்மணிமாலை.

## 6. வெண்பா

1. கதிர்காம வெண்பா (நூறு செய்யுள்கள்)

## 7. கலிவெண்பா

1. கந்தவனக் கலிவெண்பா.
2. வல்லிபுரக் கலிவெண்பா.
3. புலோலிப் புறொக்ரர் நா.மயில்வாகனப்ப பிள்ளை பாடுவித்தது. விஷ்ணுவும் சிவனும் ஒன்று சைவ வைஷ்ணவப் பூசல் ஆகாது என ஆதாரங் காட்டிப் பாடப்பட்டது.

## 8. உரை

1. வல்லிபுர நாதருலா.

## 9. கலித்துறை

1. பாஸ்கர சேதுபதி கல்லாடசராக் கலித்துறை.
2. வல்வைக் கலித்துறை.(வல்வெட்டித்துறை)
3. பருத்தித்துறைக் கலித்துறை.

## 10. விஞ்சதி

1. நல்லைக் கந்தசுவாமி விஞ்சதி.

## 11. சதகம்

1. கந்தவனச் சதகம்.

## 12. கலம்பகம்

1. கந்தவனக் கலம்பகம்.

## 13. அந்தாதி

1. திருவேரக யமகவந்தாதி.
2. திருச் செந்தில் யமகவந்தாதி.
3. திருச் செந்திற்றிருக்கந்தாதி.
4. மாவையந்தாதி.
5. மாவையந்தாதி போட்டிகொண்ட இருவேறு தரப்பினருக்கு, இருவேறு அந்தாதிகள் தனித்தனி யாக ஆக்கிக் கொடுக் கப்பட்டன. மாவை — மாவிட்டபுரம்.

## 14. செய்யுட்கோவை

1. மாவைச் செய்யுட் கோவை (குமரகுருபரரின் சிதம்பரச் செய்யுட்கோவை போன்றது.)

## 15. கண்ணி

1. சிவகுருக் கண்ணி பாகம் ~ 1.
2. சிவகுருக் கண்ணி பாகம் ~ 2

## 16 — 1. மாலை

1. வல்வைக் கந்தசாமிப்பிள்ளை பிரபாவப் பாமாலை.

## 16 — 2. வைபவம்

1. மயில்வாகன வம்ச வைபவம்.
2. டாக்டர் இ.வைத்திலிங்க வைபவம்.
3. உடுப்பிட்டி மணியகாரன் வம்ச வைபவம்.

## 17. கீர்த்தனம்

1. கந்தவன நாதர் கீர்த்தனம்.

## 18. முறையீடு

1. நயனரோக முறையீடு (கந்தவன நாயகருக்கு)

## 19. பதம்

1. பாஸ்கரசேதுபதி பதம்.

## 20. சித்திரகவி

1. பாஸ்கரசேதுபதி சித்திரகவி.

## 21. நாவலர் புகழ்க்கவிகள்.

**22 சரமகவிகள்.** (புலவர் வாழ்க்கையோடொட்டிய அகச் சான்றுகள் கொண்டவை.)

1. தௌகித்திரி கமலமுத்துப்பிள்ளை சரமகவி.
2. கோப்பாய் சுப்பிரமணியபிள்ளை சரமகவி.
3. புலோலிப் புறொக்ரர் நா.மயில்வாகனப்பிள்ளை சரமகவி.
4. நாவலர் சரமகவி.

## 23. கண்டனம்

1. நவிண்டிற் சபிண்டி நாடக சங்காரம்.
2. அக்காலம் வெளிவந்து கொண்டிருந்த திராவிட கோகிலத்தில் வந்த கண்டனங்கள்.

### 24. நாடகம்

1. வாளபீமன் நாடகம் :- பழையதைப் புதுக்கியும், திருத்தியும் நாடகத்தைப் பழக்கி மேடையேற்றி றியவர். களரிபோடுவித்தவர்

## 25. அச்சேறிய உரைகள்

1. மறைசையந்தாதியுரை.
2. யாப்பருங் கலக்காரிகையுரை.
3. வள்ளி திருமணப் படலவுரை.

## 26. அச்சேறாதவுரைகள்

1. நன்னூல் விருத்தியுரை.
2. நேமி நாதவுரை.
3. சிதம்பரப் பாட்டியலுரை.
4. தண்டியலங்காரவுரை.
5. தஞ்சைவாணன் கோவையுரை.
6. திருச்செந்தில் யமகவந்தாதியுரை (தாமாக்கிய அந்தாதிகட்குத் தாமே உரையெழுதியது.)
7. திருச்செந்திற்றிருக் கந்தாதியுரை. (தாமாக்கிய அந்தாதிகட்குத் தாமே உரையெழுதியது.)
8. திருவேரக யமகவந்தாதியுரை. (தாமாக்கிய அந்தாதிகட்குத் தாமே உரையெழுதியது.)
9. சேதுபுராணவுரை.
10. வெண்பாப் பாட்டியலுரை.

## 27. சாத்துக்கவிகள்

1. வல்வை வைத்தியலிங்கப்பிள்ளை ~ இயற்றமிழ்ப் போதகாசிரியரின் ~ கந்தர லங்காரவுரைக்கு
2. வல்வை வைத்தியலிங்கபிள்ளை — நம்பியகப் பொருளுரைக்கு
3. வல்வை வைத்தியலிங்கபிள்ளை — சிந்தாமணி நிகண்டிற்கு
4. புலோலி வ.குமாரசாமிப்புலவர் ~ பாரத வுரைக்கு
5. புலோலி வ.கணபதிப்பிள்ளை — வேதார ணியேசர் ஊஞ்சலிற்கு.
6. ம.க.வேற்பிள்ளை — புலியூரந்தாதியுரைக்கு.

ஓமை அந்தாதிக்கு. ஓமை — ஓமந்தை.

7. சுன்னை முருகேசபண்டிதர் ~ குடத்தை வெண்பாவுக்கு

8. தெய்லர் துரையப்பாபிள்ளை — கீதரசமஞ்சரிக்கு

இன்னும் பல. சிறப்பானவையே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

~~~~~~~~~
~~~~~~~~~

# உதவிய உசாத்துணைகள்


1. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சரித்திரம் ~ வே.கனக ரத்தின உபாத்தியாயர்.

2. நாவலர் சரித்திரம் ~ த.கைலாசபிள்ளை. பதிப்பு 1916, 1985

3. சிவசம்புப் புலவர் சரித்திரம் ~ கு.முத்துக் குமாரசாமிப்பிள்ளை.

4..ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் ~ வி.முத்துக்குமாரசுவாமி B.A

5. மயில்வாகன வம்சவைபவம் ~ அ.சிவசம்புப் புலவர்.

6. பாவலர் சரித்திர தீபகம் ~ ஆணல்ட் சதாசிவம்பிள்ளை

7. தமிழ்ப்புலவர் சரித்திரம் ~ அ.குமாரசாமிப்புலவர்.

8. ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம் ~பிரம்மசிறீகணேசையர்

9. தினகரன் ~ தீபாவளி மலர். 1955 நவம்பர் 13~ பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை.

10. தமிழிலக்கிய வரலாறு – V.செல்வநாயகம். M.A

11. தமிழர் காப்பு – சு.வித்தியானந்தன்

12.யாழ்ப்பாண வைபவ கௌமுதி ,1918 – வசாவிளான் க.வேலுப் பிள்ளை.இரண்டாம் பதிப்பு வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம்

கனடா

13. உதயதாரகை – பங்குனி 1883

14. நாவலர் நினைவு மலர் ~ பண்டிதர் கா.பொ.இரத்தினம் தொகுப்பு

15. காரிகையுரை – அ.சிவசம்பு புலவர்.

16. வள்ளி திருமணப்படலவுரை – அ.சிவசம்புப் புலவர்.

17. இலங்கைத்தமிழ் விழா மலர் ~ 1951.

18. பாஸ்கரசேதுபதி கல்லாடக் கலித்துறை – சோபகிருது வருடப்பதிப்பு.

19. சிவசம்புப் புலவர் பிரபந்தத் திரட்டு – செவ்வந்திநாத தேசிகர் பதிப்பு.

20. செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் ~ பல்கலைப் புலவர் க.சி.குலரத்தினம்.

21. கந்தவன நான்மணிமாலையும் ஆசிரிய விருத்தமும்கீர்த்தனமும் (சிவசம்புப் புலவர் இயற்றியவை) திக்கம் சி.செல்லையா பிள்ளை பதிப்பு

22. நவிண்டில் சபிண்டி நாடக சங்காரம் ~ அ.சிவசம்புப் புலவர்

23. கந்தவனநாதர் நான்மணிமாலையும் பதிகமும்

திருப்பள்ளி எழுச்சியும் ~ நவாலியூர் க.சோம
சுந்தரப் புலவர்.

24. செவ்வந்தி – சஞ்சிகை – சட்டம், கலை, இலக்கியம் ~ புத்தகம் அக்டோபர் 1976. ஸ்ரீலங்கா அச்சகம்.

25. தமிழ்ப் புலவர் வரலாறு ~முதலாம் பாகம் ~ பண்டிதர் சி.அப்புத்துரை.

26. வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள் ~ இரண்டாம் பதிப்பு – ந.நகுலசிகாமணி.

27. அருணகிரிநாதர் அருளிய கந்தரலங்கார மூலமும் வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச.வயித்தியலிங்கபிள்ளை அவர்கள் இயற்றிய உரையும், மூன்றாம் பதிப்பு – வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம்..

28. தமிழ்நாடும் ஈழத்துத் தமிழ்ச்சான்றோரும் ~ வித்துவான் க.செபரெத்தினம்

29. தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம் ~ வை.பழனியப்பன் ~ அண்ணாமலைப் பல்கலைக்ழகம்.

30. இந்து சாதனம் 19~02~2000, 18~04~2000.

31. சைவம் வளர்த்த சான்றோர்கள் ~ பல்கலைப் புலவர் க.கிருபரத்தினம்.

32. நாவலர் மரபு ~ இரா.வை.கனகரத்தினம்.

33. நாவலர் உரைத்திறன் ~ வை.கனகரத்தினம்.
34. நாவலர் வழியில் தமிழறிஞர் ~ யோகேஸ்வரி கணேசலிங்கம்.

35. நாவலர் நூற்றாண்டு விழா மலர்கள்.

36. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழிலக்கியம் ~ மயிலை சீனி.வேங்கடசாமி.

37. ஆற்றங்கரையான் ~ அ.சண்முகதாஸ் ரு மனோன்மணி சண்முகதாஸ்.

38. இலக்கிய வழி –பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளை. (திருத்திய பதிப்பு)

39. தமிழ்ப் புலவர் வரிசை – சு.இராமசாமிப்புலவர். இந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

40. தமிழிலக்கிய வரலாறு – கா.சுப்பிரமணிய பிள்ளை.

41. புலோலி நால்வர் நான்மணிமாலை. அ.சிவசம் புப்புலவர், புலோலிப் பசுபதீஸ்வரர் தேவஸ்தான வெளியீடு ~ 2002.

42. கந்தவனக் காரிகை –அல்வைக் கவிஞர் மு.செல்லையா

43. ஈழத்துத் தமிழ்நூல் வரலாறு
வித்துவான் F.X.C.நடராசா.

44. தமிழிலக்கியத்தில் ஈழத்து அறிஞரின்
பெருமுயற்சி ~ பொ.பூலோகசிங்கம்.

45. நாவலன் ~ பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை
யவர்களின் விசேட மலர் ~ யாழ்ப்பாண
சைவாசிரிய கலாசாலைமாணவர் சங்க
வெளியீடு — 1959.

46. ஈழத்துத் தமிழ்ப்புலவர் கவிதைக் களஞ்சியம்.
கலாநிதி ஆ.சதாசிவம்.

# வல்வை வரலாற்று ஆவணக்காப்பகத்தின் வெளியீடுகள்

~~~~~~

**1.** வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள் - 1997
முதற்பதிப்பு, ந.நகுலசிகாமணி
இரண்டாம் பதிப்பு, 2006

2. உடுப்பிட்டி அ.சிவசம்புப்புலவர் - வாழ்க்கை வரலாறும் அவரது ஆக்கங்கள், 2010 ந.நகுலசிகாமணி

3. ஈழத்து வரலாற்று சுவடுகள். 2010 ந.நகுலசிகாமணி

4. மனோமணிமலர்கள். கனக மனோகரன், 2008

## மீள்பதிப்பு செய்த நூல்கள்

1. கைலாயமாலை. 1619 – முத்துராச கவிராசர்

2. யாழ்ப்பாண வைபவ மாலை. 1884
மாதகல் மயில்வா கனப் புலவர்.

3. யாழ்ப்பாண வைபவ கௌமுதி. 1918
கல்லடி க.வேலுப்பிள்ளை

4. அருணகிரிநாதர் அருளிய கந்தரலரங்காரமும் வல்வை இயற்றமிழ் போதகாசிரியர் ச.வயித்தியலிங்கபிள்ளை இயற்றிய உரை. 1912 பதிப்பு

5. கந்தவனநாதர் நான்மணிமாலையும் பதிகமும், திருப் பள்ளி எழுச்சியும், முதற்பதிப்பு 1928 மலேஷியா.
நவாலியூர் சோமசுந்தரப்புலவர்.
~~~~~~

6. பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் சரித்திரம். முதற்பதிப்பு – 1954.
7. நவரத்தினசாமி நீச்சு வீரன் வாழ்க்கைச் சரித்திரம் 1954, காவலூர் கவிஞர் ஜி.எம். செல்வராஜ்

8. தொண்டைமானாறு செல்வச்சந்நிதியும் வரலாறும். 1974 சே.நாகலிங்கம்.

9. அனைத்துலக நீதிச்சபைமுன் இலங்கைத்தமிழர் பிரச்சனை, 1973 தந்தை செல்வா சமர்ப்பித்த அறிக்கை.

10. S.J.V.CHELVANAYAKAM a tribute – **1978.**

11. RE – OPENING OF NORTH – CEYLON PORT – **1951**
(வல்வைக் கப்பலின் அமெரிக்க பயணம் அடங்கிய நூல்)

12. சுன்னாகம் வரதராஜபண்டிதர். சிவராத்திரிபுராணம், வல்வை இயற்றமிழ் போதகாசரியர் ச.வயித்திலிங்க பிள்ளையின் உரை 1881.

13 திருக்குறள் அதிகாரச் சாரமாகிய நன்னெறி தாலாட்டு, யாழ்ப்பாணம் வல்வை வ.ஞா.கணேசபண்டிதர் - 1919.

~~~~~~
~~~~~~

வெளியீடு:
வல்வை வரலாற்று
ஆவணக்காப்பகம்
கனடா
www.vvthistory.com